# அணையாத சுடரேற்றுவேன்

(கவிதைகள்)



வானவில் கே.ரவி

# அணையாத சுடரேற்றுவேன்

**வானவில் கே. ரவி**

புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை,
விருகம்பாக்கம், சென்னை 600 092.
89393 87276 / 89393 87296
**email : nivethithapathippagam1999@gmail.com**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அணையாத சுடரேற்றுவேன் |
| ஆசிரியர் | : | வானவில் கே. ரவி© |
| பொருள் | : | கவிதை |
| முதற் பதிப்பு | : | 2021 |
| அளவு | : | டெம்மி |
| தயாரிப்பு | : | நிவேதிதா பதிப்பகம்<br>10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம்,<br>சென்னை - 600 092.<br>கைபேசி : 89393 87276 / 96 |
| ஒளியச்சு | : | வி. தனலட்சுமி |
| அட்டைப் படம் | : | சக்தி கிரியேட்டர்ஸ் |
| அச்சாக்கம் | : | விஷ்வா பிரிண்ட்ஸ், சென்னை-2. |
| பக்கங்கள் | : | 208 |
| விலை | : | **ரூ. 200** |

| | | |
|---|---|---|
| Title | : | Aniatha sudaretruven |
| Author | : | Vanavil K. Ravi © |
| Subject | : | Poems |
| First Edition | : | 2021 |
| Size | : | Demmy |
| Published by | : | Nivethitha Pathippagam,<br>10/3, Venkatesh Nagar Main Road,<br>Virugambakkam, Chennai - 600 092.<br>Mobile No : 89393 87276 / 96 |
| Typeset by | : | V. Dhanalakshmi |
| Wrapper Desings | : | Shakhi Creators |
| Printed at | : | Viswa Prints, Chennai - 2. |
| Pages | : | 208 |
| Price | : | **Rs. 200** |

# பதிப்புரை

**கவிஞர் வானவில் ரவி**

*பெயருக்கு ஏற்றாற்போல பலவண்ணப் பரிமாணங்களைக் கொண்ட எழுத்தாளர். கவிச்சக்ரவர்த்தி கம்பன், மகாகவி பாரதியார், தெய்வப் புலவர் திருவள்ளுவர் உள்ளிட்ட தமிழின் அனைத்து கொடைகளையும் ஆய்ந்தறிந்து கட்டுரைகள், கவிதைகள் பல வடித்தவர்.*

*அவரது முந்தைய நூலான 'கானல் நீரைக் கடந்து' எனும் நூல் தமிழ் இலக்கிய உலகில் சிறப்பானதோர் இடத்தைப் பிடித்தது.*

*தொடர்ந்து அவரது வாழ்க்கைப் பயணத்தை மையமாகக் கொண்ட 'காற்று வாங்கப் போனேன்', ஆங்கிலத்தில் வெளியான பாடல்களடங்கிய* 'A Spark A Petal...', *'சொன்னதும் சொல்லாததும்' மற்றும் 'மக்கள் பாடும் பாட்டு' என்ற பாடல் தொகுதி ஆகியவற்றைப் பதிப்பித்த பெரும் பேறு நிவேதிதா பதிப்பகத்திற்குக் கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.*

*'அணையாத சுடரேற்றுவேன்' என்கிற இந்த கவிதைத் தொகுதியும் கவிதை ஆர்வலர்களுக்குப் பெருவிருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.*

**தேவகி இராமலிங்கம்**
*நிவேதிதா பதிப்பகம்*

# முன்னுரை

ஒரு படைப்பின் முதல் பக்கத்தில் இருக்கும் முன்னுரை, பெரும்பாலும், அந்தப் படைப்பு முடிந்த பிறகு எழுதப்பட்டதாகத் தான் இருக்கும். இந்த முன்னுரையும் அப்படித்தான்.

முகநூலில் அவ்வப்போது நான் பதிவு செய்த கவிதைகள், இசைப்பாடல்கள் ஆகியவற்றை ஓரளவு திரட்டி நூலாக்கம் செய்ய அச்சகத்துக்கு அனுப்பி வைத்தேன். ஆனால், அவை மிகப் பெரிய நூலாக, 400 பக்கங்களுக்கு மேல் அமையக் கண்டேன். அவற்றைப் பிரித்து, இரண்டு நூல்களாக வெளியிட முடிவு செய்தேன். ஒரு நூலில் கவிதைகள், மற்றொரு நூலில் இசைப்பாடல்கள் என்று நானாக ஒரு வரையறை அமைத்துக் கொண்டேன். ‘கவிதைகள்’ என்று நான் எண்ணிய படைப்புகளின் தொகுப்பே இந்த நூல். இதில் சில இசைப்பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு கவிதையின் அடியிலும் அது உருவான நாட்குறிப்பு அல்லது ஆண்டுக் குறிப்பு தரப்பட்டுள்ளது.

கவிதைக்குத் தலைப்புத் தரும் வழக்கம் எனக்கில்லை. ஒரு வாசகன் கவிதையை எப்படி நுகர வேண்டும் அல்லது புரிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எனக்குக் கிடையாது என்று நினைக்கிறேன். வாசகனுடைய உரிமையில் எவ்விதத்திலும் குறுக்கிட நான் விரும்பவில்லை.

ஆனால், ஒரு கவிதைத் தொகுப்பில் குறிப்பிட்ட ஒரு கவிதையைத் தேடிக் கண்டு பிடிக்க வசதியாகப் பக்கக் குறிப்புடன் நூலுக்குப் பொருளடக்கம் தர வேண்டிய தேவையை

உணர்ந்தேன். எனவே, இந்த நூலில் உள்ள கவிதைகளுக்குத் தற்போது தலைப்புகள் தந்துள்ளேன். பெரும்பாலான கவிதைகளுக்கு அவற்றின் முதல் வரிகளே தலைப்புகளாக அமைந்துவிட்டன. சில கவிதைகளுக்கு மட்டும் உள்ளே இருக்கும் வரிகளில் ஒன்றை நானாகத் தேர்ந்தெடுத்துத் தலைப்பாக அமைத்துவிட்டேன்.

ஒரு கவிதையைப் புரிந்துகொள்ளும் முயற்சிக்கு முடிவே கிடையாது. புரிந்து கொள்ள முயற்சி செய்யும் வரை அது போக்குக் காட்டி, ஓடி, ஒளிந்துகொண்டே இருக்கும். அந்த முயற்சியை கைவிட்டுச் சரணடைந்தால் மட்டுமே அது அனுபவப்படும். கவிதையும், காதல் போலத்தான்! காதலிக்கத் தயாராகி விடுங்கள், கசிந்துருகிக் கண்ணீர் மல்கலாமே!

# உள்ளே...


| | |
|---|---|
| *1. அணையாத சுடரேற்றுவேன்!* | *11* |
| *2. ம்...! கவிதை சொல்* | *12* |
| *3. என் வாழ்வின் மாலை நேரம்* | *13* |
| *4. சொல் மதிப்புக் கவிஞன் (வில்லியம் வர்ட்ஸ் வொர்த்)* | *14* |
| *5. காடெல்லாம் பாட்டுக் கனல் (அந்தாதித் தொடையில் ஐம்பத்தோரு வெண்பாக்கள்)* | *15* |
| *6. பாட்டுத் திறத்தாலே...* | *23* |
| *7. திருப்பாத தரிசனம்* | *25* |
| *8. சகலகலாவல்லி* | *27* |
| *9. அந்த நிழலுக்கென்ன அவசரம்* | *28* |
| *10. ஆண்டுக் கணக்கா, யுகக் கணக்கா?* | *29* |
| *11. யாரிந்த அழகுச் செல்வி* | *30* |
| *12. மண்ணில் விழுந்த மழைத்துளி போல்...* | *32* |
| *13. இப்போதா தோன்றியது?* | *33* |
| *14. வெடித்துப் பிறந்தவள்* | *34* |
| *15. வாசலில் வந்தமர்ந்த வள்ளல்!* | *36* |
| *16. இன்னும் எழுத ஆசை* | *38* |
| *17. புறவழகு* | *39* |
| *18. கவிதைகள் எனக்குப் போதவில்லை* | *40* |
| *19. ஏடேறத்தான் ஏழு நிமிடம்* | *41* |
| *20. பொன்மஞ்சள் பூக்கள்* | *42* |
| *21. வாழ்த்தினால் போதாது, வரவேண்டும்* | *43* |

22. அலைகடலில் சிறுதுளியாய்... 44
23. கடல் தேவதையின் பாடல் 45
24. மதுரை மீனாட்சி உமையே 46
25. சுருக்கத்தால் வள்ளுவரும்... 48
26. புன்மையினால் வீழ்ந்தவர்கள் 49
27. வீரமாம் வீரம் 50
28. ஆறுதல் இல்லை, ஆற்றுப்படை 51
29. நானழைக்க வருவாளா? 53
30. சொல்லிவிடு, அந்தச் சொல்! 54
31. நாமார்க்கும் பகையல்லோம் 55
32. கைகுவித்து வேண்டுகிறேன் 56
33. மாரித்தாய் 57
34. உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு? 58
35. சிறுவெளிச்சம் 60
36. கல்லானாலும் காளி 61
37. புருஷோத்தமன் பதிகம் 62
38. எல்லாம் ஆகும் ஒரு விரிவே! 64
39. தோன்றட்டும் மறுமலர்ச்சி 65
40. விரல் நுனிகளில் தீ! 66
41. நிலவாய் முளைக்கும் மனோன்மணி 67
42. "ஒசிமாண்டியாஸ்" 68
43. இன்னும் எத்தனை அடிகள்? 69
44. தர்மம் எங்கே? 71
45. தேவதை! 72
46. கூட்டில் எது பறவை? 73
47. நடத்துகிறான் நாடகத்தை! 74
48. நாம் நிரம்பி வழிகிறோம் 75
49. நிஜத்துக்கு வேலி இல்லை 77
50. மௌனம் கலைந்துவிடு,
மரண தேவதையே! 79
51. எத்தனை எத்தனை நரேந்திரர்கள்! 81
52. விடுதலை 82

| | | |
|---|---|---|
| 53. | புயலா, புன்சிரிப்பா! | 83 |
| 54. | வெற்றுச் சொற்களா? | 84 |
| 55. | சுவாசிக்க முடியும் வரை...! | 85 |
| 56. | யாரும் நமக்குப் பகையில்லை | 86 |
| 57. | விளக்கேற்றுங்கள் வீதிகளில் | 87 |
| 58. | நான் வைத்த வெடி....! | 89 |
| 59. | இந்த மழை போதுமா? | 90 |
| 60. | நலமெல்லாம் நீயே! | 92 |
| 61. | விடை சொல்லாத மௌனம் | 93 |
| 62. | ஒரு புல்லின் வளைவில்... | 95 |
| 63. | வாள் தருகின்றேன், வாங்கிக் கொள் | 96 |
| 64. | கையூட்டம்மா, கையூட்டு! | 98 |
| 65. | நானொரு சிற்றோடை! | 100 |
| 66. | போரூர் ராணி | 101 |
| 67. | நலம் தருகின்ற அன்னையே! | 102 |
| 68. | வீடென்றேன்... | 103 |
| 69. | ருத்ரா! ஆ, ருத்ரா! | 104 |
| 70. | வெளியை அளக்கும் ஒளியும் நீதான் | 106 |
| 71. | கவிஞர், கவிஞர், கவிஞர்களாம்! | 107 |
| 72. | எதிர்காலம் | 109 |
| 73. | நானும் தமிழன் | 110 |
| 74. | விளக்கும் நீ, இலக்கும் நீயே | 111 |
| 75. | தனித்து நில்! | 113 |
| 76. | கணம்தோறும் கவிதைகள்! | 115 |
| 77. | கள்ளா, நெருஞ்சி முள்ளா? | 116 |
| 78. | பூகம்பம் ஆகட்டும் பாடல்களே | 118 |
| 79. | அவன் சொன்ன சொல்...! | 119 |
| 80. | முற்றுப் புள்ளி எங்கே? | 121 |
| 81. | சமதளத்தில் சந்திக்கலாமே! | 122 |
| 82. | தந்தையாய் நானென்றும் இருந்ததில்லை | 123 |
| 83. | வழித்துணையா, வழிகாட்டியா? | 124 |
| 84. | எத்தனை எத்தனை பாரதியோ! | 126 |

85. ஓரிரு நிமிடங்களே 127
86. தமிழ் கொடுத்துக் கேட்கின்றேன் 128
87. புயலாய் வர வேண்டும் 129
88. பாராட்டத் தேவையில்லை 131
89. அலங்கார அணிவகுப்பா? 132
90. அர்த்தம் என்ன அர்த்தம்? 133
91. சொல், சொல், சொல்! 134
92. விடைகொடுப்பாய் வெண்ணிலாவே 136
93. காதல், காதல், காதல்! 137
94. வேட்டைக்கு வேல் கேட்கிறாய்! 138
95. விளக்கைத் தேடிக் கொண்டிருக்கிறேன் 139
96. பூத்திரியில் ஏற்றி வைத்த கனலே 140
97. மண்ணென்று நினைத்தாயோ மடமகனே! 141
98. பிரதிக்கினைதான் வேண்டும் 142
99. உறங்க விடுவாளா? 143
100. அந்த இன்னொரு கோப்பை! 144
101. திறந்துவை மனக்கதவை 145
102. எங்கள் பாரதி 146
103. வா, சற்று விளையாடலாம் 147
104. இரண்டறக் கலக்கலாமே! 148
105. இன்று நேற்று வந்ததில்லை 150
106. இசை, இனிதென்றா சொல்கின்றாய் 151
107. கருணை நடந்தது! 153
108. கலங்கரை விளக்கு, குருநாதன் 154
109. மாண்டதிங்கே மானிடத் தீர்வு 155
110. அன்னையைப் பாடுவோம் 156
111. ஏகாந்தத்தைப் புரிந்துகொள் 158
112. காத்திருந்தது வானம் 159
113. பின்னால் வந்தது போதும் 161
114. காற்றென்றால் வீச வேண்டும்! 162
115. எதையோ கொளுத்தும் தீ இல்லை! 164
116. நான் படைத்த உலகம்! 165

117. ஒருமுறை செவி கொடு 166
118. இனியும் பொறுமை எதற்கு? 168
119. எங்கிருந்தால் என்ன? 169
120. புதிராகவே இரு! 170
121. கொளுத்திப் போடு குப்பைகளை 172
122. நெஞ்சு கொதிக்கிறது 173
123. எனக்குத் தேவை, ஒரு வாசகன்! 174
124. மின்னற் சுவையும் மெல்லப் புரியும் 175
125. உயிரைப் பறிக்கும் உரிமை 176
126. நடந்து போகலாம் வா! 177
127. படுகுழியில் விழுகின்றோம் 178
128. நீ கடல், நான் புயல்! 180
129. அந்த ரங்க ராட்டினம்! 181
130. நல்லிசைத் தேநீர் 182
131. தலைவணங்காதே, தோழி! 183
132. அத்தனையும் நீ 185
133. வாதாபி காத்திருக்கிறேன் 186
134. காலச் சக்கரம் சுழல்கிறது 188
135. நீ மட்டுமே 189
136. தேடி வருகிறதே கவிதை 190
137. நான் கவிஞன் 191
138. அச்சமில்லை, அச்சமுண்டு! 192
139. சுதந்திரம் 193
140. பாடும் நிலா பாலு 196
141. அந்தக் கிழவர் 197
142. பசி.... 199
143. இடித்துத் தள்ளு 200
144. முத்துதிர்த்துவிடு 201
145. ஒரு வீடு, ஒரு தெரு, ஒரு மனிதன்.... 202
146. நானே ரசிக்கிறேன் 203

## 1. அணையாத சுடரேற்றுவேன்!

அணையாத சுடரேற்றுவேன் - நெஞ்சில்
அலைமோதும் சொற்களை அக்கினியில் தோய்த்துத் - தீக்
கணையாக உருமாற்றுவேன் - இமைக்கும்
கணத்திலிப் பேரண்டம் உருவான மையத்தில்
அணையாத சுடரேற்றுவேன்!

விண்மீன்கள் சிறுதுளிகளாய் - வான
விளிம்புக்கு விரைந்தோடிப் போய்விழுந் தேசிதற
எண்ணற்ற உயிர்க்குலங்கள்- வாழும்
விண்மீன்களாய் என்றும் ஒளிசிந்திக் களிகொள்ள
அணையாத சுடரேற்றுவேன்!

மாயை விரித்த வலையோ - ஜனன
மரணத்தி லேசுழலும் புரியாத மர்மமோ
தீயை உமிழும் சொற்கள் - பட்டுத்
தீப்பற்றி எரியட்டும் சூழ்ச்சிகள் முறியட்டும்
அணையாத சுடரேற்றுவேன்!

சொற்களைத் தோய்தெடுக்கக் - கோடி
சூரியப் பிழம்பொன்று தேடிச் சென்றேன் - அன்று
கற்பிலே கனல்விளைத்த - தெய்வக்
கண்ணகித் தாயிடம் வேண்டி நின்றேன் - இருட்
பட்டினிப் பாழ்க்குகையில் - கிடந்து
பதறுமோர் ஏழையின் கண்ணீர்த் துளியிலொரு
சிட்டிகை எடுத்து வைத்தாள் - அதில்
சீறிப் புறப்படும் தீயில்சொல் தோய்த்தெடுத்(து)
அணையாத சுடரேற்றுவேன் - இந்த
அகிலமெல்லாம் உண்மை ஒளிகூட்டுவேன்!
அனைவர்க்கும் ஒருநீதியே - என்ற
அருளாட்சி மலரநான் அறைகூவியே
அணையாத சுடரேற்றுவேன்!

## உ. ம்...! கவிதை சொல்

சாக்கடை வாழ்வில் படுத்துப் புரளவா
ஆக்கினாய் என்னை தேவி - என்
வாக்கில் இருந்து வந்ததெல்லாம் வெறும்
வார்த்தைகளா கங்காளி
கேட்கக் கேட்க ஆணையிடு - என்னைப்
பாடவிடு கலி சாடவிடு

தூக்குத் தூக்கிகள் ஆகவே இன்னும்
தொடர்வதற்கா இந்த வாழ்க்கை
ஆக்கினை எல்லாம் அப்புறம் வரட்டும்
சீக்கிரம் வையுன் பார்வை
காக்கும் கரங்கள் என்று நம்பிக்
காத்திருக்கின்ற ஏழை
கடுஞ்சொல் சொல்லித் திட்டுவதற்குள்
மாற்றிக் கொள் உன் போக்கை

நேற்று தானே நல்லதோர் வீணை
செய்து கவிதை மீட்டினாய்
புழுதியில் எறிவதற் கில்லையென்று
வசனம் பேசிக் காட்டினாய்
காற்று வாக்கில் கலைந்து போச்சோ
கலையவிட மாட்டேன்
காலம் காலமாய் எரியும் விளக்கை
அணையவிட மாட்டேன்
அணைக்க வேண்டாம் அணைத்துக் கொள்
ஆரம்பிப்போம் - ம்...!
கவிதை சொல்.

*23.05.2016*

## 3. என் வாழ்வின் மாலை நேரம்

என்வாழ்வில் இப்பொழுது மாலை நேரம்
இரவுமிக அருகிலென அறிவேன் நானும்
முன்போல உழைக்கின்ற வலிமை இல்லை
முன்னேறத் துடிக்கின்ற வேகம் இல்லை
என்றாலும் இதயத்தின் மூலை யொன்றில்
எரிந்துகொண் டிருக்குமொரு தீப முண்டு
எப்பொழுதோ எழுதிவைத்த கவிதை எல்லாம்
இங்கொன்றும் அங்கொன்றும் ஒலிப்ப துண்டு

கவிதைகளில் சுகம்காண வில்லை ஆனால்
கவிதைக்கே நானென்று வாழ்கி றேன்என்
தவிப்புகளும் தணல்மூச்சுக் காற்றும் ஓய்வு
தரமறுக்கும் சிந்தனையின் ஊற்றும் நின்று
செவிசாய்க்க மாட்டாமல் அலைபாய் கின்ற
சின்னசின்ன ஆசைகளும் சிக்கிக் கொண்ட
புவிவாழ்வின் புதிரவிழ்த்துப் புரிந்து கொள்ளப்
புதுப்பார்வை வழங்குவது கவிதை யன்றோ

எனக்காக ஒருகவிதை உனக்கும் ஒன்று
இலேசாக ஒருகவிதை கனக்கும் ஒன்று
மனவாசல் திறக்கின்ற சாவி யொன்று
மதகுடைத்துப் பாய்கின்ற வெள்ளம் ஒன்று
தினம்தோறும் வரும்போகும் சிலையு மாகும்
சிரிக்கும்பின் சிறகடித்துப் பறக்கும் விம்மும்
மனம்தோறும் சென்றுமலர் தூவும் என்னை
மதிக்காமல் ஏதேதோ மாயம் செய்யும்

அதைக்காவல் வைத்துநான் அயர்ந்து விட்டால்
அரைநொடியில் என்னையே விழுங்கப் பார்க்கும்
அதைக்கொஞ்ச முற்பட்டால் விலகிச் செல்லும்
அப்புறமாய் வந்தென்னை அணைத்துக் கொள்ளும்
எதையுமே செய்யவிடா தென்னை வாட்டி
எப்பொழுதோ ஓரிரண்டு கவளம் ஊட்டி
வதைக்கின்ற கவிதையுடன் வாழ்கி றேனே
மானுடனாய்ப் பிறந்தபயன் வேறுண் டோசொல்

*12.05.2016*

## 4. சொல் மதிப்புக் கவிஞன்

**(வில்லியம் வர்ட்ஸ் வொர்த்)**

(1970 ஆம் ஆண்டு, வொர்ட்ஸ்வொர்த்தின் 200 ஆவது ஆண்டு நினைவைப் போற்றி என் நண்பர்கள் பலருடன் சேர்ந்து நான் நடத்திவந்த சிந்தனைக் கோட்டம் என்ற அமைப்பு விழா எடுத்தது. எனக்கு வயது 17 அப்போது. அந்த விழாவில் நான் படித்த கவிதை இது)

புலமைக் குன்றேறிப் பூரிக்கும் இயற்கையதன்
வளமைச் செழிப்பினிலே வைத்திழந்த நெஞ்சினனே
இயற்கை எழிலில் இறைவன் திருவுருவின்
நயம்தோன்றக் கண்டவனே நற்சிந்தைப் பாவலனே
ஆங்கிலத்தில் தன்னேரும் அற்றதொரு மாகவியே
பூங்குமுதப் பொற்றமிழிற் பொங்கும் புலமைக்கோ
பாரதியை ஒத்தவனே பார்போற்றும் வித்தகனே
ஓரத்தில் நின்றே மைய ஒளிப்பொருளாய்
உன்னை உணர்ந்தவனே ஒப்பில்லா உத்தமனே
சொன்ன கவிதையெலாம் சொட்டும் சுவையமுதே
இன்னுமுன் ஏற்றத்தை என்னென்று சாற்றிடுவேன்
சொன்னவையும் சொற்பமடா சொர்க்கக் கவித்திருவே
நாலைம்ப தாண்டுகளுன் நாவை அழிக்கவிலை
காலைக் கதிரவன்போல் என்றும் கவியுலகில்
மாறாப் புதுமையுடன் மாண்பொளியே வீசிடுவாய்
சீரார் தமிழ்மொழியின் சின்னஞ் சிறுகவிஞன்
உன்னை வணங்குகிறேன் உண்மைத் திருவிளக்கே
என்னை அருள்செய்வாய் இன்று

*1970*

## 5. காடெல்லாம் பாட்டுக் கனல்

**(அந்தாதித் தொடையில் ஐம்பத்தோரு வெண்பாக்கள்)**

(1986 ஆம் ஆண்டு; மந்தைவெளியில் இருந்த என் இல்லத்தில் எப்பொழுதும்போல் நண்பர் கும்பல். எங்கள் குருநாதர் டாக்டர் நித்யானந்தம் சொன்னபடி அன்று மாலை சுகி சிவத்துக்கு மாத்ருகா மந்திரத்தை டாக்டர் சார்பாக உபதேசம் செய்து விட்டு, இரவு நெடுநேரம் நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தேன். நண்பர்கள் ஒவ்வொருவராக உறங்கி விட்ட பின்னும் நான் உறங்கவில்லை. மனம் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. சுமார் பன்னிரண்டு மணியிருக்கும், நள்ளிரவு. என் முணுமுணுப்பின் சத்தம் அதிகரித்து விட்டது போலும். ஏனென்றால், அடுத்த அறையில் படுத்திருந்த சிவம் 'தூங்க விடுப்பா' என்று அங்கலாய்த்துக் கொண்டான். 'விளக்கை அணை' என்று சுப்பு கத்தினான். சற்று நேரத்தில் அவனே எழுந்து விளக்கையும் அணைத்து விட்டான். என் முணுமுணுப்பின் பரபரப்பு அதிகரித்தது. சத்தமாகச் சொன்னேன்:

*"தும்மட்டிக் காயுள்ளே தூவானம் விட்டதனால்*
*மம்மட்டி யில்மண் மணக்கிறது - கும்மிருட்டில்*
*கோடிமலர் பூத்திருக்கக் கண்கள் குருடாகி*
*வாடிச் சிலைத்த மனம்"*

அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டேன், நான் வெண்பாக்களாகவே முணுமுணுத்துக் கொண்டிருந்ததை. அப்பொழுது எழுதிய 51 வெண்பாக்கள் அந்தாதித் தொடையில், குருவணக்கமாக அமைந்திருந்தன. ஒருமுறை இதை அப்படியே எழுத்தாளர் நா.ராமச்சந்திரன் இல்லத்தில் நடந்த பாரதி கலைக் கழகத்தில் படித்தேன். சுமார் 50 கவிஞர்கள் அமைதியாக அமர்ந்து கேட்டனர். படித்து முடித்ததும் கவிஞர் நா.சீ.வரதராஜன். எழுந்து, 'கைதட்ட வேண்டாம். அது இந்தக் கவிதையைக் கொச்சைப் படுத்திவிடும். எல்லாரும் எழுந்து நின்று மௌனமாக இந்தக் கவிதையின் நாயகனான குருநாதனை மானசீகமாக வணங்குவோம்' என்று சொன்னார். அந்த அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று குருவணக்கம் செய்ததை இன்றும் நினைத்து நெகிழ்கிறேன்.)

*ஓடெடுத்து வந்தவனை ஓடாக்கி வைத்துள்ளே*
*வீடெடுத்து நின்ற விமலனவன் - ஏடெடுத்துப்*
*பாடென்றான் சிந்தை பரிமளித்தான் என்நெஞ்சக்*
*காடெல்லாம் பாட்டுக் கனல்.* *(1)*

கனலூதி ஊதிக் கனிவான ஆவி
புனலாக வீழும் பொழுது - மணலாய்
எதிர்கொண் டழைத்தென்னை ஏந்தியவன் மார்பில்
நதியான தென்ன நயம். (2)

நயம்தான் மனது வசப்பட்டால் நாத
லயம்தான்ஆ னந்த லஹரி - குயவனவன்
மண்ணைச் சுடுவது மண்பானை ஆவதற்கே
எண்ணத்தி லும்நெருப்பை ஏற்று. (3)

ஏற்றுக்கொண் டால்தென்றல் ஏந்திக்கொண் டால்தீபம்
கூற்றைக் குலைக்கும் தவம்மூச்சுக் - காற்றிடையே
ஊற்றெடுக் கின்ற உயிரமுதம் உள்ளுணர்வின்
ஆற்றாமைக் கேற்ற அரண். (4)

அரண்மனை வாசல் திறந்த(து) அமைதி
சரவிளக் காய்வர வேற்கத் - தருமம்
அருகில் அழைக்க அடியெடுத்து வைத்தேன்
கருவம் அழித்த கனவு. (5)

கனவுகன வென்று கதைசொன்ன தெல்லாம்
நினைவுத் திரையில் நிகழ - மனது
சுனையாகக் கண்கள் சுமையாக இன்னும்
புனையாத வேடம் புகல் (6)

புகலவனே புன்மையிருள் போயகல வந்த
பகலவனே வட்டப் பரிதி - தகதகக்கும்
வானம் அவனே வளிசுழற்சி யும்மவனே
ஞானத்துக் கென்ன நடிப்பு. (7)

ஞானத்துக் கென்ன நடிப்பு கறிசுமக்கும்
ஏனத்துக் கேது பசியென்னுள் - மோனம்
குடைய விரிந்தகுடை கள்ளப் புலன்கள்
மிடைந்தபாய் இல்லையிந்த மெய். (8)

மெய்ஞானம் என்றைக்கு மேவுமிந்த மெய்யுள்ளே
பைந்நாகம் என்று படமெடுக்கும் - தெய்வங்க
ளின்தாகம் என்றைக்குத் தீரும் குருவருளால்
என்புருகிப் போவதென் றோ. (9)

என்றோ உடைந்தகரு மேகத்தின் ஓசையினை
இன்றைக்கும் கேட்க இசைப்பவன் - அன்றைக்கே
கண்டு முடியாத காட்சியெலாம் கண்விளிம்பில்
கொண்டுவந் தானென் குரு. *(10)*

குருநாதன் அந்தக் குறுமுனியின் பேரன்
அருகோடி வந்த அமரன் - சருகாய்க்
கிடந்தவனை வெண்ணிலவுக் கீற்றாய் அணிந்தான்
விடமுண்ட கண்டனென வே. *(11)*

வேய்ங்குழலுக் குள்நான்கு வேதம் உயிர்த்ததென
மேய்கறவைக் கூட்டம் மிரண்டுவர - ஆயர்கோன்
லீலையெல்லாம் உள்ளுணர்வி லேநிகழ வைத்தான்விண்
போலவிரிந் தேன்நானப் போது. *(12)*

போது மலராகிப் புன்னகைக்கும் வானமிதழ்
மீது பனித்து மெருகூட்டும் - நாதனென்
சிந்தை மலர்வித்துத் தேனமுதம் பெய்துள்ளே
வந்தமர்ந் தானமர வாழ்வு. *(13)*

வாழ்கையொரு சின்ன வடிகால் புரியாத
போக்கில் அலையும் புலன்களுடன் - யாக்கை
மனமென்று மாயச் சகடம் உருட்டிக்
கனவென்று கண்மலரு மாம். *(14)*

ஆம்கனவு தானென் றறிந்துகொண்டேன் ஆனாலும்
நீநான் எனவே நிலைகுலைந்தேன் - நானான
துண்மை உருவின்மை உன்மத்தம் ஆனஉயிர்க்
கண்மையிங் கானந்த மே. *(15)*

ஆனந்தம் என்குரு அன்பு ததும்புமொளி
வானந்தப் பிள்ளை மனமொரு - ஞானத்
திகிரியாய் வந்து திசைகள் அமைத்துப்
பகிர்ந்துகொண் டான்தனையென்பால். *(16)*

பால்மணக் கும்நெஞ்சு நூல்மணக் கும்சிந்தை
வேல்விடுக் கும்விழிகள் வேதாந்த - ஆலமரம்
கீழமர்ந் தேமௌன கீதை உரைத்தவனா
ஏழைக் கிரங்கிவந் தான். *(17)*

வந்ததொரு ஜோதி வளையம் சுடராகி
நின்றதொரு தூய்மை நிலையமதைக் - கண்டவுடன்
வெந்து மடிந்து விழுந்த மனத்துக்குச்
சொந்தங்கள் எங்குண்டு சொல். *(18)*

சொல்லூற வைத்துச் சுவைகவிதை ஆக்கியென்
உள்ளூற நிற்கும் அனலூற்றை - மெல்லக்
கிளறிவிட் டான்கிளர்ந்த கீதப் புனலில்
முளறியென வந்தான் முளைத்து. *(19)*

முளைத்த நிலவில் முயல்போல் தெரியும்
வளைந்தமனத் தின்சலன மாயம் - கலைத்துக்
களையெடுக்க வந்தான் கடவுளென நின்றான்
தளையுடைய வைத்த தவம். *(20)*

தவமென்றால் தாகம் தணிக்கும் தனிமை
தவமென்றால் ஞானத் தழலென் - பவவினையைச்
சுட்டுப் பொசுக்கும் சுடரொளி அன்புக்கே
கட்டுப் படும்சூறைக் காற்று. *(21)*

காற்று வெளியுண்டு காணும் அகத்துள்ளும்
காற்று வழியுண்டு காவலுக்கு - மாற்றி
நடக்கும் இருகலைகள் இந்த நதியில்
படகுவிட் டென்ன பயன். *(22)*

பயனில்லை என்றால் பயமில்லை வெற்று
முயற்சியில் லைமுடிவும் இல்லை - உயரே
எறிந்தபந் தாய்க்கீழ் விழுந்து மடிந்தால்
குறையில்லை குற்றமில் லை. *(23)*

ஐந்து தலைப்பாம் பதன்மேல் உலகமொரு
நைந்த திரைக்குப்பின் நாடகம் - பந்தங்கள்
விந்தையிலும் விந்தை வியக்கும் மனமென்ற
மொந்தைக்கள் பானையிதை மூடு. *(24)*

மூடுமந்த்ரம் ஏதுமிலை முன்பே நிகழ்ந்ததுதான்
கூடுவிட்டுப் போகும் குளவிமண் - தேடுவதும்
முட்டைக்குள் சென்றுபின் முந்நூறு நாள்கழிந்து
வட்டி யுடன்வருவ தும். *(25)*

தும்மட்டிக் காயுள்ளே தூவானம் விட்டதனால்
மம்மட்டி யில்மண் மணக்கிறது - கும்மிருட்டில்
கோடிமலர் பூத்திருக்கக் கண்கள் குருடாகி
வாடிச் சிலைத்த மனம். *(26)*

மனத்தை மறைத்தது மாமத யானை
மனத்தில் நுழைந்து மறைந்து - மனக்குளத்தைத்
தானே தகர்த்தெங்கும் தானாகி நின்றதொரு
மோனத் துயிர்த்த முகம். *(27)*

முகமின்றி வந்ததொரு மின்னல் எனக்குள்
புகுந்தென்னை ஆக்கியது பூவாய் - அகமகிழும்
போதந்தப் பூவே புதுவெள்ளம் ஆயிற்(று)ஐம்
பூதங்கள் உள்ளும் புகுந்து. *(28)*

புகுந்ததார் என்னைப் புரந்ததார் உள்ளே
மிகுந்ததார் உள்ளம் மிதித்து - முகுந்தனுக்கும்
ஸ்ரீராம னுக்கும் ஜெபமாலை தந்தவன்
சீரடியின் தெய்வச் சுடர். *(29)*

சுடராகி நெஞ்சு சுடும்கே டனைத்தும்
அடியோ டழிக்கும் அமுதம் - முடிசூட
வைத்தமுனி வன்ஞான வாசிட்டம் சொல்லியெனைச்
சித்தலோ கம்செலுத்தி னான். *(30)*

நான்மாடக் கூடலிலே நச்சரவு சீறிவரக்
காண்பார்க் கெலாம்விஷக் காற்றுதர - வான்மார்க்க
மாகப் பருந்தொன்று வேகத் துடன்வந்து
நாகத்தைக் கொன்றதொரு நாள். *(31)*

நாளென்ன செய்யுமெனைக் கோளென்ன செய்யுமவன்
தாள்சேர்ந்த பின்னர் தடையேது - சூல்கொண்ட
மேகத்துக் குள்சென்று மெல்லப் பிளந்துமண்
தாகம் தணிப்பதவன் தான். *(32)*

தானே பலவாய்த் தருக்குற்று நின்றாலும்
தானொன்றே என்று தனையறிந்தும் - தானென்ற
சேதார மற்றுத் திகழுமொரு பாழ்வெளியே
ஆதாரம் என்ப தறி. *(33)*

அறிவைச் சுடுநெருப்பை அள்ளியிடு வான
விரிவில் விரவி விடுகண் - புரிகின்ற
மாயத்தை எல்லாம் மலடாக்(கு) உருவற்ற
நேயமன் றோநீ நிஜம். *(34)*

நிஜமே நிழல்தான் நிழலும் நிஜம்தான்
நிஜத்துக் கவாவும் நினைவே - நிஜத்தின்
கனவாய் விரிந்தயுகக் கானலிடை மாய
மனத்தேர் செலுத்தும் மயல். *(35)*

மயலுக்கு வேண்டும் மருந்து நினைவுப்
புயலுக்குள் சென்று புகுந்து - வியனுலக
மாயம் துடைக்கின்ற மார்க்கமெது சற்றுந்தன்
ந்யாயப் புலம்பல் நிறுத்து. *(36)*

நிறுத்தி அளந்தநெற் கூடும் ஒருநாள்
பருத்திக்கா டாகிவிடும் பாவ - மருத்துவன்
வந்தெரிக்க வெந்துவிழும் வாசலிலே மாயமனம்
அந்தகனைக் கூவி யழும். *(37)*

அழுதென்ன லாபம் அடுத்த கணமே
விழுந்துவிடும் மீண்டும் வினையில் - சுழுமுனையில்
தேரோட்டி வந்ததொரு தென்றலொளி ஆனதுமே
வேறில்லை வெட்ட வெளி. *(38)*

வெளியே ஒளியை விழுங்கி வளர்ந்து
களியில் கனிந்து கனன்று - தெளியும்
வெளிச்சத்தில் ஏது விகற்பங்கள் அந்த
ஒளிச்சத்தில் அன்றோ உயிர். *(39)*

உயிரை ஒளியாக்கி ஊடுருவிச் சென்றால்
மயலில்லை மாயையில் லைபின் - அயலென்று

சுட்டிக்காட் டிப்பேச ஏதுமிலை சூனியமாம்
பொட்டலுக் கேது புறம். (40)

புறத்தே புதுப்பானை உள்ளே புகுந்தால்
மரத்துவிடும் போல்குளிர் வாட்டும் - சிரமின்றி
எங்கும் பரவுமோர் ஏகாந்த வித்தையிலே
பொங்கிப் புனலாகிப் போ. (41)

போன சுவடும்முன் பூண்ட உடையும்விண்
ஆண்ட கதையுமென் ஆச்சுமண் - தோண்டவரும்
ஊற்றுநீ ராயுணர்வு ஓட உலைநுழைந்த
காற்றைப்போ லேகனவு காண். (42)

காண்பதெல் லாம்சூழ்ச்சி கண்களும்தான் காலத்தில்
மாண்டதெல் லாம்மாயை காலமும்தான் - ஆண்டியவன்
போட்டுடைக்கும் தோண்டியிலே பொன்னிருக்கும் மண்ணிருக்கும்
கூட்டுக்குள் ஆடுகிறான் கூத்து. (43)

கூத்தாடி யேயிங்குக் கூற்றாவ தாலுயிர்க்
காத்தாடி நூல்முனையைக் கைப்பிடித்துச் - சோத்துக்
கருவூலம் ஒன்றிங்குக் கட்டுவதேன் சித்தத்
தெருவோரம் போய்விழுந் தேன். (44)

தேன்கூடு கட்டுவது தேனுக்கா ஈக்களுக்கா
ஊன்மேடை என்ன உழல்வதற்கா - வான்பார்த்த
பூமி பிளந்து புதுப்பாதை காட்டியது
கேணிக்குள் ஊற்றுக் கிளர்ந்து. (45)

கிளர்ந்தாலும் நெஞ்சு கிளைத்தாலும் அன்பு
மலர்வீசு வானந்த மாயன் - வளைந்ததொரு
கோட்டுக்குள் ளேவட்டம் போட்டுவைப் பான்திட்டம்
ஆட்டுவிப் பான்ஆடு வான். (46)

வான்பரிதி யின்னொளியில் தானொளியும் மீன்களெனத்
தான்ஒளிரும் போது தளையவிழும் - ஆன்மாவே
ஞானப்பா லுக்கழுதால் நாடிவரத் தாயுண்டோ
ஏனப்பா இன்னும் எதற்கு. (47)

எதற்கிந்த ஏமாற்று வேடமொரு கள்ளிப்

புதருக்குப் போயென்ன பூட்டு - நிதமும்
மழுங்கியது ஜீவனதில் கால மரத்தின்
விழுதுகளும் வேரூன்ற வே. *(48)*

வேரில் கரந்தை வெளியிலவன் தூதுவளை
நாரில் மலர்ந்த நறுமுல்லை - யாரிவனென்
றெண்ண முடியாதவன் ஏசுநபி சாயிவள்ளல்
அண்ணல் வடிவெடுத்த தார். *(49)*

ஆர்கலியி லாமலர்ந்த தம்புலி மானிடனின்
வேர்வையிலா வந்ததிந்த மேதினி - பார்வையினால்
என்னைக் கலிதீர்த்த என்னிறைவன் வந்ததிங்(கு)
என்தவத்தி னாலென்ப தா. *(50)*

தானாகி நின்றதொரு தற்பரமே என்னையொளி
வானாகச் செய்த மணிச்சுடரே - ஊனெடுக்கும்
ஒவ்வோர் உயிருக்கும் உன்பாதை காட்டுவதே
தெய்வப் பணியென்ப தே *(51)*

*1986*

## 6. பாட்டுத் திறத்தாலே...

பசித்த வயிற்றுக் குணவு கொடுக்கப்
பாட்டுத் திறத்தால் முடியாது
பசியை மறந்து பறந்து செல்லச்
சிறகுதர முடியும்
சிறகா உணவா சீக்கிரம்சொல் - பிறகு
இரண்டும் இன்றி ஏமாந்து விடாதே

உனக்கென் றியற்கை வகுத்த உணவு
களவு போனது போகட்டும்
திருட்டுக் கூட்டம் சிரித்து மகிழ்ந்து
உலகத் தையே ஆளட்டும்
அடங்கிப்போ நீ சாகும்வரை
முடங்கிக் கிட என்று சொல்லிக்
கனவுப் போர்வை தருவதற்கா
கவிதை எழுதுகிறேன் - துயில்
கலையச் சொல்லி வேண்டுகிறேன் - உன்
துணிச்ச லைநான் தூண்டுகிறேன்
கனவை உதறித் தள்ளிவிடு
துணிச்சலைநீ கையிலெடு

உன்
அடுப்பு நெருப்பின்றி அவிந்து கிடந்தாலும்
உள்ளக் கனலை ஊதி வளர்க்கிறேன்
அந்தக் கனலை அள்ளிக் கொண்டு
நிமிர்ந்துநட
அந்தக் கனலை அள்ளிப் பருகி
எழுந்துபற
பஞ்சம் என்ற பழைய பொய்யை
நம்பி விடாதே
வஞ்சம் இழைக்கும் மனிதர்க்கெல்லாம்
வணக்கம் சொல்லாதே

நெஞ்சுரத்தை நேர்மை செய்து
நிமிர்ந்துநில்
நீலவானம் உனது சொந்தம்
பறந்துசெல்
தட்டிக் கொண்டே - கதவைத்
தட்டிக் கொண்டே தாமதிக்காதே
எட்டியுதை - இதோ
சூழும் இருட்டைச் சுட்டுப் பொசுக்க
நெருப்புவிதை

*(23-12-2001)*

## 7. திருப்பாத தரிசனம்

விண்ணின் சுடரொளியை - மணி
மகுடம் மறைந்திருக்கக்
கண்ணின் சுடரொளியைத் - திரு
மண்ணும் மறைத்திருக்கச்
சின்னஞ் சிறுவனிவன் - ஒளி
தேடிச் சரணடையப்
பண்ணும் சுடரொளியாய்த் - திருப்
பாதம் தெரியவைப்பாய்

வங்கி அணிகலன்கள் - எழில்
வடிவை மறைத்திருக்கப்
பங்கில் இருமகளிர் - சரி
பாதி மறைத்திருக்கச்
சங்கொடு சக்கரமும் - தடந்
தோள்கள் மறைத்திருக்க
இங்கிச் சிறுவனுக்குன் - மலர்ப்
பாதம் தெரியவைப்பாய்

ஓயா தலையெழுப்பும் - மன
ஊழிக் கனலிடையே
பேயாய் அலைந்துழலும் - ஒரு
பித்தம் தெளிவுறுமோ
நீயாய் மனதுவைத்தால் - அது
நிகழத் தடையுளதோ
மாயா மலமகல - மலர்ப்
பாதம் தெரியவைப்பாய்

ஜென்மத் தொடர்கதையின் - வசம்
சிக்கித் தவித்தபடி
உன்மத்த னாய்த்திரியும் - நிலை
மாறி ஒளியெழுமோ
கன்மச் சுமையகற்றி - வழி
காட்ட இறைஞ்சுகிறேன்
உன்பத்ம பாதமலர் - விழி
யுள்ளே விரியவைப்பாய்

ஆணவம் கண்மறைக்கப் - பே
ராசைகள் பொய்வளர்க்க
வானமும் பூமியுமாய் - மெய்
வாசல் அடைத்திருக்கக்
காண முடியவில்லை - நான்
கதறி யழுகின்றேன்
ஊனம் அகற்றியுள்ளே - உன்
பாதம் ஒளிரவைப்பாய்

*20.12.2007*

## 8. சகலகலாவல்லி

மாசகல உயிர்ப்பூவின் மடலவிழ ஆசைகளின்
தூசகல தூயவொளி சூழவொரு புதுத்தென்றல்
வீசகல கலவென்று கவித்துளிகள் தெறித்துவிழ
வே - சகல கலாவல்லி வீணையிசை மேவுகவே

காசகலப் பொட்டோடு களிதுலங்கும் இருவிழிகள்
தேசகல மாட்டாத புன்முறுவல் தினம்காட்டி
வாசகல கலாவல்லி வாசமக லாஅல்லி
நீசகல சௌபாக்யம் நிதமருள வேண்டுகிறேன்

ஆசுகவி யாஅண்ட சராசரங்கள் அத்தனையும்
பேசுகவி யாபிள்ளைத் தமிழ்க்கவியா உயிர்ச்சுனையி
லேசுகவி நோதங்கள் நிகழவைக்கும் கவியாயென்
நாசுகவீ ணைதடவும் நாமகளுன் பூங்கரமே

சொல்லும்சொல் ஒவ்வொன்றும் சுடராகச் சூரியனை
வெல்லும்சொல் லாகவுன்றன் விரல்மீட்டும் இசையையுட்
கொள்ளும்சொல் லாகவொரு கோடிச்சொல் லாகஎடுத்
தள்ளியிறைத் தேயுன்னை அர்ச்சிப்பேன் கலைமகளே

நீசிரித்தால் நெஞ்சத்தில் பூமழையே நீயமரும்
பூசிரித்தால் புவியெங்கும் தேன்மழையே நானறிவி
லேசிறியன் ஆனாலும் வாசியிலே த்யானப்பே
ராசிரியை நீயென்று தெளிவுற்றேன் உன்னருளே.

*2011 - 12*

## 9. அந்த நிழலுக்கென்ன அவசரம்

அந்த
நிழலுக் கென்ன அவசரம் - தன்
மூலப் பொருளைத் தாண்டிச் செல்ல
முனைகிறதே - அந்த
நிழலுக் கென்ன அவசரம்

சொந்தக் காலில் நிற்காமல் - ஒளி
தந்த வடிவம் தளரத் தளர
விரைந்து செல்கிறதே

அந்த
நிழலுக் கென்ன அவசரம்

மூலத் துக்குள் முடங்கிக் கொள்ளும்
நேரம் வந்து விட்டது போல்
கால மென்ற நிலப் பரப்பின்
விளிம்பைச் சென்று தொட்டது போல்
நீல வண்ணம் கரைந்து போக
மேகத் தில்மை யிட்டது போல்
ஓல மெழுப்பும் காற்று கூட
ஓய்ந்தி ருக்கும் வேளையிலே

அந்த
நிழலுக் கென்ன அவசரம்

எங்கோ ஒருகுயில் நீட்டி முழக்க
எல்லாம் ஒன்றிக் கலந்தன
இரவும் பகலும் மாறி மாறி
இதயத் துக்குள் புகுந்தன
நிழலைப் போல நானும்
ஒளியைப் போல வானும் - அட
இந்த உறவில் என்ன பரவசம்
அந்த
நிழலுக் கென்ன அவசரம்

*17.03.2013*

## 10. ஆண்டுக் கணக்கா, யுகக் கணக்கா?

ஆண்டுக் கணக்கா யுகக்கணக்கா
தோண்டத் தோண்ட வளர்கிறதே

வானும் புவியும் பிரிந்த போது
நானும் நீயும் பனியும் தீயும்
கடல்பிரிந்து கலைந்த போது
நீயும் நானும் நீரும் நிலமும்
பாரி வள்ளல் ஏறி வந்த
தேரே - உன்மேல் படர்ந்தி ருந்த
முல்லைக் கொடியை மறந்து விட்டாயா?
மரப்பொந் தாய்நான் - நீயோ - காட்டை எரிக்கும்
அக்கினிக் குஞ்சாய் அமர்ந்தி ருந்தாய்
அள்ளி எடுத்துனை அப்படி யேயென்
மனத்துக் குள்ளே வைத்தா னேயவன்
மறக்க முடியுமா

பிரிந்துவிட் டோமே
யார்பிரித் தார்கள் ஏன்பிரிந் தோம்நாம் - ஓ
மானிட இருட்டின் மாயா ஜாலம்
விடியத் தானே போகிறது
வெளிச்சம் வந்து விட்டால்
உலகத் துக்கே தெரிந்துவிடும்
நீதான் எந்தன் நிழல் என்று!

*(2014 அக்டோபர், "வல்லமை"*
*மின்னிதழில் வெளியானது)*

## 11. யாரிந்த அழகுச் செல்வி

யாரிந்த அழகுச் செல்வி யாழெடுத் தமர்ந்து கொண்ட
வாறெந்தென் உள்ள மெங்கும் ஆனந்த லஹரி யாய்த்தேன்
மாரிபெய் தந்தத் தேனில் மலர்ந்ததோர் வண்ணப் பூவாய்
மாறியப் பூவில் மொய்க்கும் வண்டுமாய் ஆன தென்னே (1)

பொன்வண்டுச் சிறகின் ஓசை பூந்தென்றல் காற்றின் ஓசை
மின்னலே வீணை யாக மீட்டும்கை விரல்கள் ஓசை
புன்னகை ஓசை நெஞ்சில் புரள்கின்ற அலைகள் ஓசை
என்னென்ன ஓசை அம்மா எழில்கொஞ்ச நடக்கி றாளே (2)

ஓசையைச் சொல்லப் பாடல் ஒருநூறு வேண்டும் நெஞ்சின்
ஆசையைச் சொல்ல வோபல் லாயிரம் வேண்டும் காற்று
வீசவும் அந்த வீச்சில் சருகுகள் சரச ரத்துப்
பேசவும் கவிதை யொன்று பேசாமல் மலர்ந்த தாமே (3)

கவிதையின் நடனத் தைக்கண் கொட்டாமல் பார்த்தி ருக்கும்
புவியெனும் குழந்தை யாகிக் குழந்தையை மடியி ருத்தும்
தவிசாகித் தாயும் ஆகி தாய்மையின் ஊற்றும் ஆகிச்
செவியாகிச் சிந்தை யாகிச் சிலிர்க்கின்ற சிலையா னாளே (4)

சிலையென்றா சொல்லி விட்டேன் சிலையிலே சிறக சைக்கும்
கலையாகி உளியு மாகிக் கலையிலே பின்னி வைத்த
வலையாகி என்ம னத்தை வானமாய் விழுங்கு கின்ற
உலைநெருப் பில்சி ரிக்கும் ஊர்த்துவ ஜ்வாலை யன்றோ (5)

சிரிப்பிலே சிந்து கன்னக் கதுப்பிலே விருத்தம் பார்வைத்
தெறிப்பிலே வஞ்சி என்னைச் சேர்த்தணைக் கின்ற அன்பு
நெறிப்பிலே அகவல் எந்தன் நெஞ்சிலே வெண்பா காட்சி
விரிப்பிலே கலித்து றையென் நெற்றியில் வெற்றிப் பொட்டே (6)

கலியினைப் பிளந்து சாடக் கைகளா யிரமா வேண்டும்
கலியாணக் கோலங் காட்டிக் கண்ஜாடை செய்தால் போதும்
நலியாத நெஞ்சுக் குள்ளே நம்பிக்கைச் சுடரை ஏற்றும்
மெலிதான புன்ன கைப்பூ அதுபோதும் அதுவே போதும் (7)

புன்னகை யாலே இந்தப் புவியெலாம் நின்று காக்கும்
அன்னையை வணங்கு கின்றேன் அன்பிலே ஒடுங்கு கின்றேன்
சொன்னசொல் பலிக்கச் சொர்ண பிம்பமாய் ஜொலிக்கச் சொன்ன
வண்ணமே வெற்றி சேர்க்க வருமலர்ப் பதங்கள் போற்றி *(8)*

வெற்றியாய் வேலெ றிந்து விண்ணவர் தம்மைக் காத்த
பெற்றியைப் பெற்றெ டுத்த பெண்மையாய் உண்மைத் தீயாய்ச்
சுற்றிலும் உள்ள சூழ்ச்சித் திரைகளை அகற்றி எந்தன்
நெற்றியில் திலக மாகி வளர்கின்ற முழுநி லாவாம் *(9)*

திலகவா ணுதலாம் திங்கள் உதிக்கின்ற உச்சி யாமிவ்
வுலகவாழ் வினையும் தூய ஒளிதந்து துலங்கச் செய்யும்
மலர்மகள் கலைம கள்மா மலைமகள் மூன்று மாகி
விளங்கிடும் மாதா வாம்ஸ்ரீ வித்யாவை வணங்கு கின்றேன் *(10)*

*01-10-2014*

## 12. மண்ணில் விழுந்த மழைத்துளி போல்...

மண்ணில் விழுந்த மழைத்துளி போலென்
கண்ணில் விழுந்து நெஞ்சில் நுழைந்து
பண்ணில் எழுந்து பரவசம் ஆனாய்
எண்ணத் தொலையா இன்பக் கனவில்
என்னை மூழ்க வைத்தாய் இன்னும்
என்னோ டிருந்து என்னோ டிழைந்து
எத்தனைப் பாடல் வடித்துத் தந்தாய்
அத்தனைக் குள்ளும் அன்பே சுருதி
அத்தனைக்கும் நடுவில் நீ அமைதி
அன்று போல்தான் இன்றும் என்றும்
காதல் என்ற கண்ணியத்தை
காதல் என்ற தென்றல் காற்றை
காதல் என்ற உயிர்தீபத்தைக்
காட்டி விட்ட பேரொளி நீதான்
வாழ்த்துச் சொல்லும் தொலைவில் இல்லை
வாழ்ந்து பார்க்க வார்த்தை எதற்கோ

*14.02.2015*

## 13. இப்போதா தோன்றியது?

("இப்போது தோன்றியது" என்ற அறிமுக வாசகத்துடன் முகநூலில் நண்பன் இசைக்கவி ரமணன் பதிவு செய்திருந்த அருமையானதோர் கவிதையை இன்று நான் படித்ததும் எனக்குத் தோன்றிய கவிதை, அதுவும் எப்போதோ, எந்த யுகத்திலோ தோன்றிய கவிதைதான். அதை இங்கே பதிவு செய்கிறேன்)

"இப்போதா தோன்றியது இல்லை இல்லை
எப்போதோ தோன்றியது வித்துதிர்த்துத்
தப்பாமல் ஊன்றியது தனிமையில்நீ
தடுக்கிவிழும் வேளையிலே தாங்கிக் கொள்ளும்
கொப்பாக மாறியது குளிரெடுத்துக்
கொட்டுகிற மழையாகப் புவிநனைத்துக்
கொட்டமடிக் கின்றபுயல் அதுதான் சின்ன
சிப்பியிலே முத்தாக முளைத்துப் பாட்டுச்
சிறகடித்துப் பறக்கிறது தீண்டிப் பாரேன்!"

*28.02.2015*

## 14. வெடித்துப் பிறந்தவள்

(நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் பல உயிர்களை பலிவாங்கியது. அப்போது எழுதியது.)

எங்கும் பரவசம் எல்லாம் அதிசயம்
தங்கும் வரையித் தரையே நிச்சயம்
ஒவ்வோர் அடியாய்த் தாங்கிக் கொண்டு
ஓலமெல் லாமுள் வாங்கிக் கொண்டு
வெவ்வே றான மரஞ்செடி கொடிகள்
விதவித மான காய்கனி வகைகள்
வளரவிரிந்து தன்மடி தந்து
மௌன மேவடி வாக இருக்கும்
பூமித் தாய்க்கிங் கீடிணை யுண்டோ
காற்று வந்து புழுதி வாரித்
தூற்றி னாலும் பொறுமை யாக
ஏற்றுக் கொள்ளும் - தென்றல் வந்து
சீண்டி னாலும் சிரித்துக் கொள்ளும்
தேசங்க ளாகப்பிரித்துக் கொண்டு
போர்புரிந் தாலும்
ஒரேமு னைப்பில் ஒரே கதியில்
சுழன்று கொண்டே இருக்கும்
சூரியத் தேவனைச் சுற்றிச் சுற்றியே

அவளே சற்று நடுங்கும் வண்ணம்
அமைதி இழந்து குலுங்கும் வண்ணம்
என்ன நடந்தது யாரழு தாரோ
எங்கோ ஒருகண் ணகியா இல்லை
இரணியன் மீண்டும் வந்துவிட் டானா
தேவகு மாரனைச் சிலுவையில் அறைய
யாரோ திட்டம் இடுகின் றாரோ

மாமுனி வர்தவம் கலைப்ப தற்கே
மீண்டும் ஊர்வசி ஆடுகி றாளோ
குழந்தை பசியில் கதறியழத் - தாய்
கையில் சல்லிக் காசும் இன்றிக்
கலங்கி நிற்கும் காட்சியோ இந்த
நிலநடுக் கத்துக் கென்ன காரணம்
ஊழிக் கூத்துக் (கு) ஒத்திகையோ
பாழில் வெடித்துப் பிறந்தவள் தானே

எங்கும் பரவசம் எல்லாம் அதிசயம்
தங்கும் வரையித் தரைதான் நிச்சயம்.

*2015*

## 15. வாசலில் வந்தமர்ந்த வள்ளல்!

[6–3–2015 காலை சுமார் 9.15. முப்பை பாம்பே மருத்துவ மனை. நான் அறுவை சிகிச்சை அறைக்குள் எடுத்துச்செல்லப் பட்டவுடன் வெள்ளாடை மருத்துவ உதவியாளர்கள் பறக்கும் வேகத்தில் பம்பரமாய்ச் சுழன்று சுழன்று போய்க் கொண்டிருந்த காட்சி ஒரே நொடியில் மாறியது: தேவதைகள் பலர் என்னைச் சுற்றிப் பறப்பதைப்போல். அந்த மருந்து மயக்கத்தில் பாதி மூடி யிருந்த என் கண்ணெதிரே ஒரு பெரிய யானை, சற்றே வெண்ணிறத்தில், அதன் மேல் ஓர் ஒளிவட்டம்! ஒரே நிமிடத்தில் சிகிச்சை தொடங்கியது. கத்தி என் கழுத்தில் பதிவதை மட்டுமே உணர்ந்தேன், அல்லது, பாவித்துக் கொண்டேன். அதற்குமேல், அறுவை சிகிச்சை செய்த டாக்டர் நூபுர் கபூர் குரல் மட்டும் சன்னமாக, வெகு தொலைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தது. 3 மணி நேரத்துக்குப் பின், நான் அறைக்கு வெளியே அழைத்து வரப்பட்டதும் ஷோபனாவைத் தேடினேன். அவள் ஒருவரை அழைத்து என்னிடம் நிறுத்தி ‘இவர் உங்களைக் காண வந்துள்ளார். குருநாதர் என்றுதான் நினைக்கிறேன். வணக்கம் சொல்கிறார்” என்றாள். அவர் வணங்க, நானும் வணங்கினேன். என் அறைக்குத் திரும்பிய பின் ஷோபனா சொன்னாள்: “அவர் வேறு யாரையும் பார்க்க வந்ததுபோல் தெரியவில்லை. 3 மணி நேரம் மௌனமாக வீற்றிருந்தார்.” என் மனத்தின் நெகிழ்ச்சியில் அன்று தோன்றிய கவிதையைப் பதிவு செய்கிறேன்]

*வாசலில் வந்த மர்ந்து*
*வாழ்த்திய வள்ளலும் யார்*
*தேசுடன் யானை மீது*
*தரிசனம் தந்தவன் யார்*
*ஊசியின் முனையி னூடும்*
*மருத்துவர் கைக ளோடும்*
*வாசியுள் சென்ற வன்தான்*
*மாயனென் குருநா தன்தான்*

*ஓசையே தெய்வ மாக*
*ஓதினேன் அன்று பின்னர்*
*பேசவும் குரலி லாமல்*
*பேதலித் திருந்த போது*
*ஈசனாய்த் தேடி வந்தே*
*என்னிடம் வணக்கம் சொல்லிப்*
*பேசாமல் சென்ற வன்யார்*
*பேச்சென்ன பெரிய பேச்சு*

தேனிலே நனைவ தற்கா
தேரேறிப் போவ தற்கா
ஊனினை உருக்கி உள்ளே
ஒளியாக அமர்வ தற்கா
ஏனெனைத் தேடி வந்தான்
எதற்கென்னை ஆட்கொண் டான்கண்
டேனெனச் சொல்லி நானும்
கவிதையாய்ப் பொழிவ தற்கா

*08.03.2015*

## 16. இன்னும் எழுத ஆசை

(நாலு நாட்கள். மும்பை மருத்துவ மனையில் இங்கும் அங்கும் எனக்காக அலைந்து களைத்த ஷோபனாவுக்கு நான் நன்றி சொல்லலாமா, சொல்லத்தான் முடியுமா? பாட்டெழுத முடியுமே! வந்தது இந்தப் பாடல், உயிரின் ஆழத்திலிருந்து, அழுகுரலாக இல்லை, ஓர் ஆற்றாமையாக... கொஞ்சம் ஆறுதலாக)

நீயும் நானும் நெருங்கி நடப்ப
தாக நெடுநாள் சொப்பனித்தேன்
நீயென் கையைப் பற்றியதும்
நெகிழ்ந்து போய்நான் கண்பனித்தேன்
நீயே எனக்கு நிரந்தர மானதும்
என்னை உனக்கே அர்ப்பணித்தேன்
நீயேன் மௌனம் சாதிக்கின்றாய்
நிஜம்தான் என்று சொல்லிவிடு

நிஜம்தான் என்று சொல்லிவிட்டால்
நிஜமும் கனவு போலாகும்
நிஜமா என்று கேட்டு விட்டால்
நெஞ்சம் உடைந்து தூளாகும்
நிஜமாய் இருக்கக் கூடு மென்றால்
நம்பிக்கையோடு வாழ்ந்திடுவேன்
இன்னும் என்ன மௌனமடி
ஏதோ ஒன்று சொல்லிவிடு

நீயார் எனக்குத் தெரியாது
நேற்றைய கணக்கும் புரியாது
தீயார் திரியார் என்றறிந்தா
தீபச் சுடரும் ஜொலிக்கிறது
எண்ணையாகக் கூட என்னை
ஏற்றுக் கொண்டால் போதுமடி
எண்ணம் முழுதும் எழுதிவிட்டேன்
இன்னும் எழுத ஆசையடி

*09.03.2015*

## 17. புறவழகு

புறவழகு நிலையில்லை போக்குக் காட்டும்
பொய்த்தோற்றங் கள்புனைந்து கம்பி நீட்டும்
அறத்தினிலே காலூன்றி நிற்ப தொன்றே
அழியாத அழகாக மலர்ச்சி யூட்டும்
இறையுணர்வில் தனையிழக்கும் உருக்கம் ஒன்றே
எந்நாளும் ஒளிகூட்டி வழியும் காட்டும்
பறையறைந்து சொல்கின்றேன் பாட்டுக்குள்ளே
பாசாங்குத் தேவையில்லை கூட்டுக் குள்ளே

*14.03.2015*

## 18. கவிதைகள் எனக்குப் போதவில்லை

கவிதைகள் எனக்குப் போதவில்லை
கனவுகள் விம்மிப் புடைக்கும் போது - மனக்
கதவை உதைத்துத் திறக்கும் போது
கவிதைகள் எனக்குப் போதவில்லை

காற்றா கரமா
கசங்கிக் கிடக்கும் மலரின் கதைதான் என்ன
நேற்றா இன்றா
நீளும் காலம் நினைவில் வலைகள் பின்ன - அதில்
சிக்கிக் கொண்டது விண்மீன் குலமா
சீச்சீ இந்த வாழ்வும் நிஜமா
கவிதைகள் எனக்குப் போதவில்லை

மானிடம் என்றொரு கதையாம் - அதில்
மாண்பு நோன்பு வீரம் கருணை
எத்தனை எத்தனை அதிகாரங்கள்
எதற்கோ இத்தனைப் பகல்வேஷங்கள்
கவிதைகள் எனக்குப் போதவில்லை

புல்லின் நுனியில் வானம் விரிந்து
கண்சிமிட்டி நகைக்கிறது
எங்கே எதற்குள் யாரென்றே
இதயம் சற்றுத் திகைக்கிறது
கவிதைக்கு நான்தான் போதவில்லை
கடும்பசி யோடு திரிகிறது
உள்ளே செல்ல வேண்டாம்
புறமே நிம்மதி புரிகிறது
கவிதைக்கு நான்தான் போதவில்லை. *05.05.2015*

## 19. ஏடேறத்தான் ஏழு நிமிடம்

ஏடேறத் தானுனக் கேழு நிமிடம் - எண்ணம்
ஈடேற வோஇந்த ஆயுள் முழுதும்
நாள்தோறும் நடிக்கின்ற நாடகம்தான் - நீ
நானென்ப தைக்காட்டும் ஊடகம்தான்.

வாடாத மலர்நீயாம் சொல்கிறார்கள் - என்னை
வாட்டுகின்ற கதையைநான் சொல்லலாமா
தேடாமலே வரும் தெய்வம் நீயாம் - என்னைத்
தெருத்தெருவாய் அலைக்கழிக்கும் வன்மம் ஏனோ
கூடாமல் கூடுவது தர்மம் தானோ
கூடுவிட்டுக் கூடுபாயும் மர்மம் தானோ

இறுதியாய்ஓர் எச்சரிக்கை இன்னும் இந்த
இழுபறியைத் தொடராதே இல்லை என்றால்
குருதியிலே ஆணையிட்டுச் சொல்கிறேன் உன்
கொட்டத்தை அடக்கவொரு தவமிருப்பேன்
ஒருபோதும் பேசாத மௌனத்துக்குள்
ஓரேயடி யாகநான் புதைந்து போவேன்
வரும்போகும் என்றின்றி எனக்குள்ளே நீ
வற்றாத ஊற்றாகி வாழ்ந்திருப்பாய் - வெறும்
வார்த்தைகளில் கரையாமல் சுடர்கொடுப்பாய்

*15.11.2015*

## 20. பொன்மஞ்சள் பூக்கள்

(வொர்ட்ஸ்வொர்த்தின் டேஃபடில்ஸ் கவிதையின் தமிழாக்கம்)

தன்னந் தனியனாய்ச் சுற்றித் திரிந்தேன்
பள்ளத் தாக்குகள் குன்றுகள் மேலே
மிதந்து செல்லுமொரு மேகம் போலே
சட்டென்று கண்டேன் ஒருபெருங் கூட்டம்
என்னை வரவேற்ற பொன்மஞ்சள் பூக்கள்
ஏரிக் கருகில் மரங்களின் அடியில்
காற்றில் ஆடிப் படபடத் தசைந்தன

பால்வழிப் பாதையில் வரிசை யாகக்
கண்சிமிட் டும்விண் மீன்கள் போலே
முடிவில் லாத பாதையி லேயவை
கரையோர மெல்லாம் காட்சி தந்தன
பத்தா யிரமொரு பார்வையில் கண்டேன்
தலைய சைக்கும் நடன குதூகலம்

பக்கத்து அலைகளின் நடனத்தைக் களியில்
விஞ்சின விஞ்சின மஞ்சள் மலர்கள்
இப்படிப் பட்ட மகிழ்ச்சிச் சூழலில்
பரவசம் தவிர்க்க முடியுமோ கவிஞனால்
பார்த்துப் பார்த்து நினைவிழந்தேன்
எத்தனைச் செல்வம் ஈட்டிய காட்சி

வெற்று மனத்துடனோ - ஆழம்
மேவிய சிந்தை ஒருமையில் மூழ்கியோ
சற்று விழிகுவித்து - நானும்
சாய்ந்திருக் கின்ற பலசம யங்களில்
கொத்து மலர்க்கூட்டம் - அழகு
குலுங்கக் குலுங்கஎன் உள்விழியில் - மின்னல்
இட்டு மறைந்துவிடும் - அடடா
இதுவே இதுவே தனிமையின் பேரின்பம்
அப்பொழு தென்நெஞ்சில் ஆனந்த மேநிறையும்
அந்த மலர்களோ டாடியே மகிழும்

*22.11.2015*

## 21. வாழ்த்தினால் போதாது, வரவேண்டும்

(பாரதி திருவிழாவுக்கு அழைப்பு விடுத்ததும் வாழ்த்துகள் ஏராளம் வந்து குவிந்த வண்ணம் இருக்க, என் மனம் மட்டும் பாடுகிறது:)

வாழ்த்தினால் போதாது வரவேண்டும் - வந்து
வளமான கவியொன்று தரவேண்டும்
சூழ்நிலை குடும்பம் தொலைவு தொடர்பணி
தொல்லைகள் எலாம்விடை பெறவேண்டும்

பாரதிக் காக வொருநாள் - அவன்
பாட்டுக்கெல் லாம்சேர்த் தொருநாள் - பட்ட
பாட்டுக்கெல் லாமொரு நாளென மூன்று
நாட்கள் ஒதுக்கமுன் வரவேண்டும்

அழைக்கத்தான் முடியும் என்னால் - விழாவுக்
குழைக்கத்தான் முடியும் முன்னால்
மழைக்குத்தான் மேகம் மலரத்தான் செடிகள்
நெகிழத்தான் இந்த நெஞ்சும் - கண்டு
மகிழத்தான் கவிதை கெஞ்சும்

*26.11.2015*

## 22. அலைகடலில் சிறுதுளியாய்...

**(இன்று, ஞாயிற்றுக் கிழமை, இந்தப் பகல் வேளையில், செய்ய வேறேதும் இல்லாத போது, மனத்தைத் தட்டித் திறந்து வந்து தலைகாட்டிய கவிதை.)**

அலைகடலில் சிறுதுளியாய் மிதந்து செல்கிறேன்
மிதக்கும் திசையென் வசத்தில் இல்லை
அலைகள் என்னை அடித்துச் செல்லும்
சிலசமயம் மணற்கரையில் தள்ளும்
மறுபடி வந்து சுருட்டிக் கொள்ளும்
ஆவியாகிப் போவதும் உண்டு
நீராய் மீண்டு விழுவேன் ஈண்டு
மீண்டும் மீண்டும் இந்தக் கடல்தான்
இசைவுக் கேற்ப எடுக்கும் உடல்தான்
உயிரென் றேதோ சொல்கிறார்கள்
உள்ளே உள்ளே தேடுகின்றேன்
தேடிக் கொண்டே ஓடுகின்றேன்
அங்கும் இங்கும் சின்ன துளியாய்
அலைமோதிச் சிதறுகிறேன்
கலங்கரை விளக்கம் போலொரு பார்வை - அந்தக்
கடைவிழிக் காகக் காத்திருக்கிறேன்

*29.11.2015*

## 23. கடல் தேவதையின் பாடல்

மாக்கவிஞன் ஷேக்ஸ்பியரின் கவிதைகளில் மனம் பறி கொடுத்தவன் நான். டெம்பஸ்ட் என்ற காப்பியத்தில் வரும் ஏரியலின் பாடலைப் பள்ளி வகுப்பில், ஒருநாள் எங்கள் தலைமை ஆசிரியர் சகோதரர் ஆன்ஸ்லம் நடத்தியதை இப்பொழுது நினைத்துக் கொண்டேன். அந்தப் பாடலைத் தமிழில், அதுவும் காவடிச் சிந்து மெட்டில் தர முயல்கிறேன்.

"தந்தை - உன்
தந்தை இருப்பதும் ஆழத்திலே - மிக ஆழத்திலே
மரணத்தின் மணியோசை ஒலிப்பதைக் கேளிந்த நேரத்திலே
- அவர்
எலும்புகள் இன்று பவளங்களாம்
விழியிரண்டும் நல்ல முத்துக்களாம்
எதுவும் அழிவதில்லை அவர் கோலத்திலே
வியப்பளிக்கும் ஒரு கடல்மாற்றம்
வளம்கொடுக்கும் நல்ல உடல்மாற்றம் - மணி
அடிப்பவர்கள் கடல் தேவதைகள் - மணி
அடிப்பவர்கள் கடல் தேவதைகள் - அது
கேட்கிறதே இந்த வேளையிலே."

*29.11.2015*

## 24. மதுரை மீனாட்சி உமையே

காலனை எற்றுமுன் கால்விரல் களின்நகக்
கண்களோ வெண்சோழிகள்
கண்சிமிட் டும்கோடித் தாரகை கள்பந்து
விளையாட வரும்தோழிகள்
நூலனைய சிற்றிடை நோகாம லேதிரி
சூலத்தை யூன்றிநிற்கும்
கோலத்தி லேதிருப் பாதங்க ளோசெந்
தாமரை போல்சிவக்கும்
ஆலவாய் அழகனின் கண்டத்தைப் போன்றகணுக்
கால்களில் தண்டைகொஞ்ச
அழகான இருவாழைத் தண்டுகள் போலமேற்
கால்களில் செழுமைமிஞ்ச
சேலவா வும்வாவிச் சிற்றோடை யாய்மணி
மேகலை இடையிலாடத்
தென்மதுரை கோலோச்சும் ராஜமா தங்கியே
பரம சிவன்பங்கியே

வலப்புறம் மஹேஸ்வரன் என்றநா ணத்தினால்
இடப்புறம் வளைந்தஇடையும்
வலதுகைப் பைங்கிளி வாய்க்குவாய்க் காமற்செங்
கனியாய்க் குவிந்தஇதழும்
அலகுடை அஞ்சுகப் பறவையா நாசியா
புரியாத மூக்குத்தியும்
அங்கயற் கண்ணியாய் அருள்செய்யும் தேவியாய்
அன்பே ததும்புவிழியும்
திலகமா தீபமா தீண்டவா வேண்டவா
தென்றல்தடு மாறுநுதலும்
திசையளக் குங்குழல் சுற்றிவைக் குங்கொண்டை
யுட்கொண்ட பொன்மகுடமும்
உலகம் வணங்கப்பே ரொளிவழங்கி யேயிடை
ஒசிந்துநிற் கும்சிற்பமே
உண்மையே அரசாளும் பெண்மையே ஒப்பற்ற
ஒயிலேஒய் யாரமயிலே

நீயாளும் மதுரையைக் கண்ணகி யின்கற்புத்
தீயாள வைத்த உமையே
நேரில்வந் தொருமுத்து மாலைதந் தின்றமிழை
வாழ்த்திய வைபோகமே
சேயாளப் பால்தந்த சீர்காழிப் பதிவாழும்
பெரியநா யகிக்கோலமே
தென்குமரி யில்சின்ன பெண்ணாகக் காட்சிதரும்
வாலையே சின்னமலரே
பாயாள அரவத்தைப் பயன்படுத் தும்பரந்
தாமனின் தங்கச்சியே
பண்டுதலை மாலையுடன் ஆயுதங்க ளுடன்காட்சி
தந்தமா காளிவடிவே
வேயாள இருதோள்கள் மீனாள இருவிழிகள்
வில்லாள இருபுருவங்கள்
விளங்கிடும் கோலமே வெற்றியின் நாயகி
மதுரைமீ னாட்சியுமையே

*29.11.2015*

## 25. சுருக்கத்தால் வள்ளுவரும்...

சுருக்கத்தால் வள்ளுவரும் மாதொ ருத்தி
சொற்போரால் இளங்கோவும் தெய்வத் தோடு
நெருக்கத்தால் ஆண்டாளும் நெடிய காதை
நிகழ்ச்சிகளால் கம்பனும்தன் ஊன்கரைந்த
உருக்கத்தால் வாசகரும் இனிய சந்த
ஓசையினால் கிரியாரும் உணர்ச்சித் தீயின்
பெருக்கத்தால் பாரதியும் வளர்த்த தைத்தம்
பேதைமையால் சிலரழிக்க முயல லாமா

*05.01.2016*

## 26. புன்மையினால் வீழ்ந்தவர்கள்

புன்மையினால் வீழ்ந்தவர்கள் சிலர் நிரம்பப்
புகழ்ந்ததனால் வீழ்ந்தவர்கள் பலராம் எந்த
நன்மைக்கும் திறத்துக்கும் நல்வாய்ப் புக்கும்
நானில்லை காரணமென் நாவ சைத்து
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் கண்ட
நாயகனே காரணமென் றறிந்து கொண்டால்
மின்மினிபோல் வெளிச்சத்தில் பலியா காமல்
விதைபோல ஒளிச்சத்தில் மலர லாமே

*06.01.2016*

## 27. வீரமாம் வீரம்

வீரமாம் வீரம் வெத்துவேட்டு வீரம்

மாடுபுடிக்கப் பத்துப்பேரு மல்லுக்கட்டும் வீரம்
பொம்பளைங்க கிட்டப்போயி பொளந்துகட்டும் வீரம்

தப்பு செய்யும் போது நின்னுத் தடுக்காத வீரம்
தன்னைத்தானே கட்டியாளத் தெரியாத வீரம்

கள்ளுக்கடை வாசலுல கதையளக்கும் வீரம்
ஜொள்ளுவிட்டு டாவடிச்சு
சோரம்போன வீரம்

பெத்தவரை இல்லத்துல சேத்துவிடும் வீரம்
வெக்கங்கெட்டுத் தலைவர்காலில்
விழுந்துவிடும் வீரம்

எலும்புத் துண்டுக் காசைப்பட்டு
ஓட்டுப்போடும் வீரம்
எவனெவனோ பஞ்சாயத்தில்
எகிறுகிற வீரம்

ஜாதிமதம் பேசிகிட்டுப் பிரிஞ்சுநிக்கும் வீரம்
வீதிக்கொரு மாவீரன்
போஸ்டருல வீரம்

வீரமாம் வீரம் வெத்துவேட்டு வீரம் *15.01.2016*

## 28. ஆறுதல் இல்லை, ஆற்றுப்படை

(என் இனிய நண்பர் இலந்தை இராமசாமியின் அன்புத் துணைவியார் பானுமதி சில நாட்களுக்கு முன் இறைவனடி சேர்ந்தார். நல்ல கவியுள்ளம் கொண்ட நண்பரின் ஆற்றொணாத் துயரத்தைக் கவிதையாலே சற்றேனும் ஆற்றும், இல்லை, மீண்டும் கவிதைக்கே ஆற்றுப் படுத்தும் ஒரு முயற்சி இது)

உன் நெஞ்சம் வடிக்கின்ற கண்ணீரை என்
ஒரு வார்த்தை துடைத்து விடக் கூடுமா நீ
முன்னிருந்த நிலைக்குன்னை மீட்டெடுக்க
மொழிக்காற்றல் உண்டா உன் துயரம் எல்லாம்
என் பாட்டில் கரைந்திடுமா வெறுமை என்ற
ஏகாந்த வனத்தினிலே இருக்கும் போது
புன்னகைப்பூ உன் முகத்தில் மலருமா ஓ
புலமை மிகு தோழா என் முயற்சியாலே

பானு மதியாமல் அதைப் பழமென் றெண்ணிப்
பருகியவன் தலைவன்பேர் பூண்ட நண்பா
பானுமதி யின்வாழ்க்கைத் துணைவனாகப்
பண்புள்ள வாழ்வுபெற் றுயர்ந்த தோழா
பானு,மதி போலிரண்டு மக்கட் செல்வம்
படைத்தவனே உன்துணையைப் பிரித்த கூற்றென்
பானும் அதிசயிக்கவுன் நெஞ்சுக் குள்ளும்
பாடல்களுக் குள்ளுமவள் வாழ்கின் றாளே!

எழுத்தாணி மையாக ஏட்டில் ஏறும்
இனியதொரு கவியாகச் சொற்களுக்குள்
விழும்தாள கதியாக உன் விழிக்குள்
விரிவான மாகவுன் நிழலு மாகப்
பொழுதெல்லாம் உன்னோடு வாழ்கின் றாளே
பொல்லாத கூற்றும் ஏமாந்து விட்டான்
அழத்தேவை யில்லைநீ அகக்கண் ணாலே
அகிலத்தைப் பார்க்கின்ற கவிஞன் தானே

இரங்கற்பா இல்லையப்பா இலந்தை யப்பா
இமைநனைத்த கனமெல்லாம் கரைந்து போக
உறங்கப்பா உண்ணப்பா எழுந்து வாப்பா
உலவப்பா நலமாக நீவாழ்ந்தால் அன்(பு)
உருவாயுன் உள்ளத்தில் அவளிருப்பாள்
உற்சாக ஊஞ்சலவள் ஆடத் தானே
ஒருவார்த்தை சொல் அவ் வார்த்தைக்குள்ளே
ஒளியாக வருவாளே பாடப்பா நீ *17.02.2016*

## 29. நானழைக்க வருவாளா?

நானழைக்க வருவாளா கவிதை நங்கை
நான்சொல்லும் உடையையா தேர்ந்தெடுப்பாள்
வானமழை போல்வந்து கொட்டுவாள் என்
மனக்கதவு படபடக்கத் தட்டுவாள் செந்
தேனமுதம் கேட்டால்தீப் பந்தம் ஏந்தித்
திசையெல்லாம் ஒரு நொடியில் சுழற்றுவாள் பின்
மோனநிலைக் குள்ளமர்ந்து கொள்வாள் அந்த
மோடிவித்தைக் காரிக்கே வாக்கப் பட்டேன்

*20.03.2016*

## 30. சொல்லிவிடு, அந்தச் சொல்!

**(ஜன்னல் வழியாகக் கருநீல வானமும், சற்றே குறைந்த நிலவும் என்னை அமைதி செய்ய முயன்று, என்னுள் அமளி செய்து ஒரு கவிதையை நெம்பி வெளிக்கொண்டு வந்தன. என்ன விந்தை!)**

விடமேறி னால்நீல கண்டன் நீரில்
விளையாடும் போதந்த மடுவில் பாம்புப்
படமேறி னால்நீல வண்ணன் கங்கைப்
படகேறி னால்நீல மேக ராமன்
இடம்ஏறி னால்நீலி அர்த்த நாரி
புலியேறி னால்நீல வஸ்த்ர தாரி
குடமேறி ஒளிசிந்தும் நீல வானம்
குறையாத கடல்நீலம் கண்கள் நீலம்

நீலத்தில் பல வகையாம் அவன்சொன் னானே
நீயந்த நீலத்தில் கரைந்து போயேன்
சூலத்தில் ஒருமின்னல் வரைந்து காட்டு
சொப்பனத்தில் ஒருகவிதை சொல்ல வா - உன்
கோலத்தின் எழில்கண்டு கோள்கள் எல்லாம்
நேர்க்கோட்டில் ஒன்றாக நிற்க வை - முக்
காலத்தை யும்சின்ன கண நேரத்தில்
கடைக்கண்ணால் அடைத்துவை கனவு தானே

சொல்பட்டால் உடைந்துவிடும் சொப்ப னத்தைச்
சொல்லுக்குள் அடைத்துவிடச் சொல்கி றேனா
சொல்லுக்குள் ஊடுருவிச் சென்று பார்க்கும்
சூக்குமத்தை அன்றோநான் யாசிக் கின்றேன்
சொல்லாத சொல்லேநீ ஸ்வர்ண ஜ்வாலை
சொர்க்கநர கங்களுந்தன் லீலை என்னைச்
சொல்லாக்கிச் சொல்லிவிடு அந்தச் சொல்லில்
இன்னுமோர் உலகமிங்கே மலர்ந்திடட்டும்

*25.03.2016*

## 31. நாமார்க்கும் பகையல்லோம்

நாமார்க்கும் பகையல்லோம் எல்லா ரும்நம்
நண்பர்களே நம்மைநாம் மீட்டுக் கொள்ளும்
ஓர்மார்க்கம் தான்சொன்னோம் ஒன்றே சொன்னோம்
ஒருவரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை
யார்போட்டி போட்டாலும் கேள்வி கேட்போம்
எல்லார்க்கும் நம்தலைவர் நாமே என்றோம்
வேறொன்றும் இல்லையிதை உரக்கச் சொல்ல
வீரமெல்லாம் வேண்டாம்வி வேகம் போதும்

கலைத்துறைநட் சத்திரங்கள் சொல்லலாமே
கணிஉழும் இளைஞர்களும் சொல்லலாமே
அலைபேசி தோறுமிதைச் சொல்லலாமே
அச்சினிலும் காட்சியிலும் சொல்லலாமே
சிலையாகி விட்டனவோ சிந்தை எல்லாம்
சிறியதிரை நங்கூரர் பேச்சாளர்கள்
செய்தியாளர் எல்லாரும் சொல்லலாமே
தலை நிமிர்ந்து வாருங்கள் தருணம் ஈதே
தன்மானம் மீட்பதற்கே குரல் கொடுங்கள்

*24.04.2016*

## 32. கைகுவித்து வேண்டுகிறேன்

நெஞ்சைப் பிழிந்து கண்ணீர் மல்கக்
கெஞ்சிக் கேட்கிறேன்
அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும்
அடிமையாகி வீழ்ந்தது போதும்
கொஞ்சம் நிமிர்ந்து நோக்குங்கள்
எங்கும் உங்கள் குரலொலிக் கட்டும்

தானம் லஞ்சம் மறுத்து விடுங்கள் - தன்
மானம் காக்க வாக்களியுங்கள்
நேர்மை, துணிவு, பணிவெல்லாம்
தேர்வு செய்து வாக்களியுங்கள்
உங்களுக் காக உழைப்பேன் என்று
வேலை கேட்டு வருகிறார்கள்
வேட்பாளர்களாய் வீதிதோறும்
ஓட்டுக் கேட்டு வருகிறார்கள்
பிரச்சாரத்தை நிறுத்தி விட்டுப்
பிரச்சினைகளைக் கேட்கச் சொல்லுங்கள்
அடக்கமாக வரச் சொல்லுங்கள்
ஆடம்பரத்தைத் தவிர்க்கச் சொல்லுங்கள்
உங்கள் மூன்று கேள்விகளுக்கும்
உடனடியாக பதில் கேளுங்கள்
நல்ல ஆளைத் தேர்ந்தெடுத்து
வேலைக் கமர்த்துங்கள்
சின்னம் பார்த்துப் போடாதீர்கள்- நல்
எண்ணம் பார்த்து எடை போடுங்கள்
தலைவன் தலைவி யாரும் இல்லை
நீங்களே இந்நாட்டு மன்னர்கள்
பணத்துக்காக ஓட்டை விற்றால்
அதுவும் ஒரு வகை விபச்சாரம்
நாட்டைக் கெடுக்கும் நயவஞ் சகத்துடன்
நடத்தலாமா வியாபாரம்
ஓட்டுச் சீட்டு காகிதமா
மானம் காக்கும் ஆயுதமா
முடிவு உங்கள் கைகளிலே
கைகுவித்து வேண்டுகிறேன் - கொஞ்சம்
சிந்திக்கத்தான் தூண்டுகிறேன்

*02.05.2016*

## 33. மாரித்தாய்

(கருமாரியம்மன் மேல் கவிஞர் அரிமா பாலகிருஷ்ணன் முகநூலில் பதிவு செய்த பாடலைப் படித்ததும்...)

மாரித்தாய் புகழ்பாடிப் பூரித்தாய் அவளே நம்
சேரித்தாய் ஜெகமெல்லாம் சேவிக்கும் தாய் உருவம்
மாறித்தான் மாதாவாய்த் தோன்றும்தாய் பாரதியின்
பேரிகையில் பேயாக ஆடும்தாய் பாடும்தாய்

*06.05.2016*

## 34. உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு?

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு
உண்மையைத் தானே சொல்கின்றேன்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று
பாரதி சொன்னதைச் சொல்கின்றேன் - அதை
வேதமென்றே நான் ஓதுகிறேன்

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு

மக்களுக் குதவக் கட்சிகள் ஆனால்
மக்கள் நலமே இலக்கு
கட்சிகள் அதற்குக் கருவிகளே இந்த
வாதத்தில் ஏது வழக்கு

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு

ஒவ்வொரு கட்சியும் ஒரு மனிதர்
கட்டுக்குள் இருப்பது சரிதானா
கட்சிக்குள் சுதந்திரம் இல்லையென் றால்நாட்டில்
சுதந்திரம் உண்டா சொல்தோழா

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு

ஒவ்வொரு பதவியும் ஒருமுறை
தான்என்ற
வரையறை அவசிய மானதன்றோ
முப்பது நாற்ப தாண்டுகள் ஒருவரே
ஆள்வது அடிமைத் தளையன்றோ

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு

சொன்னால் மட்டும் போதாதென்றுன்
முன்னால் வந்து நிற்கின்றேன்
சொல்வதெல்லாம் செயலாவதற்கே
தூண்டுகிறேன் உன்னை வேண்டுகிறேன்

உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு
உண்மையைத் தானே சொல்கின்றேன் - அட
உன்னிடம் தானே சொல்கின்றேன்
*10.05.2016*

## 35. சிறுவெளிச்சம்

சதையெலும்பால் ஆனவுடல் மட்டு மாநான்
சலனங்கள் அலைமோதும் கடலு மாநான்
எதையெதையோ நானென்று நம்பிக் கொண்டே
ஏமாறும் சிறுபிள்ளைத் தனமும் நானா
விதைக்குள்ளே விருட்சத்தின் வளர்ச்சி கண்டு
வியக்கின்ற கவியுள்ளம் எனதா ஏதோ
கதைபேசிக் கதைபேசிக் காலத் தோடு
கரைவதற்கா இவ்வாழ்க்கை தேவ தேவா

இன்றோடு முடிந்தாலும் அச்ச மில்லை
ஏதேனும் பயனுண்டா பயணத் தாலே
மன்றாடிப் போராட வலிமை இல்லை
மல்லுக்கு நிற்பதற்கு நேர மில்லை
என்றேனும் என்கவிதை சிறுவெ ளிச்சம்
எவர்க்கேனும் காட்டமுடிந் தாலும் போதும்
அன்றெந்தன் வாழ்க்கைக்கோர் பொருளுண் டாகும்
அதற்குந்தன் அருள்வேண்டும் தேவ தேவா

*14.05.2016*

## 36. கல்லானாலும் காளி

அனலும் புனலும் அவளென்றே
அரற்றுகின்றாய் அது நன்றே
உனக்கு மட்டும் தானவளா
ஊருக்கெல்லாம் தாயவளே
சினந்து பொங்கும் சீற்றத்தில்
தீப்பி ழம்பாய்த் தெரிவாளே
கனத்த இதயத் துள்ளிருந்து
கண்ணீ ராகப் பொழிவாளே

அடடா என்றே சீறுவதும்
அடுத்த கணமே மாறுவதும்
முடியா தென்று புலம்புவதும்
முனைப்பில் லாமல் தேடுவதும்
தொடரத் தொடர ஓடுவதும்
தொட்டால் ஒன்று கூடுவதும்
மடமை என்று சாடுவதும்
மருகி அழுது வாடுவதும்

எல்லாம் ஆன கவிஞன்நீ
எதற்கும் இசையும் அன்னையவள்
சொல்லால் சுட்டுப் பார்த்தாலும்
தூர ஒளிந்து கொண்டாலும்
புல்லாய் முளைத்துப் புன்னகைத்துப்
பூத்துச் சிரிக்கும் தீபமவள்
கல்லா னாலும் காளியவள்
கருணை மிக்க தூளியவள் *(23-05-2016)*

## 37. புருஷோத்தமன் பதிகம்

(க்ரேஸி மோகனின் திருத்தங்கல் பெருமாள் பாசுரம் படித்ததும், கவிஞர் அரிமா பாலகிருஷ்ணன் பாராட்டி ஒரு குறள் வெண்பா பதிவு செய்ய, அதை நேரிசை வெண்பாவாய் நான் நிறைவு செய்ய, இந்த விளையாட்டு அப்படியே முகநூலில் தொடர்ந்து, சில நிமிடங்களில் ஒரு பதிகமாக, முன் பாதி அரிமா, பின் பாதி நான் என்பதாய்ப் பத்து வெண்பாக்களும், ஒரு பலச்ருதியுமாக உருவான "புருஷோத்தமன் பதிகம்" இது. நான் எழுதியவை கனஎழுத்துருவில் (bold) உள்ளன.)

*புருஷோத்தமன் பதிகம்*
*(அரிமா - ரவி)*

*திருத்தங்கல் நின்ற திருமகள் கேள்வன்*
*வருத்தங்கள் நீக்கியருள்*
*வான்*
**சொல் – கருத்தங்கி**
**நாளும் வெளிப்படுவான் நல்ல கவிதையிலே**
**ஆளுடையான் என்னை அரி (1)**

*சுடரடி காட்டிடும் சுந்தரக் கண்ணன்*
*இடர்களை வானே இனிது -*
**படரும்**
**செடியாய வல்வினைகள் தீர்க்கும் அமுதன்**
**நெடியானை என்றும் நினை (2)**

*நெடியோனை என்றும் நினைந்துருகி வாழ்வில்*
*அடியார்கள் கொள்வர் அருள்*
**பூங் – கொடியாய்ப்**
**பிராட்டி தவழ்மார்பும் பீதாம் பரமும்**
**அராப்பள்ளி கொண்டான் அவன் (3)**

*ஆலிலைமேல் பள்ளி அமலனால் துன்பங்கள்*
*நூலாகத் தேய்ந்திடும் பார்*
**நூற்றுப் – போலிகளால்**
**தீயசக்தி ஓங்கியதும் தேர்நடத்திப் போர்நடத்தி**
**தூயசக்தி யானான் துணை (4)**

*தூயசக்தி யானான் துணையாகப் பார்த்தனுக்கு*
*நேயுமுடன் சொன்னான்கீ தை*
**நேராய் – ஆயர்கோன்**
**யாவும் அவனென் றறிந்தோம் அவன்மார்து**
**ழாய்மணக் குந்தமி ழாம் (5)**

*மார்பில் துழபம் மயிலிறகு சென்னியில்*
*கார்குழல் வண்ணனே காப்பு*
**கண் – டார்மயங்கும்**
**கோலா கலனைநம் கோவர்த் தனனைமா**
**லோலாவென் றேத்தீர்கொ லோ (6)**

*குன்றெடுத்துக் காத்தான் குறைவிலாச் சேலைகள்*
*நன்றளித்துக் காத்தான் நவநீதன் - முன்பு*
**திருடிய சேலைத் திரளைத்தான் துச்சன்**
**உருவிய போதுதவி னான் (7)**

*ஆழ்வார்கள் பாசுரத்தில் அந்தமிழாய் நின்றிட்டான்*
*தாழ்வின்றி நட்பில் தவழ்ந்திட்டான் -*
**ஆழிமழைக்**
**கண்ணா எனவரற்றிக் காதல் வயப்பட்டாள்**
**பெண்ணா பெரியாழ்வார் பெண் (8)**

*பரமபதம் வேண்டாம்நல் பால்மாடு மேய்க்க*
*விரும்பினவன் தன்மைதான் என்னே - புருஷோத்த*
**மன்–அவனே மற்றெல்லா ஆண்களும் பெண்களே**
**கண்ணனே என்று கதறு (9)**

*கேசவா கண்ணா கிரிதரா நாரணா*
*வாசமலர் மங்கை மணாளனே -*
**பேசவா**
**பாடவா பேர்சொல்லிப் பேரவா வோடுநான்**
**ஆடவா மெய்ஆண்ட வா (10)** *26.05.2016*

## 38. எல்லாம் ஆகும் ஒரு விரிவே!

இன்று முகநூலில் ஒரு நண்பர், ஒரு விசித்திரமான கேள்வி கேட்டிருந்தார். தேவதூதர்கள், ஞானிகள் இவர்கள் படங்களுடன் மறைந்த நடிகர்கள், வன்கொடுமையாளர்கள் (ஹிட்லர்) போன்றோர் புகைப்படங்களைப் போட்டு, இவர்களில் யார் மீண்டும் பிறக்க வேண்டும் என்பதே அவர் கேள்வி. திருந்த வேண்டியவர்களே மீண்டும் பிறக்க வேண்டும் என்று பதில் போட்டேன். அத்துடன் நிற்குமா மனசு? பாடவும் தொடங்கியதே:

திருந்தப் பிறக்கும் உயிர்களிடை
திருத்தப் பிறக்கும் தீரர்களாம் - திரும்பத்
திரும்பப் பிறக்கும் மனிதரிடை - பிறர்
விரும்பப் பிறக்கும் வீரர்களாம்
புத்தர் ஏசு காந்தியென்றே
பூமிக்கு வரும் புண்ணியராம்

அருந்தி உடலை வளர்ப்பவர்கள்
கோடி கோடி மாந்தர்களாம்
வருந்தி உடலைச் சுமந்தபடி
வாழ்ந்து முடிந்து போனவராம்
மருந்து கொடுக்கும் மருத்துவரும்
மாண்டு போகும் வாழ்க்கையிலே
இறந்து வாழும் இரகசியத்தைக்
கற்றுத் தருவோர் ஒருசிலராம்
அந்த வரிசையில் வந்தவர்கள்
ஆன்ம நேய வள்ளல்களாம்

இறப்ப தற்கா பிறக்கின்றோம்
இங்கும் அங்கும் உழல்கின்றோம்
மறப்ப தற்கா நினைவு - எதையும்
மறுப்ப தற்கா அறிவு - துயர்
பொறுப்ப தற்கா துணிவு - மண்
புதைவ தற்கா புவிவாழ்வு
இருக்கும் போதே விரிந்திடுவோம்
இதுவே ஆன்ம ஒளிவீச்சாம்
எல்லா மாகும் ஒருவிரிவே
அல்லா கடவுள் பரமபிதா *04.06.2016*

## 39. தோன்றட்டும் மறுமலர்ச்சி

மயிலை முனிவர் மதுரை சென்று
வழங்கிய தேபொது மறையென்று - இந்த
வையக மேபுகழ்ந் திடுமின்று

அதியன் தந்த கனிபோல் நெஞ்சில்
பதியும் பாடல்கள் தந்தவளைப் - ஔவைப்
பாட்டியென் றேபுவி பாராட்டும் - அவள்
பாடல்கள் நல்ல வழி காட்டும்

சேரன் தம்பி சிலம்பு தந்தான்
சாத்தன் மேகலை செய்து தந்தான்
தேரமுந் தூர்க்கவிச் சக்ரவர்த்தி - ஸ்ரீ
ராமனை அகத்தில் முன்னிறுத்தி
காவிய ஓவியம் தீட்டிவிட்டான் - தெய்வக்
காட்சியெல்லாம் அதில் காட்டிவிட்டான்

எட்டய புரத்தில் எரிதழ லாக
எழுந்தவ னேயோர் யுகப்புரட்சி
கட்டறுத் தேபாயும் காளையைப் போலவன்
ஒவ்வொரு சொல்லும் புத்துணர்ச்சி
இத்தனை இருந்தும் இன்னும் நம் மக்கள்
சிந்தனைக் களத்தில் ஏன்வறட்சி
இன்றிந்தக் கவிதையில் கூவுகிறேன் உடன்
தோன்றட்டுமே ஒரு மறுமலர்ச்சி

*25.06.2016*

## 40. விரல் நுனிகளில் தீ!

**(ஒரு விழா நிகழ்ச்சியில், பலர் அமர்ந்திருந்த அரங்கில், ஒரு விரல், அதன் நகம், அதில் பளபளத்த சிவப்புச்சாயம் என்னை ஒரு கணம், ஒரே ஒரு கணம் ஈர்த்தது.)**

விரல் நுனிகளில் தீ தீ - அவள்
விரல் நுனிகளில் தீ

மிக அழகிய முகமும் - ஒரு
கொடியசைகிற உடலும்
இளவயதினள் கனிமொழியினள்
எழிலுருவினள் எனினும் - அவள்
விரல் நுனிகளில் தீ

கண்ணனைத் தொட்டவளோ - கவிதை
எழுதுவதால் வெம்மை யுற்றவளோ
கண்ணகி யாய்த்தன் காற்சிலம்பை - எறிந்து
விட்டவளோ ஊரைச் சுட்டவளோ - அவள்
விரல் நுனிகளில் தீ

வீணை இசைப்பாளோ - ஓவியம்
தீட்டி இழைப்பாளோ
சின்ன குழந்தையைத்தன் - நெஞ்சில்
வாரி அணைப்பாளோ
தென்றலை ஒதுக்கிவிட்டுக் - கையை
வீசி நடப்பாளோ - செஞ்
சாந்துக் குழம்பெடுத்து - வாசற்
கோலம் வரைவாளோ - அவள்
விரல் நுனிகளில் தீ

நேச மனத்தினளோ - நேர்மைச்
சீற்றம் உடையவளோ
தேசு மிகுந்தவளோ - கையில்
திகிறி எடுப்பவளோ
மாயம் புரிபவளோ - இல்லை
மாய்மாலம் செய்பவளோ - நகச்
சாயம் பளபளக்க - என்னை
வாட்டி வதைத்தனளே - அவள்
விரல் நுனிகளில் தீ

*26.12.2006*

## 41. நிலவாய் முளைக்கும் மனோன்மணி

நீயே துர்க்கை நீயே இலக்குமி
நீயே நாவில் சரஸ்வதி
நிழாலாய் நெஞ்சில் தழலாய் வெள்ளி
நிலவாய் முளைக்கும் மனோன்மணி

மாயா லோகம் அத்தனையும் - ஒரு
மந்தகா சத்தில் படைத்து
தேகாபி மானம் என்ற தினவை
ஒரேக ணத்தில் உடைத்து
நீயா நானா ஒன்றா பலவா
பேத மெல்லாம் துடைத்து
ஓயா நடனம் புரிவாய் நீயே
ஓங்கா ரத்தில் முளைத்து
(நீயே துர்க்கை)

சக்தி நீயே சத்திய மான சாநித் தியமும் நீயே
பக்தி நீயே பரவ சத்தில் வரும்கண் ணீரும் நீயே
முக்தி நீயே முன்னும் பின்னும் இன்னும் இன்னும் நீயே
துக்கம் அகற்றித் தூய்மை செய்யும் துர்க்கா தேவித் தாயே
(நீயே துர்க்கை)

*09-10-2016*

## 42. “ஒசிமாண்டியாஸ்”

**(ஷெல்லியின் ‘ஒசிமாண்டியாஸ்’ என்ற ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்)**

தொலைதே சத்து யாத்திரிகன்
சொல்லக் கேட்டேன் ஆங்கொருகற்
சிலையாய்ப் பாலை வனத்திடையே
சிதிலம் அடைந்த காலிரண்டு
நிலையா மைக்குச் சான்றாக
நிற்கின் றனவாம் பாவங்கள்
கலையா முகமொன் றருகினிலே
புதைந்து கிடக்கக் கண்டானாம்

அன்று தெரிந்த கடுகடுப்போ(டு)
அதரம் சுளித்த அதிகாரம்
நன்று வடித்திருந் தான்சிற்பி
நகைப்புக் கிடையிலும் பிறழாமல்.
நின்ற சிலையின் பீடத்தில்
நிலையாய் இருந்த வாசகமோ,
“என்றன் பெயர் ஒசிமாண்டியாஸ்
மன்னர்க் கெல்லாம் மன்னவன்நான்;

மன்னர்க் கெல்லாம் மன்னவன்நான்
மருக வேண்டும் மாவீரர்
என்ப டைப்பு கள்கண்டே”
என்று பறைசாற் றியதானால்
இன்றப் பீடத் தருகினிலே
எல்லை யற்ற வெட்டவெளி
தன்னந் தனிமை மணற்பரப்பு
தவிர வேறொன் றங்கில்லை *30.10.2016*

## 43. இன்னும் எத்தனை அடிகள்?

**(என் நண்பன் சசி ஆங்கிலத்தில் ஒரு நல்ல கவிதை எழுதி அனுப்பி யிருந்தான். அதுவே அவன் முதற் கவிதை முயற்சி.**

**"When the time of death reaches me,
Whose fingers would hold my hands?")**

ஒவ்வோர் அடியாய் எடுத்து வைத்தே
உன்னை அணுகுகிறேன்
ஒவ்வொரு நாளும் உனக்கென்
றேநான்
என்னை உணருகிறேன்

மரணம் என்று பெயரிட்(டு) உன்னை
வெறுக்கத் தூண்டுகிறார் - விட்டு
விலக வேண்டுகிறார்
சரள மான சொற்க ளுக்குள்
ஒளிந்து கொள்ளுகிறார் - வசனம்
பொழிந்து தள்ளுகிறார்

முடியை இழக்க முடிந்த போதும்
உடலைத் துறக்க நடுங்குகிறார்
முடிவில்லாத ஓட்டம் எனத்தன்
முனைப்புக் குள்ளே முடங்குகிறார் - முணு
முணுத்துக் கொண்டே உறங்குகிறார்

இந்த விந்தை வட்டத் துக்குள்
சொந்த பந்த வேடங்களாம்
சிந்தை என்ற கடலிலே -
கணக்கி லாத ஓடங்களாம்

பிறந்த கணமே உனக்காக நான்
பிரபஞ்சம் முழுதும் நமக்காகத் தான்
மறந்தும் அஞ்ச மாட்டேன் - உன்
முகத்தைக் கொஞ்சம் காட்டேன்

ஒவ்வோர் அடியாய் எடுத்து வைத்தே
உன்னை அணுகுகிறேன் - அதில்
என்னை உணருகிறேன் - அட
இன்னும் எத்தனை அடிகள்! *03.12.2016*

## 44. தர்மம் எங்கே?

மக்களின் சேவகர்கள் மக்களையே புறக்கணித்து
மாவீரர் போல்வேடம் போடுவதா
மன்றத்தில் கைகலப்பு வீதியெலாம் சலசலப்பு
மலிவான நாடகங்கள் ஆடுவதா
வக்கற்றுப் போனவரா வாக்காளர் பெருமக்கள்
வக்கணையாய்ப் பேசியதும் மாறியதா
வாக்களித்து விட்டவுடன் வெற்றிநிழல் பட்டவுடன்
மதயானை போலவெறி ஏறியதா
சொக்காயைக் கிழித்திடவும் நாற்காலி வீசிடவும்
சொந்தபந்தம் சொகுசாக வாழ்ந்திடவும்
சோறளிக்கும் விவசாயி பசியாலே வாடிடவும்
சூழ்ச்சியிலே வலைபின்னி ஆளுவதா
தக்காரைத் தகவில்லார் தலையேறி மிதித்திடவும்
தர்மத்தை எள்ளிநகை யாடுவதா
தர்மஸம் ஸ்தாபனம் ஸ்தம்பித்துப் போவதா
தாமோத ராநர சிம்மதேவா *28.02.2017*

## 45. தேவதை!

தேவதை அவள் தேவதை

தென்றலாக வந்தென் எதிரில்
நின்ற போதும் தேவதை
தேவையில்லை என்று சொல்லிச்
சென்ற போதும் தேவதை

தேவதை அவள் தேவதை

ஆறு போல வந்தணைத்துக்
கொண்ட போதும் தேவதை
ஆறுதல் சொல்லாமலே
மறைந்த போதும் தேவதை

தேவதை அவள் தேவதை

நூறு கோடி முகங்களாய்
மலர்ந்து நிற்கும் தேவதை
வேறு வேறு மொழிகளாகப்
பேசுகின்ற தேவதை
தேரில் ஏறித் தெய்வமாகப்
போகும் போதும் தேவதை
மாரியாய்மண் நனைப்பதற்(கு)
இறங்கும் போதும் தேவதை

தேவதை அவள் தேவதை

புல்விளிம்பில் புன்னகைக்கும்
சின்ன துளியவள்
பூரணத்திலும் விரிந்து
செல்லும் வெளியவள்
சொல் கடந்த சூக்குமத்தின்
சொந்தக் காரியாம்
ஜோதியாகக் தோன்றும் தேச
முத்து மாரியாம்

தேவதை அவள் தேவதை

*11.05.2017*

## 46. கூட்டில் எது பறவை?

காற்றும் மின்னலுமாய்க்
கதைசொல்ல வந்தேனே
நேற்று நினைவுகளை நெஞ்சுருகத் தந்தேனே
போற்றிப் புகழ்வதற்கா
புலனழிந்து போவதற்கா
ஏற்றம் எனக்கில்லை எல்லாம் திருவருளே

சாட்டை சொடுக்கியவன் சங்கல்பத் தால்நானும்
ஆட்டம் போடுகிறேன் ஆலோலம் பாடுகிறேன்
வேட்டைக் காரனுக்கு வேறென்ன குறிக்கோளோ
வேடிக்கை காட்டுகிறான்
வேஷங்கள் போடுகிறேன்

கூத்து நடக்கையிலே
கூட நடிப்பார்கள்
கூத்து முடிந்ததுமே
கூட்டம் கலைந்துவிடும்
கூத்தன் அவனன்றிக் கூட்டில் எதுபறவை
கூத்து நடக்கட்டும் கொண்டுவா கவிதைகளை

*26.05.2017*

## 47. நடத்துகிறான் நாடகத்தை!

உறியேறித் திருடியவன் அரவ மேறி
ஒயிலாக நர்த்தனமே செய்த
பாதன்
கிரியேந்தி ஊர்காத்த சிறுவன் கேட்டோர்
கிறுகிறுக்கக் குழலிசைத்த பாலன் முன்பு
வரியேறி விடுமாறு அணிற்பு றத்தை
வருடியவன் புள்ளேறி விரைந்து சென்று
கரியொன்றை முதலைவாய் இருந்து மீட்ட
காருண்ய மூர்த்தியருட் கடலு மாமே

துதிப்பதை நிறுத்தாத பிள்ளைக் காகத்
தூண்பிளந்து சிங்கமென வந்தான் தந்தை
மதிக்காமல் தள்ளியதால் தவத்தில் ஆழ்ந்த
மகனுக்கு நட்சத்ரப் பதவி தந்தான்
நதிக்கரையில் கோபியர்க ளோடு சேர்ந்து
நடனங்கள் ஆடினான் தன்னைக் கொல்லச்
சதிசெய்த மாமனைத்தன் கைக ளாலே
தான்கொன்ற ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி யாமே

வானத்தில் அவன்வண்ணம் கடலி லும்தான்
வளையவரும் பூந்தென்றல் காற்றெ ழுப்பும்
கானத்தில் குழலோசை கனவி லும்தான்
கவிதையிதழ் மலர்வதற்குக் காத்திருக்கும்
ஞானமோ வாமனனின் வடிவம் தன்னை
ஞாபகத்தில் கொண்டு வரும் அணுவி லெல்லாம்
தானதுவாய் இருக்கின்ற வ்யாப கத்தைத்
தடம்பதித்து நடத்துகிறான் நாடகத்தை *29.05.2017*

## 48. நாம் நிரம்பி வழிகிறோம்

உன்றன்
பட்டு விரல்கள் பட்டும் படாமலும்
ஏந்தியிருக்கும் கோப்பையிலே

என்மேல்
பட்டுவிடக் கூடாதென்றே
குனிந்திருக்கும் பார்வையிலே

நான்
நிரம்பி வழிகிறேன்.

பருகத் தானே
என்று நினைத்தால்
உருகத் தானென
உணர வைக்க
நீயும் உள்ளே
விழுந்து கலக்கிறாய்
நாம்
நிரம்பி வழிகிறோம்

மேகப் பொதியைப்
பிளந்து கொண்டு
பாயும் மழையா
நெஞ்சிலிருந்து
பொங்கியெழும்
சுநாத இசையா
கண்விளிம்பில் விழுந்துடையக்
காத்திருக்கும் நீர்த்துளியா
ஒவ்வோர் அணுவுக்
குள்ளும் இருந்து

வெடித்துச் சிதறத்
துடிக்கும் உலகா

ஓ
நாம் நிரம்பி வழிகிறோம்
நம்மை
ஏந்திக் கொள்ளக் கோப்பை - யார்
கையில் இருக்கிறதோ
அவளும் விழுந்து கலந்துவிட - இப்
பயணம் தொடர்கிறதோ

நாம்
நிரம்பி வழிகிறோம்

*07.06.2017*

## 49. நிஜத்துக்கு வேலி இல்லை

யாரடா இங்கே பார்ப்பான்
யாரடா பறையன் வெற்றுப்
பேரடா பழம்பொய் மூட்டை
பேதைமை நீங்கி உண்மை
தேரடா பிரிக்கப் பார்க்கும்
தேள்விஷ நாக்கைச் சுக்கு
நூறாக வெட்டு சாதி
நுகத்தடிக் காவுன் தோள்கள்

சாதியை வைத்தே ஓட்டுச்
சாவடி நடத்து கின்றார்
ஆதியில் இருந்தோர் யாரென்
றாராய்ச்சி நடத்து கின்றார்
பாதியில் வந்தார் என்று
பசப்புரை நிகழ்த்து கின்றார்
நீதியில் கூடச் சாதி
நிழல்பட ரச்செய் தாரே

சமத்துவம் பேசு வோர்க்கும்
சாதிகள் வேண்டும் கோட்டை
அமர்விலும் சாதி வேண்டும்
அனைத்திலும் சாதி வேண்டும்
தமிழ்க்கனற் புலவன் எங்கே
தாசனும் எங்கே இந்தச்
சமுதாய அவலம் தீர
ஒருகோடி வீரர் வேண்டும்

ரத்தத்தில் சாதி என்ற
ரகசியக் குறியீ டுண்டா
சித்தத்தில் கீழ்மேல் என்று
செதுக்கிவைத் தாரோ முன்னோர்

அத்தனைப் பொய்யும் தீய
அரசியல் சூழ்ச்சி பேச்சுச்
சத்தத்தை ஒதுக்கி நல்ல
சாரத்தை உணர்ந்து கொள்வாய்

நிமிர்த்தடா நெஞ்சை இன்றே
நிகழ்த்தடா அறப்போர் சாதி
உமியினை விலக்கி உள்ளே
ஒளியினைப் பார டாநீ
அமிழ்ந்ததோ இருட்டுக் குள்ளே
அதலபா தாளம் இந்த
நிமிடமே எழுந்து வாடா
நிஜத்துக்கு வேலி யில்லை

*02.07.2017*

## 50. மௌனம் கலைந்துவிடு, மரண தேவதையே!

மௌனம் கலைந்து விடு
மரண தேவதையே
மௌனம் கலைந்து விடு

வந்தழைக்கும் நேரத்தை வார்த்தையிலே சொல்லிவிடு
எந்தநொடி என்னவிதம் எல்லாம் உரைத்துவிடு

மௌனம் கலைந்து விடு
மரண தேவதையே
மௌனம் கலைந்து விடு

தந்த உடலைத் தரையில் கிடத்திவிட்டு
உன்தோளில் ஏறிநான் உற்சாக மாய்வருவேன்
எந்தக் குறையும் எனக்கில்லை என்னுடைய
சிந்தை அலையோயச் சின்னாட்கள் வேண்டுமடி

மௌனம் கலைந்து விடு
மரண தேவதையே
மௌனம் கலைந்து விடு

உலகைத் திருத்த உதித்ததாய் என்னுள்ளே
கலகம் நடத்துகிற கர்வம் அடங்கட்டும்
கம்பன் கவி வீச்சில் கால்வாசி யேனும்நான்
எம்பிப் பிடிக்கின்ற ஏக்கம் மறையட்டும்

மௌனம் கலைந்து விடு
மரண தேவதையே
மௌனம் கலைந்து விடு

கட்டுண் டிருந்தகதை போதுமெனச் சொன்னால்
கட்டற்ற தென்னவெளி காட்டிவிடு சூசகமாய்
நிட்டையிலே கொஞ்சம் நிலைக்கப் பழகும்வரை
முட்டை உடைக்காதென் மோகம் அழித்துவிடு

மௌனம் கலைந்து விடு
மரண தேவதையே
மௌனம் கலைந்து விடு *03.07.2017*

## 51. எத்தனை எத்தனை நரேந்திரர்கள்!

எத்தனை எத்தனை நரேந்திரர்கள்
இத்தரை வந்தனரோ
அத்தனைப் பேரும் விவேகா னந்தர்
ஆகி விட்டனரோ

உட்குர லோசை உற்றுக் கேட்டவர்
கோடியில் ஒருவரே
கேட்டது மேகிளர்ந் தெழுந்தவ ரோபத்துக்
கோடியில் ஒருவரே
எழுந்தவுடன் தம் எதிரினிலே - குரு
நாதனைக் கண்டவர் சிலரே
கண்டதும் அதிலே கரைந்திடத் தம்மைத்
தந்தவர் வெகு சிலரே (எத்தனை)

கடவுளைக் கண்டால் போதும் கடமை
முடிந்த தென்றே அமர்ந்தவர் பலரே
மனிதரெல்லாரையும் கடவுள்களாக
மாற்றத் துணிந்த மாமுனி இவரே
“பசியால் ஒருவன் வாடும் வரை
சுவர்க்கம் எனக்குத் தேவையில்லை
நசிந்து கிடக்கும் ஏழைகளிடையே
நாராயணனைக் காண்கின்றேன்”
என்று முழக்கிய வீரத் துறவி
இவரே நம்மிலக்கு
வென்று முடிப்போம் இருக்கிற தேயவர்
விட்டுச் சென்ற விளக்கு (எத்தனை)

நினைத்தால் நீயும் முனைந்தால் நானும்
நிச்சயம் விவேகா னந்தர்களே
அனைத்தும் உள்ளே அடங்கிக்
கிடக்க
அல்லாடு கின்றோம் கூச்சலிலே

*04.07.2017*

## 52. விடுதலை

வந்தே மாதரம் என்ற மந்திரம்
வாங்கித் தந்த விடுதலை
என்தேசம் என்று எல்லாரும் சொல்லிப்
பூரிக்கின்ற விடுதலை

அடக்கி ஆள நினைப்பவ ரைத்தோற்
கடிக்க முடிந்த விடுதலை
அமைதியாக ஒரு புரட்சி
செய்து காட்டும் விடுதலை

சாதி மதங்கள் சமத்துவமாகச்
சட்டம் செய்யும் விடுதலை
நீதிமன்றத்துக்கும் நீதி
சொல்லிக் கொடுக்கும் விடுதலை

எத்தனை மக்கள் தடியடி பட்டும்
வீரத்தோடு தாங்கியது
எத்தனை இளைஞர் இரத்தம் சிந்தி
இன்னுயிர் ஈந்து வாங்கியது

கொதிக்கும் எண்ணைக் கொப்பறை தப்பி
முட்புதரில் தான் வீழ்ந்தோம்
முட்களுக்கிடையே மலர்களும் உண்டே
முன்னேற்றம் தான் தம்பி
"எப்படியும் நாம் எழுந்து விடுவோம்"
என்றோம் எழுந்து விட்டோம்
இனிநாம் என்றும் அடிமைகள் இல்லை
இது போதாதா தம்பி

தெய்வம் உண்டு தெரியும் என்பார்
தெரியா தென்பார் சிலபேர்
தேசம் உண்டு தேசம் ஒன்று
இந்தியாவே அதன்பேர்
பொய்வேற்றுமைகள் போயொழியட்டும்
உறுதி பூண்டு நிற்போம்
நம்மை நாமே ஆளும் பாடம்
நாளும் இங்கே கற்போம்

*15.08.2017*

## 53. புயலா, புன்சிரிப்பா!

வானம்தான் பாடியதா வானிலவு பாடியதா
தேனமுதை அள்ளிவந்து தென்றலிசை பாடியதா
சீனவெடி போல்மேகச் சிதறல்கள் பாடினவா
கானமழை எவ்விடத்தில் கருவுற்றுப் பிறக்கிறதோ

பூக்களெல்லாம் பாடுகின்ற பூபாளமா இல்லை
தாக்கும் புலிதானா தப்பிக்கும் மானினமா
ஆக்கும் அழிக்கும் அரைநொடியில் வந்துநமைக்
காக்கும் கடவுட் கருணைக் கடைவிழியா

நெஞ்சிலொரு மூலையிலே நீண்டெரியும் ஜ்வாலையிலே
வஞ்சிமுகம் தோன்றி மறைகின்ற மாயமிதா
கொஞ்சி அழைக்கும் குயிலா இனிமையெலாம்
தஞ்சம் அடையும் தமிழா கவிதையிதா

வியக்க வியக்க வியந்து முடியாத
நயமா ஒலியாயென் நாவில் நடனமிடும்
அயலேதும் இல்லா அனுபவமா ஆங்காரப்
புயலா புன்சிரிப்பா புத்தம் புதுமலரா

கவிதைக்குநிகர் கவிதையே இம்மாயப்
புவியிலது போல நிலைத்த பொருளிலையே
செவிக்கின்பம் சிந்தைக்கும் பேரின்பம் ஆனாலும்
தவிக்கும் மனத்தில் தவமிருக்கும் செஞ்சுடரே

*03.09.2017*

## 54. வெற்றுச் சொற்களா?

**(மனிதனைப் பீடித்திருக்கும் அவலங்களைப் பாடாமல் இயற்கையை வியக்கின்ற வெற்றுச் சொற்களே கவிதைகளா என்று நான் பெரிதும் மதிக்கும் ஒரு பெரியவர் கேட்டதும்...)**

வெற்றுச் சொற்களா? வெடிகுண்டு போட்டது போல்
சற்று மனம்குமுறிச் சடுதியிலே சொன்னவரே
ஒற்றைச் சொல்போதும் ஒருயுகப் புரட்சிவர
வற்றிப் போகுமோ வளமான என்கவிதை

நிலவும் மலரும்
கடலும் மலையும்
குலவும் எழிலும்
சுழலும் உலகும்
அனைத்திலும் நான்
அனைத்துமே நான்

என்னுள் எழுமொரு தீப்பொறி போதும்
அண்டமெல்லாம் திகுதிகுவென்று
பற்றி எரியும் பதறிச் சிதறும்

இயற்கை வேறு செயற்கை வேறா
இயக்கம் வேறு அமைதி வேறா

சொல்லொவ் வொன்றும் சுடரே - செய்யும்
செயலெல்லாமச் சுடரின் நிழலே

நிலவை மலரை நின்று ரசிக்கும்
மனத்தில் வஞ்சம் வரமுடியாது
இசையில் கரையும் இதயத்துக்குள்
சுயநலத்தின் சுவடும் ஏது

கவிதை என்றன் கை வாளில்லை
கவிதைக்கே நான் ஆளானேன் - புவி
சுழற்றுகின்ற வாளானேன்

*12.09.2017*

## 55. சுவாசிக்க முடியும் வரை...!

(ஷேக்ஸ்பியரின் தனிப்பாடல்களான “சானட்” களில் எனக்குத் தனி ஈடுபாடு உண்டு.
**Shall I compare thee to a summer’s day?** என்று தொடங்கும் சானட்டைத் தமிழில் தர முயன்றுள்ளேன்.)

கோடை நாளை உனக்குவமை
கூறத் துணியேன் - நீ
மேலும் அழகு இன்னும் இதம்

கோடையிளம் அரும்புகளை கோரக் காற்று உலுக்கி விடும்
கோடையின் குத்தகையும் காலத்தில் சிறிதளவே
சில சமயம் வான்சுடரும் சீற்றத்துடன் சுடும்
சில சமயம் அதனுடைய பொன்னொளியும் மங்கிவிடும்

எந்த எழிலும் சிற்சமயம் எழில் குன்றிப் போவதுண்டு
காரணம் இன்றியோ இயற்கை மாற்றங்களாலோ

ஆனால்
உன் நிரந்தர ஒளி மங்குவதே இல்லை
அது தன் எழிலை என்றும் இழப்பதில்லை
தன் நிழலில் நீயென்று
மரணம் கூட மார்தட்ட முடியாது

கால தேவனுக்கு இயற்றப்படும் அமர வரிகளில்
நீ வளர்கிறாய்
கண்கள் காண முடியும் வரை
மனிதர்கள் சுவாசிக்க முடியும் வரை
இந்தக் கவிதை வாழும்
உனக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கும்

*23.09.2017*

## 56. யாரும் நமக்குப் பகையில்லை

யாரும் நமக்குப் பகையில்லை
எல்லாரும் நம் நண்பர்களே
சீறும் சினமும் சிறுமதியும்
சிற்றின்பத்தில் மூழ்குவதால்
சேரும் காமப் பிசாசுகளும்
சிந்தை முழுக்க ஓட்டடையும்
யாவும் நமக்குப் பகைவர்களாம்
நமக்குள் ளேதான் போர்க்களமாம்

நம்தேகத்தைப் புதராக்கி
நச்சு விதைகள் தூவிவிடும்
சந்தேகத்தில் குழியமைத்துச்
சந்தோஷத்தைப் புதைத்துவிடும்
சிந்தா குலமாய் ஆணவமாய்
சிறுமைக் கெல்லாம் புகலிடமாய்
வென்று முடியா அசுரர்களாய்
வெறிகொண் டலையும் சலனங்களே

ஒன்று திமிரும் இன்னொன்றோ
ஓடி ஒளியும் மற்றொன்று
தின்று கொழுத்துத் தினவெடுத்துத்
தீநாக்குகளைப் புரளவிடும்
சென்று மறைந்த குப்பைகளில்
குன்றமைத்துக் குடியிருக்கும்
என்றிவற்றை வென்றிடுவோம்
ஏகாந்தத்தில் நின்றிடுவோம் *27.09.2017*

## 57. விளக்கேற்றுங்கள் வீதிகளில்

வெற்றிக் கரசன் வருகின்றான்
விளக்கேற்றுங்கள் வீதிகளில்

ஒற்றைக் கணையும் ஒரு மனையும்
ஒன்றே சொல்லும் கொண்டவனாம்
சற்றும் மாறா முகப்பொலிவு
தர்மம் பிறழா மனவலிவு
கற்றோர்க் கெல்லாம் களிப்பாகும்
கருணை பரிவு பேரறிவு
வெற்றிக் கரசன் வருகின்றான்
விளக்கேற் றுங்கள் வீதிகளில்

ஏற்றி வைக்கும் சுடரெல்லாம்
ஏந்திக் கொள்ளும் பேரெழிலாம்
காற்றுக் குள்ளும் அன்புமணம்
கமழச் செய்யும் தோழமையாம்
ஆற்று நீர்போல் அமைதியவன்
அருளில் விரிந்த சாகரமாம்
மாற்றுக் குறையாப் பொன்மயிலை
மீட்டு வரும் திவாகரனாம்

வெற்றிக் கரசன் வருகின்றான்
விளக்கேற் றுங்கள் வீதிகளில்

நேர்மை துணிவு நித்சலனம்
நிறைவு தூய்மை மாவீரம்
யார்க்கும் இல்லை என்னாமல்
அள்ளிக் கொடுக்கும் வள்ளண்மை
காக்கும் கடவுள் காருண்யம்
கரிய செம்மல் காகுத்தன்
வாக்கு மனம்மெய் எனமூன்றும்
ஒன்றி வணங்கி வாழ்த்திடுவோம்

வெற்றிக் கரசன் வருகின்றான்
விளக்கேற் றுங்கள் வீதிகளில்

அசுர குணங்கள் அழியட்டும்
ஆணவத்தேர் முறியட்டும்
பசும்புல் தோறும் பனித்துளிகள்
பார்க்கும் விழிகள் முழுதுமொளி
விசும்பில் கோடி விண்மீன்கள்
விளக்கேற்றும் பேருலகமெனும்
விசுவத்திற்கே திருநாளாம்
வீதியெங்கும் தீபங்களாம்

வெற்றிக் கரசன் வருகின்றான்
விளக்கேற் றுங்கள் உள்ளமெலாம்

*17.10.2017*

## 58. நான் வைத்த வெடி....!

நான்வைத்த வெடியின்னும் வெடிக்க வில்லை
நம்பிக்கை நெருப்பின்னும் அணைய வில்லை
வான்தொட்டும் பூவாணம் பொழிய வில்லை
மறுமுனைக்குத் தீயின்னும் படர வில்லை
ஏனென்ற கேள்விக்கு விடையு மில்லை
ஏமாற்றம் இல்லையொரு புதிரு மில்லை
ஊன்தொட்ட உணர்ச்சித்தீ உயிர்வ ரைக்கும்
ஊடுருவிச் செல்வதற்கே காத்தி ருப்பேன்

ஈரத்தில் நனைந்ததிரி பரவா யில்லை
என்றேனும் தீப்பற்றிக் கொள்ளும் எங்கோ
ஓரத்தில் உள்ளத்தின் மூலை ஒன்றில்
ஒளிந்திருக்கும் ஒருசிறிய தீபம் போதும்
வீரத்தில் மூப்பில்லை என்று சொன்ன
வித்தகனை நினைத்தாலே தீப்பி ழம்புச்
சாறிங்கே வெள்ளமெனச் சீறிப் பாயும்
சத்தியமாய் ஒருபுரட்சி வெடிக்கக் கூடும்

நடப்பவர்கள் நடக்கட்டும் நமக்கேன் என்று
கிடப்பவர்கள் கிடக்கட்டும் செவியெ னக்குக்
கொடுக்கமன மில்லாத அவச ரத்தில்
குடுகுடுவென் றோடுபவர் ஓடட் டும்விண்
தடுத்தாலும் அதைப்பொத்துக் கிழித்துச் செல்லும்
சக்தியுண்டு சொல்லுக்குத் தளர மாட்டேன்
விடுக்கின்ற கணைகள்வீ ணாகா மல்தீ
விளைக்கின்ற நாளொருநாள் விடியு மன்றோ

*19.10.2017*

## 59. இந்த மழை போதுமா?

இந்த மழை போதுமா இன்னும் இன்னும் வேண்டுமா

சந்த மழை சிந்து மழை
சலசலக்கும் ஓடையிலே
வந்து விழும் மலர்கள் போல
வண்ண வண்ணக் கவிதை மழை
வேத மழை நாத மழை
கீத மழை மாதவனின்
பாதமலர் பரவுகின்ற
பக்திமழை பாச மழை
எந்த மழை வந்த போதும்
ஏழைகளின் குடில்களிலே
சின்ன விளக் கேற்றியுண
வன்னமிடப் பொழிகின்ற
வான மழை போலாகுமா
எந்த
வாழ்த்தும் இதன் மேலாகுமா

இந்த மழை போதுமா இன்னும் இன்னும் வேண்டுமா

வீட்டு வாசல் கதவுகளை
மீட்டும் இசையாக - மலர்த்
தோட்டமெங்கும் துள்ளித் துள்ளி
ஓடுகின்ற காற்றில் - மணம்
கூட்டுகின்ற பூமழைக்குக்
குவலயத்தில் இல்லையிணை
கூட்டமுதப் பாட்டெடுத்துக்
கும்பிடுவோம் மாமழையை

இந்த மழை போதுமா இன்னும் இன்னும் வேண்டுமா

எங்கள் வினை எங்கள் பிழை
ஏமாற்று நச்சு விதை
எங்கும் எதிலும் சுயநலமே
காணுகின்ற பேராசை

ஒண்ட வந்த பூமியையே
நாசமாக்கும் கொள்ளையராய்க்
கண்டபடி வாழுகிறோம்
சண்டைகளும் போடுகிறோம்
எங்கள் செயல் கண்டு சினம்
கொள்வதிலும் நியாயமுண்டு
பொங்கலிட்டுப் பூஜிப்போம்
பொறுத்தருள வேண்டும் மாரி
கூழாக்க வருபவள் நீ
கொடுஞ்சினத்தில் சூறையாடிப்
பாழாக்க வேண்டுமா
பாராளும் மகமாயி

*03.11.2017*

## 60. நலமெல்லாம் நீயே!

எந்நலமும் வேண்டேன்நான் இவ்வுலகை வாழ்விக்கும்
சொன்னலமே வேண்டித் தொழுவேனுன் - கன்னலமு
தானமொழி கானமொழி வானமொழி வாழ்வுதரும்
ஞானமொழி ஒன்றே நலம்

நலமெல்லாம் நீயேயென் நாவை அசைத்துக்
கலகலவென் றூற்று கவிதை - உலகத்தை
வாழ்விக்கும் வாக்குத(வு)என் வாக்கெல்லாம் உன்னுடைய
ஆக்கினையாய் ஆக்கி அருள்

அருளே அறமே அமைதித் தலமே
உருவருவாய் நெஞ்சில் உதிக்கும் - குருமணியே
எந்நாளும் என்னை வழிநடத்தென் நாவினிலுன்
பண்ணாள்வ தேயென் பணி

பணிதா பணிவுதா உன்பத்ம பாதம்
பணியும் வரம்தா பரமா - இனியும்
உடலுக்கே அன்றி உலகுக் குழைக்கும்
திடமே அருள்க தினம்

தினவகல வேண்டும் திளைக்குமிம் மாயக்
கனவகல வேண்டும் கருணைப் - புனலே
புவியைப் புரக்கும் புதுச்சொற்க ளாலென்
கவியை ஒளிசெய்க வே *16.11.2017*

## 61. விடை சொல்லாத மௌனம்

எதற்கென்ற கேள்விக்கு விடை சொல்லாமல்
இருக்கின்ற மௌனமே கவிதை என்பேன்
அதற்கென்று மொழியுண்டு அம்மொ ழிக்குள்
அலைபாய வழியுண்டு அலைபாய்ந் தாலும்
முதற்சொல்லின் வெடிப்பினிலே முத்து முத்தாய்
முளைத்துவரும் பலசொற்கள் அணிதிரண்டு
சிதறி விட்ட தேங்காயின் சில்லுகள் போல்
சிலநேரம் பசிதணியச் செய்வதுண்டு

காற்றைச் சொடுக்கும் கவலை தடுக்கும்
கணத்தில் உலகம் முழுதும் அளக்கும்
ஆற்றில் மிதக்கும் அரவணை யில்கால்
நீட்டிப் படுக்கும் நிலவை அணிந்து
காட்சி கொடுக்கும் கனவுக்குள் தீ
மூட்டிச் சிரிக்கும் முழுமை அதுவே

முரத்தைக் கொண்டு புலியைக் கூடத்
துரத்தி விடும் வீரம் - ஒரு
முத்தக் கணத்தில் முழுமையாகக்
கரைந்து போகும் இதயம்
வறண்ட பாலை வெடிப்புகளில் நடம்
ஆடும் மழைப்பதங்கள்
வளர்ந்து தேய்ந்து வளரும் நிலா
வடிவ மற்ற தென்றல்

கவிதைக் கென்ன பாராட்டு - அது
கயிற்றில் நடக்கும் வித்தையா
உச்ச ஸ்வரத்தை எட்டிப் பிடிக்கும்
கச்சேரி கலகலப்பா
கவிதை என்றால் காளி - அங்கே

மூளைக்கென்ன வேலை - அது
கோடிக் கோடி நட்சத்திரங்கள்
மாலையாகச் சூடி
நடனமாடும் போது பூமிப்
பந்தில் என்ன சத்தம்

சிதறும் விண்மீன் ஒவ்வொன்றும்
சின்னஞ் சிறிய முத்துகளாம்
பதறும் அண்டக் கோளங்கள்
பலவண்ணப் பூங் கொத்துகளாம்
உதறி எறிந்த மேலாடை
ஒயில் மிகுந்த சிற்றோடை
உதயம் இரவு பகலெல்லாம்
கண்ணிமைக்கும் ஒருகணமே

அம்மா என்றால் ஒருகவளம்
அன்புத் தங்கை என்றாலோ
கும்மாளமிடும் குதூகலமாம்
கசிந்து கசிந்து காதலுடன்
செம்மாந் தொருமுத் தம்தந்தால்
சேர்த்தணைக்கும் பேரெழிலாம்
சும்மா இருக்கப் பயின்றாலுட்
சோதியாக மலர்பவளாம்

கவிதையென் றாலும் காளியென் றாலும்
காதுகளில் ஒரு ரீங்காரம்
செவிகடந்துயிர் ஊடுருவிச்சென்
றோசை எழுப்பும் ஓங்காரம்
புவிநனைத்துப் புதுமை செய்யும்
பூமழையாகச் சொற்களிலே
அவளெழுந்து நடனமிட
ஆனந்தம் பரமானந்தமே *19.11.2017*

## 62. ஒரு புல்லின் வளைவில்...

(நேற்றிரவு இசைக்கவி ரமணன் ஒரு பாடல் பதிந்திருந்தான், அதன் அதி அற்புதமான முதல் வரி என்னை முற்றுகை இட்டுக் கொண்டு வந்த பாடல் இது. அதே முதல் வரியோடு இந்தக் கவிதை தொடங்குகிறது.)

"காற்றொரு புல்லின் வளைவில் சாய்ந்து
காலை நீட்டிக் கொண்டது"
நேற்றொரு சொல்லில் நெஞ்சம் தோய்ந்து
வசமாய் மாட்டிக் கொண்டது
கூற்றொரு வேளை கூடு துறக்கக்
கூப்பிடுகின்ற போதும்
ஆற்றொழுக் காக அந்த வரியை
அப்படி யேமனம் பாடும்

உடலை நீங்கிச் செல்லும் உயிரும்
ஒருபுல் வளைவில் சாய்ந்து
திடலெல் லாமொரு சிறிய துளியாய்
ஆனது போல் கிடக்கும்
தொடவரு கின்ற சூரிய விரலைச்
சுகமாய் அதுவர வேற்கும்
அட இது தானிவ் வாழ்க்கை என்றே
அங்கொரு சேவல் கூவும்

ஒருபுல் போதும் சாய்ந்து படுக்க
ஒருசொல் போதும் விழா எடுக்க
ஒருமைக் குள்ளே பன்மை அடக்கம்
ஒன்றி லிருந்தின் னொன்று தொடக்கம் *23.11.2017*

## 63. வாள் தருகின்றேன், வாங்கிக் கொள்

வாள் தருகின்றேன் வாங்கிக் கொள்
பகைவன் சிரத்தைக் கொய்வதற்கில்லை
பகைமை உணர்வை வேரொடு சாய்க்க

உனக்கும் எனக்கும் இடையில் நின்று
கனக்கும் பாறையைப் பொடிப்பொடி யாக்க

கருத்து மோதல் கைகலப் பாகிக்
கலகம் செய்யும் நிலையை மாற்ற

ஜாதி மதங்கள் சாயம் பூசிக்
கடுமையான சொற்கள் பேசி
அடித்துக் கொண்டு மாய்ந்தது போதும்
கட்சிகளாகப் பிரிந்து நின்று
வெட்டிக் கொண்டு வீழ்ந்தது போதும்

யார்கள வதிகம்
யார்கொலை அதிகம்
யார்மா வீரர்கள்
யார்தலைவர்கள்
இப்படியெல்லாம் சண்டையிட்டு
மோதல் வளர்த்தது போதும் போதும்

யார்நம் பணியாள் யார்நமக் கூழியன்
இதில்நமக் குள்ஏன் இத்தனைப் பிளவு

எம்மொழி நம்மொழி எம்மொழி செம்மொழி
நம்மவர் அயலார் இனம், நிறம், இடம் என
எத்தனை எத்தனைக் குறுக்குச் சுவர்கள்
மனத்துக்குள் நாம் எழுப்பி விட்டோம்

உடைக்கப் போதும் ஒரே கணம்
உடைந்தால் யாரும் ஒரே இனம்
கிடைக்கப் போகும் வெற்றி நமதே

கிழக்கு வெளுக்கத் தொடங்கி விட்டது
துயில்கலைந் தெழுந்திடு தோழா
துணிவுடன் நிமிர்ந்து நின்றிடு தோழி

வாள்தரு கின்றேன் வாங்கிக் கொள்
தோழமை என்பது மந்திரச் சொல்

*26.11.2017*

## 64. கையூட்டம்மா, கையூட்டு!

["கை நீட்டம்மா கை நீட்டு!
லஞ்சம் கேட்டே கை நீட்டு"

என்று தொடங்கும் அங்கதப் பாடலொன்றைப் பெரியவர் திரு.பி.எஸ்.ராகவன் முகநூலில் எழுதியிருந்தார். அதைப் படித்த வேகத்தில் வந்த பாட்டிது.]

கையூட்டம்மா கையூட்டு
லஞ்சத்தின் பெயர் கையூட்டு

கிழவி காலை அமுக்கிவிடக்
கேட்டாயே நீ சாக்லேட்டு
அன்று முதல் இன்று வரை
எங்கும் எதிலும் கையூட்டு (கையூட்டம்மா)

பொய்யை மெய்யாய் மாற்றுகிற
புதிய வித்தை கையூட்டு
செய்யும் தொழில்கள் யாவினையும்
சீர்குலைக் கின்ற கையூட்டு (கையூட்டம்மா)

பிறப்பில் இருந்து மரணம் வரை
பின்தொடரும் நாய் கையூட்டு
ஏழை எளியோர் அடிவயிற்றில்
எட்டி உதைக்கும் கையூட்டு (கையூட்டம்மா)

வெட்கம் கெட்ட அரசியலாம்
விதவிதமான கட்சிகளாம்
வீதியில் நின்று நீதியைக் கூட
விற்கத் துணியும் தலைவர்களாம்
சட்டம் போட வருவாரம்
சண்டை போட்டுப் போவாராம்
சாதி மதத்தீ நாக்குகளை
ஊதி ஊதி வளர்ப்பாராம்
கேடு கெட்ட அரசியலின்
செல்லக் குழந்தை கையூட்டு
நாடு வாழ நாம்வாழ
லஞ்சப் பேயை நீயோட்டு (கையூட்டம்மா)

லஞ்சப் பேயை ஒட்டிவிட
வைக்க வேண்டும் அதிர்வேட்டு
லஞ்சம் கேட்டு நீட்டுகிற
கையையெல்லாம் எரியூட்டு
(கையூட்டம்மா) *04.12.2017*

## 65. நானொரு சிற்றோடை!

நானொரு சிற்றோடை - உங்கள்
ஞாபக வனத்தின் வளைவுகளில் - ஒயி
லாக நெளிந்து செல்கின்றேன் - ஒரு
ராத்திரி நேர மௌனத்தில் - சில
வார்த்தைகளும் நான் சொல்கின்றேன் - ஆம்
நானொரு சிற்றோடை

நானொரு கொடிமின்னல் - ரத்த
நாளங்களில் எழும் தாளங்களில்- நான்
நாட்டியம் ஆடுகிறேன் - சிறு
மின்மினி போலொரு கணம் தோன்றி - யுக
மேன்மையைப் பாடுகிறேன் - ஆம்
நானொரு கொடிமின்னல்

நானொரு சன்யாசி - உலக
நன்மையை மட்டும் யாசிப்பதனால்
நட்பையே என்றும் ஸ்வாசிப்பதனால்
நானொரு சன்யாசி

எது நானில்லை
எதில் நானில்லை
எல்லாம் எனக்குள் இருப்பதனால்
என்னை உலகம் பொறுப்பதனால்
நானொரு தெய்வமகன் - உங்கள்
நெஞ்சில் நுழைந்து கானம் பொழியக்
காத்திருக்கின்றேன் கவிதையுடன் - ஆம்
நானொரு தெய்வமகன்

*14.12.2017*

## 66. போரூர் ராணி

**(இன்று காலை நான் பதிவு செய்த “நானொரு சிற்றோடை” என்ற கவிதையைப் படித்து விட்டு போரூரில் வசிக்கும் ஒரு தோழி பாராட்டுரை பதிந்திருந்தாள். “ஆஹா, யாரங்கே, இந்தக் கவிஞனுக்கு நட்சத்திர மாலை அணிவியுங்கள். இது போரூர் ராணியின் கட்டளை” என்று எழுதியிருந்தாள். அதைப் படித்தவுடன் நான் தோழிக்கு அனுப்பிய பதில் கவிதை இது.)**

போரூர் ராணி போர் ஊர் ராணி
- நான்
போற்றும் புலவன் திருவல்லிக் கேணி

யாரூர் ஆயினும் ஓரூர் என்றே
உரைத்த கணியன் உற்ற தோழன்
சீரோர் ஏழால் ஜகத்தை அளந்த
தாடிக் கிழவனோ என் தாதன் (போரூர் ராணி)

இனம்மதம் எல்லாம் கடந்த ஞானி
இளங்கோ அடிகள் என்சிற் றப்பன் (போரூர் ராணி)

தருமத் துக்கே தாயா னவனைக்
கருமேக நிறக் கடவுளைத் தனது
காவிய நாயக னாக்கிய கம்பனை
வம்புக் கிழுத்த ஏரோட்டி நானே
கானகப் பொந்தில் சிறகு விரித்த
அக்கினிக் குஞ்சின் எஞ்சிய பொறிநான்
- என்
சொல்லெல் லாம்சுடு நெருப்பாய் மாறி
விழக்கூடும் விழுந்த கணமே
மலர்க ளாக மாறி மீண்டும்
எழக்கூடும் நட்சத்தி ரங்க
ளாகப் பறந்து வானை அடைந்து
சுழன்று சுழன்றுபே ரண்டங்களாகி
விடக்கூடும் என்றோ ஒருநாள்
மெல்லிய இசையாய் மேவியுன் இதயம்
தொடக்கூடும் தொடரட்டு மிந்தக்
காலச் சுழலின் களிநடம் நாளைக்
காலை வரையிவ் வூழிக் கனவே

*14.12.2017*

## 67. நலம் தருகின்ற அன்னையே!

நலம் தருகின்ற அன்னையே
நம்பித் தொழுதேன் உன்னையே
நாடு மொழியென்று - நான்
பாடும் கவியெல்லாம் - உன்
தோடு செவிகண்ட
பின்னையே

ஏடுகள் நூறு வாசித்தும்
ஏதும் பயனில்லை
ஏகாந்தத்தை யாசித்தும்
யோக நிலையில்லை
கூடு பிரிந்த குஞ்சுபோல்
குழம்பித் தவிக்கையிலே
கொள்ளை எழிலோ (டு) என்னையாட்
கொண்ட தயாபரியே

நலம் தருகின்ற அன்னையே
நம்பித் தொழுதேன் உன்னையே

வெள்ளைக் கமல மேடையிலே
வீற்றி ருப்பாய் வீணையுடன்
அள்ளக் குறையா அமுதமென
அவத ரித்தாய் பாற்கடலில்
புள்ளாண் டான்புல் லாங்குழலில்
பூரித்தாய் நீ பூமித்தாய்
மள்ளர் மழவர் மற்றோர்க்கு
மாரித்தாய் நீ மேரித்தாய்

நலம் தருகின்ற அன்னையே
நம்பித் தொழுதேன் உன்னையே *23.12.2017*

## 68. வீடென்றேன்...

வீடென்றேன் அவள் வெளியென்றாள்
விரைந்து வந்து
கூடென்றேன் அதைப் பிரியென்றாள்
குலவு கீதம்
பாடென்றேன் ஒரு
பரவசத்தில் தழல் வளர்த்துத்
தேடென்றாள் புலன்
ஐந்திலும் - தேன்
பொழிகின்றாளே

யாரென்றேன் நுழைந்து பாரென்றாள்
நுழைய நுழைய
நூறு கோடி யுகம் வளர்ந்து
வளர்ந்து கொண்டே இருக்கிறது
தேரா தெய்வச் சிலையா நெஞ்சம்
தேடிக் கொண்டே இருக்கிறது
போராடாமல் ஒரு மௌனத்தில்
புதைந்து போக முடிகிறதே

விதையாய் இருந்து விருட்சமாக
வெளியே வருபவள் அவளா
வெளியும் ஒளியும் பனியின் துளியும்
கலந்தெழுந்த சுடரா
எதையோ நெஞ்சம் முணுமுணுத்தாலும்
ஏற்றுக் கொள்ளும் அருளா
எல்லா மான பின்னும் எங்கும்
நில்லா தோடும் புனலா

கனவு கலையப் போகிறது
காகிதத்தை எடுத்துவை
கவிதை எழுத வேண்டுமென
நீளத் துடித்த தெனதுகை
எழுத எழுத எழுத்தெல்லாம்
நடனமாடும் மேடையாய்
மாறினேன் பின் ஓடினேன்
அவளுடன் நீ ரோடையாய்

*24-12-2017*

## 69. ருத்ரா! ஆ, ருத்ரா!

மானொரு கரம் மழுவொரு கரம்
மதியொடு சிரம் நதியொரு புறம்
வானக முழு தும்விரி சடை
வானவர் தொழும் வாகன விடை

ருத்ர ருத்ர ஆருத்ரா - தா
ருகவன குருமணி சின்முத்ரா

முன்னெரித்தது
முறுவலில் திரிபுரம்
கண்ணெரித்தது
காம களேபரம்
பின்னெரித்தது
மாமனின் ஆணவம்
கண் நிறைத்தது
களிநடம் புரிசிவம்

ருத்ர ருத்ர ஆருத்ரா
புலியும் அரவும்கண் டின்புற்றார்

கரியுரி தோலது
போர்த்திய லாவகம்
நரிபரி ஆக்கி
நடத்திய நாடகம்
ஹரியொடு நடனம் - பஸ்
மாசுர தகனம்
விரிகதி ரெனவொளி
விளங்கு திவாகரம்

ருத்ர ருத்ர ஆருத்ரா - பஞ்
சாட்சரமே பரமேஸ்வரா

கனக சபையிலும்
காட்டிலும் மேட்டிலும்
உருக வைத்திடு
நால்வர்தம் பாட்டிலும்
ஆடுடையாய் - செவித்
தோடுடையாய் - கர
வோடுடையாய் - ஒரு
மாடுடையாய் - ஹர

ருத்ர ருத்ர ஆருத்ரா - ஹே
விஸ்வ ரூப மஹேஸ்வரா

*02.01.2018*

## 70. வெளியை அளக்கும் ஒளியும் நீதான்

எனக்குள் இருந்து கொண்டே
எத்தனைப் பாடல்கள் பாடுகிறாய்
இதய வனத்தின் இசை மலர்களை
அள்ளி எடுத்துச் சூடுகிறாய்
ஒரு கணத்தை உடைக்கின்றாய் - ஒரு
புதிய உலகம் படைக்கின்றாய்
இரு இரு உன்னை என்றாவ தொருநாள் - வெளியே
இழுத்து வந்து நிறுத்துகிறேன்

நிற்பாயா உன்னை
ஏந்திக் கொள்ள பூமி என்ன
சொற் பாயா விரிக்கிறது
புற் பாயில் படுத்துறங்கக்
கற்பாயா ஏ கவிதா - என்
மூச்சுக் காற்றை கனக்கச் செய்து
முனக வைக்கும் நீலி
பேச்சுக் குட்டை வற்றிய பிறகு
முழுநில வாயெழும் தேவி - நீ
வெளியே வந்தால் வெளியும் நீதான்
வெளியை அளக்கும் ஒளியும் நீதான்
உன்னை வெளியே அனுப்பிய பிறகு
என்னை எங்கே தேடுவது - யாரும்
எதைத்தான் இங்கே பாடுவது *05.01.2018*

## 71. கவிஞர், கவிஞர், கவிஞர்களாம்!

சொல்லில் மூழ்கிச் செயலிழக்கும்
சோம்பே றிகளா நாங்கள்
சொல்லில் உயிர்த்திவ்
வுலகை இயக்கும்
சூத்திர தாரிகளாம்
சூல் மேகங்கள் சூழச் செய்யும்
வானம்பாடிகளாம்
காலப் புரவி கடிவா ளத்தைக்
கையில் எடுப்பவராம்

கவிஞர் கவிஞர் கவிஞர்களாம்

நெஞ்சைப் பஞ்சாய்த் திரித்து தீபம்
ஏற்றத் தெரிந்தவராம்
நெருப்பைக் கூடப் பிழிந்தெடுத்துப்
பருக வைப்பவராம்
கொஞ்சும் இசையில் கொள்ளை யழகில்
குதூக லிப்பவராம்
கோடுகள் இல்லா உலகம் காணக்
குரல் கொடுப்பவராம்

கவிஞர் கவிஞர் கவிஞர்களாம்

தொடுவா னத்தைத் தொட முயன்று
தோற்றுக் களிப்பவராம்
சொற்க ளுக்குள் ஏறிக் கொள்ளக்
கூவி யழைப்பவராம்
கடுமை இனிமை கலந்து கொடுக்கும்
சித்த மருத்துவராம்
கற்பனையாலே அற்புதமான
சிற்பம் இழைப்பவராம்

கவிஞர் கவிஞர் கவிஞர்களாம்

நட்சத் திரங்க ளோடு கலந்து
பேசி மகிழ்பவராம்
சொற்சித் திரங்கள் உயிர்பெற் றுலவச்
சொடுக்கி விடுபவராம்
கட்சி பேசிச் சண்டையிட்டும்
கட்டிக் கொள்பவராம்
கல்லைக் கூடக் கனியச் செய்யும்
கருணை யுள்ளவராம்

கவிஞர் கவிஞர் கவிஞர்களாம்

உணர்வுத் தழலை ஊதி அன்பில்
உணவு சமைப்பவராம்
ஒரு நொடிக்குள் உலகம் முழுதும்
அளக்கும் திறத்தவராம்
சிதறிக் கிடக்கும் உயிர்களை ஒன்று
சேர்க்கும் வலியவராம்
சின்ன குழந்தை போலே யார்க்கும்
சிக்கும் எளியவராம்

கவிஞர் கவிஞர் கவிஞர்களாம்
கனவுக் குருவம் தருபவராம்

*07.01.2018*

## 72. எதிர்காலம்

எதிர்காலம் இலை உதிர்காலம்
யார் சொன்னார் பெரும் புதிர் காலம்

காலம் விழுங்கிய கணப்பொழு தெல்லாம்
ஞால வெளியில் மறைந்து விட்டாலும்
ஞாபகத்தின் ஏடுகளில்
பதிந்தபடிக் காத்திருக்கும்
காலம் வரும்போது கண் மலரத்தான்
காத்திருப்பதும் சற்றுக் கண் வளரத்தான் (எதிர்காலம்)

காலத்துக்கு மூலமில்லை
காலம் ஒரு சக்கரம்
தொடக்கமின்றி முடிவுமின்றித்
தொடர்ந்து சுழலும் அற்புதம்
சக்கரத்தை ஏந்திக் கொண்டு
நிற்பவன் யார் தெரிகிறதா
அண்டங்கள் உண்டுமிழ்ந்து
விளையாடும் பிள்ளையவன்
அனுமானம் அஹங்காரம்
அடங்குகிற எல்லையவன்

எதிர்காலம் ஒளிக் கதிர்காலம்
எல்லாமாகிய கடல்நீலம் *24.01.2018*

## 73. நானும் தமிழன்

நானும் தமிழன் நானும் தமிழன்
நாளைய உலகை நம்பும் மனிதன் (நானும்)

யாதும் ஊரே யாவரும் உறவே
இதுவே பழமைத் தமிழின் விரிவே (நானும்)

பிறவிப் பெருங்கடல் நீந்திச் செல்ல
பிறிதின் நோய் என் நோயென்று கொள்ளக்
குறள்வழி நடக்க முயல்பவன் நான்
குறுமுனிவன் தமிழ் பயில்பவன் நான்
பைந்தமிழே உலகின் பக்தி மொழி - ஆதி
பகவனைச் சேரும் புனித வழி
உலகுக்கெல்லாம் ஒரு புதிய நெறி - காட்ட
உதித்தது பாரதி என்ற ஒளி (நானும்)

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தந்த வள்ளல்கள் என் தந்தையராம்
எல்லா உயிர்களும் ஒன்றே என்றே
உருகிய கருணைச் சிந்தையராம்
ஓருயிர்க்கும் இடர் செய்வதில்லை என்ற
உறுதி தருவது சன்மார்க்கம்
வீரம் வெறும் விளையாட்டில் இல்லை - அறம்
விலகா திருப்பதே சங்கல்பம் (நானும்)

என்னுயிர் போயினும் எப்படியாயினும்
நல்லது செய்வேன் அன்போடு
பேதமில்லாத ஒற்றுமையோடு
வாழ்வது தான் என் பண்பாடு (நானும்)

*16.02.2018*

## 74. விளக்கும் நீ, இலக்கும் நீயே

தொடும்தொலைவில் இல்லைநீ ஆனால் நெஞ்சில்
தோகைவிரித் தாடுகிறாய் மூச்சுக் காற்றுப்
படும்தொலைவில் இல்லைநீ பாட்டுக் குள்ளே
பதம்வைத்து நடிக்கின்றாய் என்சொல் உன்னைச்
சுடும்தொலைவில் இல்லைநீ சொற்களுக்குள்
சுடரேற்று கின்றாயே எனைக்கை விட்டு
விடும்தொலைவில் இல்லைநீ விளங்கிக் கொள்ள
முடியாத விளக்கும்நீ இலக்கும் நீயே

ஒளிமயம்நீ உண்மைநீ இருளும் நீயே
ஓங்காரப் பொய்கையிலே மலர்ந்து வெட்ட
வெளியாக விரிகின்ற அதிச யம்நீ
வெளியற்ற புள்ளியும்நீ அனுப வம்நீ
துளித்துளியாய் விழுகின்ற தூரலும் நீ
தொடுவானம் புயல் வெள்ளம் எல்லாம் நீயே
தெளிவான பாற்கடலில் அமுதமாக
எழுந்துவரும் திருமகளின் ஒயிலும் நீயே

உயிர்வீணை மீட்டுகின்றாய் உள்ள மென்ற
தாமரையில் அமர்கின்றாய் ஒளிசேர்க் கின்றாய்
தயிர்வெண்ணை திருடுகிற தளிர் விரல்கள்
தடவுகிற குழலாக இசைபொழிந்து
மயிற்பீலி அசையநடம் ஆடு கின்றாய்
மதியரவு நதிபுரள அம்பலத்தில்
ஒயிலாட்டம் ஆடுகிறாய் ஒருகணத்தில்
ஓஹோவென் றேசிரித்து வெடிக்கின்றாயே

நீயாணா பெண்தானா விரியும் வானா
நெஞ்சத்தில் அலைமோதும் அநுமானங்கள்
தீப்பற்றி எரிகின்ற கானகத்தில்
சிறகடிக்கும் தீயுண்ணிப் பறவை நீயா
ஒருநொடியில் என்னுள்ளே நில நடுக்கம்
உண்டாக்கும் மாகாளி வடிவா என்னைத்
தாயாக அரவணைக்கும் தயவா எங்கோ
தனியாகச் சிரிக்கின்ற பிச்சிப் பூவா

என்பாடு கிடக்கட்டும் ஏனிவ் வஞ்சம்
எத்தனையோ குழந்தைகளுன் மடியில் தஞ்சம்
அன்புக்கும் உணவுக்கும் ஏங்கிச் சாகும்
அவலத்தில் அவர்களைநீ தள்ளலாமா
என்புருகப் பாடுகிறேன் உன்நெஞ் சென்ன
எள்ளளவும் அசையாத பாறாங் கல்லா
மின்னலென விரைந்தெழுந்து வந்திம் மண்ணில்
மீண்டுமொரு சொர்க்கத்தை நிறுவு வாயே

*25.02.2018*

## 75. தனித்து நில்!

(மஹாகவி டகூரின் பாடல், "Jodi tor dhak sunay kau na" (if no one answers your call walk alone) என்ற பாடலைப் படித்ததும் வந்த கவிதை இது.)

தனிமையை நீயேன் தவிர்க்க வேண்டும்
தனிமைக்குள்ளே செல்
தனிமைக்குள்ளே எத்தனைக் குரல்கள்
தலை நிமிர்ந்து நில்

ஈரடி ஈரடி யாக உலகை
இழை பிரிக்கின்ற முனிவர் - வண்ணச்
சீரடி பிரிந்த சிலம்பின் ஒலியிலே
சித்திரம் தீட்டும் புலவர் - அந்தக்
கார்முகில் வண்ணக் கடவுளைக் கண்ணிலே
காட்டும் கவிதைக் கரசர் - புதிய
போர்முர சாகப் புரட்சி நெருப்பு
மூட்டிய மீசைக் கவிஞர்

தனிமைக் குள்ளே எத்தனைக் குரல்கள்
தலை நிமிர்ந்து நில்
தனிமையை நீயேன் தவிர்க்க வேண்டும்
தனிமைக்குள்ளே செல்

காளிதாசனின் கற்பனை வளமும்
ஷேக்ஸ்பியர் காட்டும் நாடகப் பாங்கும்
மோனலிசாவின் புன்னகைக் கீற்றும்
பிக்காஸோ தீட்டிய கோடுகள் யாவும்
தியாகராஜரின் நாத யோகமும்
சுப்புலட் சுமியின் கீத போகமும்
அடடா எத்தனை அலங்காரங்கள்
தனிமையரசின் தகத்தகாயங்கள்

தனிமையை நீயேன் தவிர்க்க வேண்டும்
தனிமைக்குள்ளே செல்
தனிமைக்குள்ளே எத்தனைச் சுடர்கள்
தலை நிமிர்ந்து நில்

நீயே பலராய்ப் பிரிந்து நின்று
தர்க்கம் செய்து பழகு
தனிமை என்பது கண்ணாடி - அது
காட்டுவதே உன் அழகு

தனிமைக் குள்ளே தனிமை யில்லை
தயக்கமின்றிச் செல்
தனிமையே நீ உருவாகும் களம்
என்றும் தனித்து நில் *11.03.2018*

## 76. கணம்தோறும் கவிதைகள்!

கணம்தோறும் கவிதைகள் புதிய தோன்றும்
கணம்தோறும் புதியவிதை நெஞ்சில் ஊன்றும்
கணம்தோறும் கற்பனையில் தீப மேற்றிக்
கனவுகளின் திரை விலக்கி ஒளி கொடுக்கும்
குணமின்றி உருவின்றி வண்ணம் இன்றிக்
குடியிருக்கும் உண்மையினைக் காண வைக்கும்
கணம்தோறும் உள்ளொளியில் தோய்வதாலே
கணம்தோறும் கவிஞர்க்குத் திருநாளன்றோ *21.03.2018*

## 77. கள்ளா, நெருஞ்சி முள்ளா?

கள்ளா நெருஞ்சி முள்ளா - என்
கவிதை எந்த ரகம்

கணநேரம் மயக்கும்
கனவுகளில் மிதக்கும்
சினத்தோ டொருநாள் சீறிப் புறப்பட்(டு)
- உன்
சிந்தையைப் பற்றி உலுக்கும்

கள்ளா நெருஞ்சி முள்ளா

சொல்லால் நெஞ்சு சுடமுடியும் - மிக
சூட்சும மாயுயிரைத் தொட முடியும்
எல்லார்க்குமான தூதுவனாய்
இறைவனிடமே வாதாட முடியும்
பொல்லாதவற்றைப் பொசுக்கி எரிக்கப்
புல்பூண்டெல்லாம் செழித்துத் தழைக்க
சங்கல்பம் ஒன்று நிறுவ முடியும் - மீண்டும்
சத்ய யுகமலர உதவ முடியும்

கள்ளா நெருஞ்சி முள்ளா

என்
நாவை அசைத்து நர்த்தனமாடும்
பாவை அவள் பதங்கள் - வெறும்
நாட்டியம் இல்லை நல்லுலகை நிலை
நாட்ட விழும் விதைகள்
கூவிக் கூவி அழைக்கின்றேன்
குறுக்குச் சுவர்களை இடித்துத் தள்ளி
ஆவிக் கலப்பின் அமுத சுகத்தை
அனுபவிக்க வாருங்கள்
அண்ட சராசரம் அனைத்திலுமோர்
ஆத்ம சங்கீதம் கேளுங்கள்

அழைத்து விட்டுக் காத்திருக்கும்
அசையாப் பொருளா கவிதை - உள்ளே
நுழைந்து சென்றுயிர் ஊற்றை அளைந்ததை
இழுத்து வந்திசையாகச் செய்யும்
ஏவுகணை கவிதை - தேவி
ஏறிவரும் சிவிகை

கள்ளா நெருஞ்சி முள்ளா - என்
கவிதை எந்த ரகம்
காலம் என்ற வீதி சமைத்துக்
கொண்டே ஓடும் ரதம்

*11.04.2018*

## 78. பூகம்பம் ஆகட்டும் பாடல்களே

சாகப் பிறந்தவனா - இல்லை
சாதனை செய்யப் பிறந்தவனா - நெருப்பில்
வேகப் பிறந்தவனா - புதிய
வேதம் படைக்கப் பிறந்தவனா - ஏதோ
யாகம் புரிகின்றேன் - என்னை
ஆகுதி யாக்கி எரிகின்றேன் - இந்தத்
தேகம் கிடக்கட்டும் - எந்தன்
சிந்தையில் மூண்டதீ எங்கும் பரவட்டும்

ஜாதி மதங்கள் சழக்குரைகள் - வம்புச்
சண்டைக் கிழுக்கும் பரப்புரைகள்
வீதிக்கு வீதி கலவரங்கள் - எல்லாம்
வேடிக்கை பார்த்து விலகிடவா - இந்த
மேதினி யில்நான் பிறந்துவந்தேன் - அந்த
மீசைக் கவிஞனின் பேரனடி - வெற்று
போதனைகள் இனித் தேவையில்லை - நெஞ்சில்
பூகம்பம் ஆகட்டும் பாடல்களே - நெஞ்சில்
பூகம்பம் ஆகட்டும் பாடல்களே

*21.04.2018*

## 79. அவன் சொன்ன சொல்...!

வீட்டை அலங்கரிக்கவா விளக்கேற்றுகிறேன்
மின்மினிப் பூச்சிகளா என்சொற்கள் - வெறும்
ஏட்டில் இருந்திடவா எப்போதும் பாடுகிறேன்
ஏகாந்த வானத்தில் எரிகற்கள்

நாட்டைச்சீ ராக்கி நலிவின்றி நல்லதொரு
பாட்டை சமைக்கத்தான் பாடுகிறேன்
வேட்டைநாய்க் கூட்ட வெறித்தனம் எல்லாம்சொல்
வீச்சில் அடங்கத்தான் பாடுகிறேன்

என்
வீட்டை அலங்கரிக்கவா விளக்கேற்றுகிறேன்

ஓலம் எழுப்பிக் கொண்டே குப்பைக்
கூளங்க ளாயுருக் குலைந்து கிடக்கும்
மனச்சிதி லங்களை வடிவமைத்துள்ளே
தினமும் நானொரு தீபம் ஏற்றுகிறேன்

கோடானு கோடி மனங்களுக் குள்ளே
ஊடுருவிச் செல்லும் உயிருள்ள சொற்களென்
உள்ளத்தில் இருந்து ஊற்றெடுத்துப் பாயும்
வெள்ளப் பெருக்கின் வேகப் புனலில்
சிக்கிக் கொண்டு தீய சக்திகள்
சுக்கு நூறாகச் சிதறியோட
அக்கிரமங்கள் அழிந்து போக
அன்பும் பண்பும் அமைதியுமாக
உலக மக்கள் ஒப்புரவோடு
கலகமின்றிக் கலக்கமும் இன்றி
மகிழ்ச்சியாக வாழ்வதற்கே
உரக்கப் பாடுகிறேன் ஒவ்வொரு மனிதனும்
உறக்கம் கலைய உலுக்குகிறேன்

என்
தேகம் மரித்தாலும் தேயாத முழுநிலவாய்
எந்த இருட்டிலுமே வெளிச்சம் தரும்விளக்காய்
பாட்டுக் கனலைத்தீ மூட்டி வளர்த்துவழி
காட்டத் துணிகின்றேன் காட்சி தருகின்றேன்

இது
சின்னவன் சொல்லில்லை சின்னசாமி யின்மைந்தன்
சொன்னசொல் லென்றே சொல்லுக இப் பூவுலகே

*22.04.2018*

## 80. முற்றுப் புள்ளி எங்கே?

நான்
முடிவு பெறாத ஓவியம் - என்
முற்றுப் புள்ளி எங்கே

எனைவரையும் அனைவரையும் கேட்கின்றேன்
யார்முடிக்கப் போகின்றார் பார்க்கின்றேன்

நான்
முடிவு பெறாத ஓவியம் - என்
முற்றுப்புள்ளி எங்கே

வரையத் தொடங்கிய கையெங்கே - பிறகு
வளர்த்து விட்ட கைகள் எங்கே - எதை
முன்வைத் தென்னை வரைகின்றார் - அந்த
மூலத்தையே நான் தேடுகிறேன்

நான்
முடிவு பெறாத ஓவியம் - என்
முற்றுப்புள்ளி எங்கே

வெளியென் றொன்றும் இல்லாத
வெற்றுப் புள்ளியென
தனித்திருந்த ஞாபகத்தை
மீட்க முயல்கின்றேன்
ஒளியின் விரைவை விட அதிக
விரைவில் பயணித்து
வெட்ட வெளியின் எல்லைகளைக்
காணத் துடிக்கின்றேன்
மூலப் புள்ளி தெரியாமல்
முற்றுப் பெறவும் முடியாமல் - என்
காலம் மட்டும் விரைகிறது - மனம்
கவிதை யாகக் கரைகிறது

நான்
முடிவு பெறாத ஓவியம் - என்
முற்றுப்புள்ளி எங்கே

*09-06-2018*

## 81. சமதளத்தில் சந்திக்கலாமே!

ஒருவருக் கொருவர் வாழ்த்துச் சொல்ல
ஒவ்வொரு நாளும் புனித நாளே
ஒன்றாய்ச் சேர்ந்து கொண்டாடி மகிழ
நாள்தோறும் புத்தாண்டுத் தினமே
எப்பெயர் சொல்லி யாரழைத் தாலும்
இறைவன் ஒன்றே இறைவன் உண்டே
இல்லை என்பவரால் ஏன் பிளவு
இன்மை உண்மை இரண்டும் அவனே

அவனோ அவளோ அதுவோ எதுவோ
சிவனோ அரியோ சிலுவைச் சுடரோ
உருவற் றவனோ நூலோ கனலோ
எல்லாம் ஆன பரம்பொரு ளேயோ
ஆணவத்தை முற்றிலுமாகக்
கரைத்த பிறகு திரை விலக்கிப்
பார்த்தா லப்பரம் பொருள்நா னேயோ
“பார்ப்பான் “ என்ற சொல்தவ றாமோ

ஒருதாய் தந்தை வழிவந் தவரே
பார்ப்பார் என்பது பழைய பொய்யாம்
பார்த்தவர் எல்லாம் பார்ப்பனர் இல்லை
பாதை காட்டியவரும் பார்ப்பனர் இல்லை
நேற்றைய தவற்றைச் சொல்லிக் கொண்டே
நிந்திப்பவரும் சிந்திக்கலாமே
நீயும் நானும் எல்லாருமொரு
சமதளத்தில் சந்திக்க லாமே *15.06.2018*

## 82. தந்தையாய் நானென்றும் இருந்ததில்லை

தந்தையாய் நானென்றும் இருந்ததில் லையன்புத்
தோழனாய் இருந்த துண்டு
தட்டிக்கேட் டுத்தொல்லை தந்ததில் லைநேசக்
கைநீட்டி அணைத்த துண்டு
சிந்தனைக் கணைகட்ட முயன்றதில் லைசின்ன
விளக்கேற்றி வைத்த துண்டு
சீற்றத்தோ டெந்நாளும் சினந்ததில் லைகவிதைச்
சிறகுகள் தந்த துண்டு
பந்தபா சச்சுழலில் மூழ்கவைத் தொருநாளும்
பரிதவிக்கச் செய்த தில்லை
பணியென்றும் பணிவென்றும் பழையகதை கள்சொல்லிப்
பாடங்கள் புகட்ட வில்லை
விந்தைதான் நானுமொரு தந்தையாய் இவ்வாழ்வில்
வேடம் புனைந்தி ருந்தேன்
தந்தையர்க் கெலாம்தந்தை தயாபரன் பராபரன்
சிந்தையாட் கொண்ட தாலே

*17.06.2018*

## 83. வழித்துணையா, வழிகாட்டியா?

வழித்துணையா இல்லை வழிகாட்டியா
யார்தான் உனக்குத் தேவை

மொழித்துணை யில்லாமல்
மௌனத்தின் பாதையிலே
பரதேசியாக நீ பயணம் மேற்கொள்ள

வழித்துணையா இல்லை வழிகாட்டியா
யார்தான் உனக்குத் தேவை

நதியின் பாதையை யார் வகுத்தாரோ
காற்றுத் திசையைக் கணித்தவர் எவரோ
விதியென் றுரைக்கும் தடத்தில் வாழ்க்கைத்
தேரைச் செலுத்தத் தெரிந்தவர் யாரோ
அவனோ அவளோ அதுவோ இதுவோ
எப்படி நடக்கத் துணிந்தாய் மனமே

கதிமா றாமல் பூமி சுழலக்
காரணம் என்ன கதிரும் மதியும்
உதிக்கத் தானென் றுரைப்பா யோநீ
உள்ளும் புறமும் ஒன்றே யாகி
புதிய புதிய கணம்உரு வாகி
வெளியாய் விரியும் பிரபஞ்ச மூலத்தை
ஒளியால் அளக்கும் ஓயா முயற்சியோ

வழித்துணையா இல்லை வழிகாட்டியா
யார்தான் உனக்குத் தேவை

தொலைதூ ரத்தே பறந்து திரிந்து
மலர்கள் புணர்ந்து தேனைச் சுமந்து
வழிதவ றாமல் தன்தாய் மரத்தை
வந்து சேரும் தேனீக்க ளுக்கு

வான்வழிச் சாலை வடிவமைத்
தவர்யார்
ஒவ்வொரு நாளும் உடலுக்குள்ளே
கோடானு கோடி காத தூரம்
பயணம் செய்யும் குருதி வெள்ளத்தின்
ஊன்வழிச் சாலை உருவாக்கியவர் யார்
யார் யார் என்ற கேள்விக்கெல்லாம்
நான் நான் என்று தோள் தட்டுகிறாய்
தட்டத் தட்ட ஒவ்வோர் அணுவாய்
நீயே எங்கும் உதிர்ந்து கிடக்கிறாய்
போபோ உனக்கு புத்தியில்லை
போதிக்க எனக்குச் சக்தியில்லை
நீயும் நானும் என்றைக்கேனும்
சந்தித்துக் கொள்ளும் யுகசந் திப்பில்
தேயும் நிலவும் தேன்மலரும்
குருதிப் புனலும் இருக்குமா சொல்

நான்
வழித்துணையா இல்லை வழிகாட்டியா

*03-05-2018*

## 84. எத்தனை எத்தனை பாரதியோ!

எத்தனை எத்தனை பாரதியோ எங்கள் தமிழ்நாட்டில் - அவன்
ஏற்றிய சுடரை ஏந்திவரும் அனைவரும் பாரதியே

அவன்போல வேயோர் ஆவேசப் புயலாய்க் கவிதை வழங்குபவர்
அவன்காட் டியவோர் அறநெறிப் பாதை அகலாத சிந்தையினர்
அவனைப் போலவே அணுஅணு வாயித் தேசத்தை நேசிப்பவர்
அவனைப் போலவே ஆன்மிகத் தையுயிர் நிலைநின்று வாசிப்பவர்

எத்தனை எத்தனை பாரதியோ எங்கள் தமிழ்நாட்டில் - அவன்
ஏற்றிய சுடரை ஏந்திவரும் அனைவரும் பாரதியே

அவனே தலைவன் தானவன்தாசனென்(று)
அழுந்தச்சொன்னவரும்
அவன்போல் சமூக அவலங்கள் எல்லாம்
திருந்தச்சொன்னவரும்
அவனே இவனா ஆச்சர்யத் தோடு
பார்க்க வைப்பவரும்
அவனைத்தோளிலும்நெஞ்சிலும் ஏற்றி
அழகு பார்ப்பவரும்

எத்தனை எத்தனை பாரதியோ எங்கள் தமிழ்நாட்டில் - அவன்
ஏற்றிய சுடரை ஏந்திவரும் அனைவரும் பாரதியே

*14.07.2018*

## 85. ஓரிரு நிமிடங்களே

உன்னிடம் நான் கேட்பதெல்லாம்
ஓரிரு நிமிடங்களே - நீ
செவிகளை மட்டும் திறந்துவை பிறகுன்
சிந்தை என்வசமே

முன்னொரு நாள் ஒரு மூங்கிலிலே நீ
மோகன கானம் கேட்டிருப்பாய்
பின்னொரு நாள் நீ வீணையிலே இசைப்
பிரளயம் நிகழ்வதைப் பார்த்திருப்பாய்
இன்றொரு நாள் என் இதயத் துடிப்பில்
இப்படியே நீ லயித்துவிடு
அன்றும் இன்றும் இசையொன்றே
அதற்கே உன்னைக் கொடுத்துவிடு
(உன்னிடம்)

ஒருசொல் கவ்விப் பிடிக்கிறதா
மறுசொல் தடவிக் கொடுக்கிறதா
இடையில் உள்ள மௌனத்தில்
இதயம் கொஞ்சம் கனக்கிறதா
புருவங்களுக்கு மத்தியிலே
புதிய உலகம் தெரிகிறதா
புலன்களற்ற தரிசனமே
பேரொளியாக விரிகிறதா
கவிதை வெறும்சொற் படமில்லை
கடவுள் காட்சி புரிகிறதா
கடந்தும் உள்ளும் நீயேதான்
கனவு மெல்ல கலைகிறதா
(உன்னிடம்)

*15.07.2018*

## 86. தமிழ் கொடுத்துக் கேட்கின்றேன்

செவிகொடுக்கச் சிலருள்ளார் சிரிக்கும் போது
சேர்ந்துநகைத் திடச்சிலரும்  உள்ளார் நல்ல
கவிகொடுக்கச் சிலருள்ளார் மூழ்கும் போது
கைகொடுக்க யாருள்ளார் கருணை யாலே
புவிகொடுத்த பேரருளே மதுரை வாழ்வே
புன்னகையால் என்நெஞ்சைப் புனித மாக்கு
தவிதவிக்க வைக்காமல் ஒளிநி ரப்பு
தமிழ்கொடுத்துக் கேட்கின்றேன் தயைசெய் வாயே

விளையாட வருவார்கள் விருந்தென் றாலும்
விரைந்தோடி வருவார்கள் விழாவெ டுத்தால்
அலையாக வருவார்கள் அந்த கன்வந்
தழைக்கின்ற போதாரும் வருவார் கொல்லோ
வளையாடு பூங்கரத்தைச் சுந்த ரேசன்
வசம்தந்த மாலவன்தங் கச்சீ நெஞ்சில்
சிலையாகச் சிரிக்கின்ற எழிலே என்மேல்
சிறிதேனும் உன்கடைக்கண் வைக்க லாமே

மின்னலுக்கு நொடிவாழ்வு மின்மினிக்கோ
சிலநிமிடம் விளக்குக்கோ மணிக்க ணக்காம்
இன்னலுறும் என்பிறவிச் சுழற்சி மட்டும்
எத்தனையோ யுகக்கணக்காய்த் தொடர லாமா
இன்னமுத மொழிபேசும் கிளியைத் தோளில்
எளிதாகச் சுமக்கின்ற எழில்மீ னாட்சி
என்பாரம் நீசுமந்து கொண்டால் நானும்
இசையோடு கவிதைகள் மிழற்று வேனே

*18.07.2018*

## 87. புயலாய் வர வேண்டும்

புனலாய் வந்தால் போதாது - பெரும்
புயலாய் வர வேண்டும்
காமப் பேயைப் சுட்டுப் பொசுக்கும்
கனலாய் வர வேண்டும்

தாயாய் வந்தால் போதாது - காட்டுத்
தீயாய் வர வேண்டும் - என்
நெஞ்சு வெடித்துச் சிதறும் முன்னே
நீயாய் வர வேண்டும்

காளீ சண்டீ சாமுண்டீ குரல்
காதில் விழவில்லையா
தூளியாடும் குழந்தை கூடத்
தப்ப வழியில்லையா

வெட்கக் கேடு ஆண்மை என்பதே
கேள்விக் குறியாக
எத்தனை அரக்கர் உலவுகிறார்
ஒன்றே குறியாக

வீட்டில் அன்னை சகோதரிகள்
தொலைந்து போயினரா - இல்லை
காட்டில் இருந்து வந்தனரா
காமுகர் ஆயினரா

நீதி நூல்கள் எல்லாம் வெற்றுக்
காயிதம் ஆயினவா
நிர்பயத்தோடு நின்றுவிடாமல்
கொடுமை தொடர்கிறதா

குழிதான் தேவையென்றால் - சவக்
குழியில் வீழட்டும்
சதைதான் தேவையென்றால் - பிணக்
குவியல் தேடட்டும்

இப்படித்தான் இனி நடக்குமென்றால்
உலகே அழியட்டும் - இல்லை
இத்தகு விலங்குகள் எல்லாம் இன்றே
செத்து மடியட்டும்

உன்னால் முடியும் உடனே வந்து - நீ
ஊழிக் கூத்தாடு
என்னால் முடியும் என்றால் எனக்குச்
சூலாயுதம் கொடு

அயனால் வரமே பெற்றவனை
அமரா திபனைச் செற்றவனை
மயலால் காமத் தருக்குக்கே - தன்
மாண்புகள் எல்லாம் விற்றவனை - ஒரு
கணையால் வீழ்த்திய ரகுவீரம்
கலியுகத்தில் தோன்றாதோ
அயனாவரம் போல் அக்கிரமங்கள்
நடக்காத படிவில் ஊன்றாதோ *18.07.2018*

## 88. பாராட்டத் தேவையில்லை

பாராட்டத் தேவையில்லை அனுப வித்துப்
பயிலத்தான் பாடுகிறேன் அன்பு வெள்ளம்
நீராட்டும் நெஞ்சத்தைச் சொற்க ளுக்குள்
நிறுவத்தான் பாடுகிறேன் உயிர்மூச் சுக்குள்
போராடித் தத்தளிக்கும் மனத்தைச் சின்ன
புள்ளியிலே நிறுத்தத்தான் கவிசொல் கின்றேன்
யாரோடும் பிணக்கின்றி பேத மின்றி
யாசகனாய் வீதியிலே பாடு வேனே

சதையெலும்புக் கூட்டுக்குள் சிக்கிக் கொண்டு
தவிக்கின்ற உயிர்ப்பறவை சற்று நேரம்
மதகுடைத்த வெள்ளம்போல் சிறக சைத்து
வட்டமிடப் புதுவானம் படைக்க லாமா
புதைந்திருக்கும் கனவுகளை அள்ளி யள்ளிப்
பேரண்டத் தொகுதிகளாய்த் தூவ லாமா
கதையளக்க வில்லையிது கவிதை எல்லாம்
கடந்தும்-உள் இருக்கின்ற யோக சக்தி

சொல்லொன்று வருகிறது வரவேற் றுக்கொள்
துளிக்கூட அச்சமின்றி மனமு வந்து
மெல்ல -அதன் கைப்பிடித்துக் கொள்-பின் வெட்ட
வெளியெல்லாம் சொல்லோடு பயணம் செய் - ஓர்
எல்லையிலா ஆனந்தம் சூழும் உன்னை
ஏகாந்த கருடநிலைக் கேற்றும் அந்த
வல்லமையே வேண்டுகிறேன் வார்த்தை யெல்லாம்
வைரமணி யாகவரம் கேட்கின் றேனே

*14.08.2018*

## 89. அலங்கார அணிவகுப்பா?

வார்த்தைகளின் அலங்கார அணிவகுப்பா
மனவோடைக் குள்தெரியும் ப்ரதிபலிப்பா
கீர்த்திமிகு மன்னர்களின் புகழ்த் தொகுப்பா
கிளர்ச்சிபெறத் தூண்டுகிற போரழைப்பா
நீர்க்குமிழி யாகுமிவ் வாழ்க்கையுள்ளும்
நிலையான பொருளாகும் பெருவியப்பா
யார்கொடுத்த வீணையிது மீட்டும் போதே
யானாகி வளர்கின்ற மாயம் என்னே

மீட்டுவது விரலில்லை மூச்சுக்காற்று
வீணையிசை ஒலியில்லை உயிர்த்துடிப்பு
காட்டுவது கனவில்லை வருங்காலத்தின்
கருவுக்குள் உருவாகும் புதிய வார்ப்பு
பாட்டுவரும் பாதையிலே கண்சிமிட்டும்
பலகோடி விண்மீன்கள் மீண்டும் மீண்டும்
மீட்டுவரக் கூடுமெனும் நம்பிக்கைக்குள்
வெள்ளிநில வாய்முளைக்கும் கவிதை தானே

*19.08.2018*

## 90. அர்த்தம் என்ன அர்த்தம்?

ஆற்றில்நான் மூழ்கிக்கொண் டிருக்கும் வேளை
அலறுகிற சத்தத்துக் கென்ன அர்த்தம்
காற்றுவந்து தலைகோதிச் செல்லும் போது
கண்மூடி முனகுவதற் கென்ன அர்த்தம்
நேற்றிரவு முத்தத்தை நினைத்துக் கொண்டு
நெகிழ்கின்ற புன்சிரிப்புக் கென்ன அர்த்தம்
ஆற்றாமை யாலெழுதும் கவிதைக் கெல்லாம்
அர்த்தங்கள் தேடிக்கொண் டலைய லாமா

அர்த்தத்தை உதறிவிடு அதற்கும் உள்ளே
அனுபவத்தை அரைநொடியின் தரிச னத்தை
சிற்பத்தில் உயிர்க்கின்ற ஒளியை நெஞ்சில்
சிறுமழலைப் பூவாக இதழ்வி ரிக்கும்
அற்புதத்தை ஆகாயக் கனவை என்றும்
அடங்காத கடலலையின் ஓங்கா ரத்தை
சற்றேனும் உட்கொள்ளத் துணிந்து விட்டால்
சரமழையாய்க் கவிதைகளும் பொழிய லாமே

*21.08.2018*

## 91. சொல், சொல், சொல்!

சொல் சொல் சொல்
சொல் ஒவ்வொன்றிலும் உள்ளொளியாக
நில் நில் நில்

நெல்லுக்குள் உணவாய் நெஞ்சுக்குள் கனவாய்
அல்லுக்குள் பகலாய் - பகை
யழிக்கின்ற கனலாய்
சொல்லுக்குள் பொருளாய் - பொருள்
தோற்கும் மெய்ப் பொருளாய்
சொல்லாமல் சொல்கின்ற
சூட்சுமக் கருவாய் - நீ

சொல் சொல் சொல்
சொல் ஒவ்வொன்றிலும் உள்ளொளியாக
நில் நில் நில்

எதுகை மோனை சீர்தளையெல்லாம்
ஏவல் செய்யக் காத்திருக்க
இறைவனே ஒலி வடிவில் வந்து
காவ லாகிக் கைகொடுக்கப்
புதுமை பழமை இரண்டுக்கும் ஒரு
பாலமாகி வழியமைக்கப்
புலன்களற்ற வெளியில் மெல்லப்
புலர்ந்து வானம் கண்திறக்கச்

சொல் சொல் சொல்
சொல் ஒவ்வொன்றிலும் உள்ளொளியாக
நில் நில் நில்

நாவையசைத்துப் பிறப்பது போலொரு
பாவனைதான் - ஓங்
காரக் கடலில் உருவாகும் சுடர்ப்
பேரொளிதான்
அந்தக் கடலில் சின்ன துளியாய்
அலைமோதும் மனமே
அனுபவத்தை உள்வாங்கிக் கொள்
அது போதும் தினமே

சொல் சொல் சொல்
சொல் ஒவ்வான்றிலும் உள்ளொளியாக
நில் நில் நில்

*12.12.2018*

## 92. விடைகொடுப்பாய் வெண்ணிலாவே

மேடு பள்ளம் வெற்றி தோல்வி
மெய்யும் பொய்யும் கலந்த வாழ்க்கை
கூடு விட்டுக் கூடு பாயும்
உயிருக் குத்தான் என்ன வேட்கை
ஏடுவிட்டெ ழுந்து வந்த
பாடல் போல அந்த ரத்தில்
ஆட வந்த பின்னும் நெஞ்சில்
மேடை கேட்கும் வெண்ணி லாவே

சொன்ன சொல்லும் சொன்னதே - சொல்
லாத தாக மாறுமோ - அவ்
விண்ப ரப்பில் மேவியே - தன்
ஒலியு லாவைத் தொடருமோ - நான்
மண்பு தைந்த பின்னும் மீண்டும்
மீண்டும் வந்து ஜனிக்க லாமோ
கண்வி ளிம்பி லேய மர்ந்து
கவிதை சொல்லும் வெண்ணி லாவே

பொறிபு லன்கள் பூத மென்று
புனைந்து விட்ட வேடமா - சிற்
றறிவெ னும்கல் விட்டெ றிந்து
வேட்டை யாடும் வேடனா - தன்
தறியில் சிக்கித் தவித விக்கும்
சிறிய பூச்சியா - என் கண்ணில்
விரியும் கோல மாயு தித்து
விடைகொ டுப்பாய் வெண்ணி லாவே *20.12.2018*

## 93. காதல், காதல், காதல்!

கடல்மலை எல்லாம் கரைத்துக் குடித்து
விழுங்கிய பிறகும் இன்னும்
இடமிருக் கிறதே நெஞ்சில்
காதல், காதல், காதல்...

விண்மீன்க ளாலே மாலை தொடுத்துத்
தோளில் அணிந்த பிறகும்
கண்சிமிட்டு கிறதே கண்ணில்
காதல், காதல், காதல் ...

நிழல்களுக் கெல்லாம் வண்ணம் தீட்டி
உருவம் கொடுத்த பிறகும்
நிலவுபூக் கிறதே மண்ணில்
காதல், காதல், காதல் ...

கனவுக்கெல் லாமொரு கட்டியம் கூறி
வாசல் திறந்த பிறகும்
ஒற்றைச் சுடராய் ஒளிதரு கிறதே
காதல், காதல், காதல் ...

தோப்பில் கேட்கும் கிளிப்பேச் சுக்கு
யாப்பிலக் கணமும் உண்டோ
காதலின்றி வெறுமையாகக்
கலையும் கணமும் உண்டோ
கூப்பிட்ட வுடன் கொஞ்சிக் குலவும்
தென்றல் காற்றுக்கு
வேப்ப மரத்தின் இலைகள் எல்லாம்
தவமிருக்கின்றன பார்
மூப்பும் இளமையும் மொழியில் மட்டுமே - காதல்
மூச்சில் நுழைந்துயிர்க் கதவைத் தட்டுமே
காதல், காதல், காதல் ...

*28.12. 2018*

## 94. வேட்டைக்கு வேல் கேட்கிறாய்!

நிலவைக் காட்டிச் சோறூட்ட நீளும் கைகள் நீ - நெஞ்சில்
குலவையிட்டுக் குதூகலிக்கும் குமரிப் பெண்ணும் நீ
புலமை என்ற தோட்டத்தில் பூப்பறிப்பாய் நீ - எந்த
நிலைவந் தாலும் தளராமல் நிமிர வைப்பாய் நீ

நெஞ்சைப் பிழியும் சோகத்தில் நெய்த இசையும் நீ - என்னைக்
கொஞ்சிக் குலவி உயிர்முழுதும் கொள்ளை கொள்வாய் நீ
வஞ்சமின்றி வார்த்தைகளை வாரியிறைப்பாய் நீ - இனியும்
எஞ்சியிருக்கும் காலத்திற் கேற்ற துணையும் நீ

சதையெலும்புக் கூட்டுக்குள் சங்கீதம் இசைக்கின்ற
சாதகப் பறவையும் நீ
சத்தியத்தை நிலைநிறுத்தும் ப்ரயத்தனத்தைக் கைக்கொண்டு
போராடும் வீரமும் நீ
கதைசொல்லி மாளாமல் கற்பனைகள் போதாமல்
களமிறங்கிப் போர்செய்கிறாய்
கவிதையால் நெஞ்சத்தை கனமான பஞ்சாக்கிக்
கனலூதித் தீப்பெய்கிறாய்
விதவிதமாய் எண்ணங்கள் வடிவங்கள் வண்ணங்கள்
விலக்கி நீ குமுறுகின்றாய்
வித்தாரக் கவிநெய்யும் பித்தத்தைப் புறந்தள்ளி
வேட்டைக்கு வேல்கேட்கிறாய்
உதிரத்தின் செம்மையில் ஒருவிரல் தொட்டுன்றன்
நெற்றிக்குப் பொட்டுவைத்தேன்
ஒளியாக வெளியேகிக் களியாட்டம் போடுநீ
வெற்றி நிச்சயமுனக்கே *15.01.2019*

## 95. விளக்கைத் தேடிக் கொண்டிருக்கிறேன்

என் பயணம் தொடங்கவில்லை
இன்னும் விளக்கைத் தேடிக் கொண்டிருக்கிறேன்
விளக்குக் கிடைத்த பிறகு தானே
இலக்கு நோக்கிப் பயணம் தொடங்கும்
இன்னும்
விளக்கையே தேடிக் கொண்டிருக்கிறேன்

தேடிக் கொண்டே தேடிக் கொண்டே
எத்தனைத் தொலைவு நடந்திருப்பேன்
எத்தனைக் கைகாட்டி மரங்களைக் கடந்திருப்பேன்
இன்னும்
விளக்கையே தேடிக் கொண்டிருக்கிறேன்

பயணம் செய்ய மறுத்துவிட்டுப்
பாதையோரம் படர்ந்திருக்கும்
செடி கொடி மரங்கள் மலர்களைக் கண்டு
பரிகாசம் செய்கிறேன் சில நேரம்
பரவசம் கூட அடைகிறேன்
வானத்து மின்னல் மின்மினிப் பூச்சிகள்
அவ்வப்போது அளிக்கும் ஒளியில்
இன்னும்
விளக்கையே தேடிக் கொண்டிருக்கிறேன்

சட்டென்றென் முன் சரிந்து விழுந்த
எரிகல் ஒன்றை உற்று நோக்கினேன்
உள்ளே தெரிந்த உருவம் யாரோ?
இடி யிடி என்று சிரித்தான்

“சென்ற யுகத்தில் நீயும் நானும்
சேர்ந்து பயணம் செய்யத் துணிந்தோம்
இன்னுமுன் பயணமேன் தொடங்கவே இல்லை”

எரிகல்லுக்குள் இருந்து ஏளனம் செய்தவன்
அண்டத்தின் கோடியில் ஒரு புதிய உலகம்
படைத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தின் பிரதிபலிப்பாமே
இப்போது
என்முன் இருப்பதோ சின்ன விளக்கு

*17.01.2019*

## 96. பூத்திரியில் ஏற்றி வைத்த கனலே

பூத்திரியில் ஏற்றிவைத்த கனலே உள்ளப்
பூரிப்பில் பொங்கியெழும் புனலே
அர்த்த
ராத்திரியில் வந்துமனத் திரையகற்றி
ரகசியமாய்க் கவிசொல்லும் அழகே - உன்னைப்
பார்த்தகணம் பலவுண்டு கனவும் உண்டு
பார்த்ததுமே பறிகொடுத்த களவும் உண்டு
யார்தடுக்க முடியுமிந்த உறவை உன்னை
யாசிக்க வேபிறவி எடுத்து வந்தேன்

புலனொடுங்கத் தவம் செய்யும் முனிவர் உண்டு
பூதலமுன் னுள்ளொடுங்கத் தவம் புரிந்தாய்
கலைநயமாய் விற்புருவம் குமிண்சி ரிப்பு
கணையாக ஒருபார்வை இருந்த போதும்
மலைவளைத்துப் புரமெரித்த மஹாருத்ரா - என்
மனம்வளைக்க மனமிலையோ வணங்கு கின்றேன்
நலமெல்லாம் தருகின்ற நமச்சிவாய
நாவெல்லாம் கவிதைநீ நடனமாடு

நீயாடக் கண்டுலகம் அமைதி கொள்ளும்
நிறுத்தாமல் ஆடுன்றன் திருக்கரத்தில்
தீயாடக் கண்டுபே ரண்டமெல்லாம்
திசைமாறா ஒழுக்கத்தில் பயணம் செய்யும்
ஓயாத நடனத்தால் ப்ரபஞ்ச சக்தி
ஒருகதியில் இயங்குமுன்றன் வாம பாக
மாயாவி னோதத்தால் மாறி மாறி
உலகங்கள் உதிக்குமதி சயமும் உண்டே

கண்டறியாதன யாவையும் கண்முன்
கொண்டு நிறுத்தும் மஹேஸ்வரனே
தொண்டர்தம் உள்ளத் தமர்பவனே - உட்
சூரிய னேசுடர் ஆனவனே
பண்வழி யாயொரு பாதை சமைத்துன்
பாத மலர்தொழு வேனே - என்
கண்வளர் கின்ற கனியமுதே - கங்
காதர னேவிடை வாகனனே

*04.02.2019*

## 97. மண்ணென்று நினைத்தாயோ மடமகனே!

மண்ணென்று நினைத்தாயோ மடமகனே - வெறும்
மண்ணென்று நினைத்தாயோ மடமகனே - தாய்
மடியென்ற உண்மையை மறந்தாயோ
கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தவளைக்
கைவிட்டு விட நீ துணிந்தாயோ

குமரன் சிந்திய குருதியையும் - தூக்கில்
தொங்கிய மூவர் உறுதியையும்
இமைப்பொழுதேனும் நினைத்திலையோ - எதுவும்
நடக்காதது போல் உறங்குதியோ

இமயப் பனியில் விழுந்து
ஜீலம் நதியைத் தொடர்ந்து
கங்கை முழுதும் பரந்து
காவிரி யாகக் கலந்து
படர்ந்து கிடக்கும் ரத்தச் சிவப்பில் - மனம்
பற்றிக்கொண் டெரியவில்லையா - வெற்(று)
உடலே உன் உணர்ச்சிக் கெல்லையா

உயிருக்கேதடா ஜாதிமதம்
உண்மைக்கேனோ அணிகலன்கள்
உன்தன் மானத்துக் கென்னவிலை
உறங்கிக் கிடந்தது போதுமடா
- எல்லை
காக்கச் சென்ற கடமை வீரரை
தாக்கித் தகர்க்க இளைஞர்களை
ஊக்கி விடுகின்ற உலுத்தர்களைச் - சாம்ப
லாக்கும் திறனுனக் கில்லையா - வெற்(று)
உடலே உன் உணர்ச்சிக் கெல்லையா *17.02.2019*

## 98. பிரதிக்கினைதான் வேண்டும்

பிரார்த்தனைகள் போதாது பிரதிக்கினைதான் வேண்டும் - வெறும்
வார்த்தைகளால் ஆகாது
வைரமனம் வேண்டும் - தீபம்
ஏற்றுவதால் தீராது
எழுச்சியுற வேண்டும் - நம்
ஆற்றலினால் அரக்கர்களை
மாய்த்துவிட வேண்டும்

கூக்குரலால் பயனில்லைக் கோடு தாண்டிக்
கூற்றுவனை ஏற்றுமதி செய்ய வேண்டும்
தீக்கணைக ளால்சிதறி மாய்ந்து போன
தேசச்ச கோதரரைச் சிந்தை செய்திவ்
ஆக்கினையை உரைக்கின்றேன் பேதமின்றி
அனைவருமிங் கொருமித்துக் குரல் கொடுப்போம்
பாக்கியின்றிப் பகைநடுங்கப் படையெடுப்போம்
பனிமலையின் சரிவுகளில் அணிவகுப்போம்

*15.02.2019*

## 99. உறங்க விடுவாளா?

உறங்க விடுவாளா - என்னை
உறங்க விடுவாளா - நான்
உறையகலாத கூர்வாளா
அறங்கெடும் போதெலாம் அவதரிப் பேனெனச்
சொன்னவன் சோதரி மகிஷாசுரனை
வென்றவள் என்னைக் கைவிடுவாளா

சொன்ன சொல் எல்லாம் சூலாயுதமாய்
சுடர்விழிப் பார்வையே வேலாயுதமாய்
மின்னச் செய்திடும் மாகாளி - காலம்
விரையமாக விடுவாளா

என்னை -
உறங்க விடுவாளா
அன்னை -
உறங்க விடுவாளா

ஜாதி மத மொழி வேற்றுமையெல்லாம்
சுட்டுப் பொசுக்கி எரித்திடவே
நீதி அறம் அருள் மூன்றையுமே
நிலவுலகில் நிலை நாட்டிடவே
வன்கொடு மைப்பே யோட்டிடவே -
அமைதி
மலர நல்வழி காட்டிடவே
என்சிறு பங்கை நான் ஆற்றிடவே -
தூண்டி
எழுப்புகிறாள் என் பாட்டினிலே

உறங்க விடுவாளா - நான்
உறையகலாத கூர்வாளா

*11-03-2019*

## 100. அந்த இன்னொரு கோப்பை!

**[முகநூலில் வண்ணதாசனின் ஒரு கவிதையைப் படித்தேன். தனக்கு ஒரு கோப்பை தேநீரும், வரப்போகும் நண்பருக்கொரு கோப்பை தேநீரும் வைத்துக்கொண்டு காத்திருப்பதாக அந்தக் கவிதை அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்து நான் எழுதிய கவிதை இது.**

இன்னும் இருக்கிறதே அந்த இன்னொரு கோப்பை
யார்வரவை எதிர்பார்த்து
எந்த இதழ்கள் வந்து சுவைக்க

நானருந்தி முடித்து விட்ட
கோப்பையின் வெறுமை போலத்
தானும் ஆகத் தவிக்கிறதோ - தன்
பணியென் றதையே நினைக்கிறதோ

இன்னும் இருக்கிறதே அந்த இன்னொரு கோப்பை

கன்னம் குழியச் சிரித்து மகிழும்
கள்ள மற்ற குழந்தை போலச்
சன்னமாகக் காற்று வந்து
தடவிச் செல்கிறது - கோப்பை
சற்றே சிலிர்க்கிறது
முன்னம் இருந்த வெட்ட வெளியாய்
மீண்டும் ஆக வேண்டு மென்ற
ஒற்றைத் தவத்தின் மையப் புள்ளி
கொஞ்சம் கலைகிறது - கோப்பை
நெஞ்சம் நிறைகிறது

நீ தான் அந்தக் கோப்பையா
நீண்ட காலமாய் உன்னை மறந்து
உள்ளே நுழையத் தயங்கி நிற்கும்
உற்ற நண்பன் நானே தானா
இரண்டு கோப்பைகள் உண்டா - இல்லை
ஒன்றே மற்றொன்றின் நிழலா

*19.03.2019*

## 101. திறந்துவை மனக்கதவை

தினமொரு தீபம் ஏற்றுகிறேன் - நீ
திறந்து வை மனக்கதவை
கனவுத்திரையை விலக்கி ஒளியின்
கரங்கள் உன்னை வருடட்டும்
(தினமொரு)

ஒலியே ஒளியாய் மாறுவ தைத்தான்
மந்திரம் என்போம் நாம்
வலிமை சேர்க்கும் வாட்டம் போக்கும்
வார்த்தைச் சுடர்ப்பொறிகள்
(தினமொரு)

நமது பயணம் இடரிலாமல்
தொடரச் சிறு வெளிச்சம்
நமது பாதையோரமெல்லாம்
புத்தம் புது மலர்கள்
அமைதி கூட்டும் தென்றல் காற்றும்
அமர நிழல் மரமும்
அளவளாவ நல்ல நட்பும்
அனுபவம் பெறவே
(தினமொரு)

இன்னும் உறக்கம் எதற்கோ உடனே
எழுந்து கதவைத் திற
எண்ணப் பறவை சிறகு விரித்தால்
நீயும் சேர்ந்து பற
மின்னல் கீற்றாய்ச் சூரியக் கதிர்கள்
விரியத் தொடங்குமுன்னே
என்னை வரவேற் றருகில் இடம்கொடு
இணைந்து பறந்திடுவோம் - நம்
இருமை கடந்திடுவோம்
(தினமொரு) *21.03.2019*

## 102. எங்கள் பாரதி

தேச பக்தியும் தெய்வ பக்தியும்
கண்ணி ரண்டெனக் கொண்டவன்
சிந்தை யாலிந்த அண்டம் யாவையும்
சென்று கண்டமு துண்டவன்
மீசை யும்தலைப் பாகை யும்தனி
வீரமி டுக்குடன் நின்றவன்
மிச்சம் மீதியில் லாமல் சொன்னவன்
மின்ன லாய்வந்து சென்றவன்

எங்கள் பாரதி எங்கள் பாரதி
என்று போற்றுமே உலகெலாம்
எங்கும் பாரதி என்றும் பாரதி
எதிரொ லிக்குமே திசையெலாம்

பிரிவ தற்கிலை என்ற நன்நிலை
பீடு டைத்திரு மந்திரம்
பெற்ற தாயென இந்த நாட்டினைப்
பேணு கின்றசு தந்திரம்
ஒருவ னுக்குண விலையெ னில்ஜக
முழுது மேயுடன் அழித்திட
உலுக்கி னான்குர லெழுப்பி னானுல(கு)
உறக்கம் நீங்கியே விழித்திட

எங்கள் பாரதி எங்கள் பாரதி
என்று போற்றுமே உலகெலாம்
எங்கும் பாரதி என்றும் பாரதி
எதிரொ லிக்குமே திசையெலாம்

*19.04.2019*

## 103. வா, சற்று விளையாடலாம்

வணங்கி வணங்கி வளைந்து விட்டேன்
வா சற்று விளையாடலாம்

வானத் திடலும் நீலக் கடலும்
வாஞ்சையோடு தழுவிக் கொண்டு
மோன லயத்தில் மூழ்கும் இடத்தில்
முளைத்து விட்ட மலர்களாய்க் கை
கோத்தபடி நாம் கொஞ்சி மகிழலாம்
ஏதோ ஒரு குரலுட் சென்று
கீதமாகப் போகும் மதர்ப்பில்
சிலிர்த்துக் கொண்டு வீசும் காற்றைச்
சிறகுதா எனக் கேட்டு மறிக்கலாம் - ஒரு
சின்ன குழந்தை கன்னங் குழியச்
சிரிக்கும் போது மயங்கி விழலாம்
கண்ணா மூச்சி ஆடச் சொல்லி
விண்மீன்களை வீண் வம்புக் கிழுக்கலாம்
மண்ணில் விழும்மழைத் துளிகளை யெல்லாம் -- மணிச்
சதங்கைகளாகக் கட்டிக் கொண்டு
கோள்கள் அதிர நாட்டிய மாடி
ஆடி யாடி ஆடி யாடி
ஆடி யாடி அயர்ந்து போகலாம்
ஆன மட்டும் அழைத்து விட்டேன்
அடம் பிடிக்காமல் வந்து விடு - முதலில்
என்னுள் இருந்து வெளியே வா - பின்
உன்னை முழுதாய்க் காட்டி விடு. *03.07.2019*

## 104. இரண்டறக் கலக்கலாமே!

கலையாத கனவினூடே
உருவான கவிதை போலே
சிலையொன்று வெளிப்படும்முன்
கண்திறந்த ழைத்தல் போலே
நிலவோடை நடுவில் நீல
மலரெழுந் தசைதல் போலே
புலனைந்திலும் கலந்தென்
உயிர் புகும் தென்றல் நீயே

அடிவானம் சிவக்கும் போதும்
அனலாகக் கொதிக்கும் போதும்
கொடிமின்னல் துடிக்கும் போதும்
குளிர்மேகம் உடையும் போதும்
படியாத கேசம் காற்றில்
பறக்கின்ற போதும் என்னுள்
படர்கின்ற சுகமே இன்பம்
பயக்கின்ற பனுவல் நீயே

கவிதையோ சிலையோ சின்ன
கவின்மலர் தானோ இந்தப்
புவியினை வருடிச் செல்லும்
பூந்தென்றல் காற்றோ வானோ
தவிக்கின்ற உயிரளாவி
அனுபவத் தடம் பதிக்கச்
செவிவழிப் பயணம் செய்யும்
தேனிசைப் புனலும் நீயோ

உனக்கொரு பெயர் கொடுக்க
உருவமும் செய்து பார்க்க
கணம் தொறும் முயற்சி செய்து
களைக்கிறேன் நாவில் நின்று
தினம் தினம் நீ நடிக்கும்
திகம்பரக் கூத்தை யெல்லாம்
மனம் மொழிக்குள்ளடக்க
வழியின்றித் திகைக்கிறேனே

நான் நிழல் ஒளி நீதானா
நானொளி நிழலும் நீயா
தேனெது தேனுக்குள்ளே
திளைக்கும்வண் டெதுவாழ் நாட்கள்
போனவை போக நாமெப்
போதுமே ஒருமையாகி
கானமும் கவியும் போல
இரண்டறக் கலக்கலாமே

*20.08.2019*

## 105. இன்று நேற்று வந்ததில்லை

[ஒருநாள், கிருஷ்ணகிரியில், ஒரு நண்பரைச் சந்தித்தேன். இன்று கவிதை எதுவும் வரவில்லையா என்று அவர் கேட்டார்]

இன்று நேற்று
வந்ததில்லை
என்கவிதை
தென்ற லோடு பிறந்தது
சீறும் புயலை வென்றது
உண்மை என்ற முனைப்பிலே
உறுதியாக நின்றது
(இன்று நேற்று)

கன்னல் போலி னிக்கும் போதும்
கனல் மணக்கும் சொற்களாம்
காதலாகிக் குழையும் போதும்
கதியெடுக்கும் சொற்களாம்
சின்ன சின்ன வார்த்தைகள்
சிலம்பணிந்து நடக்குமாம்
திசையெலாம் வணக்கம் செய்யப்
பல யுகங்கள் கடக்குமாம்
(இன்று நேற்று)

சொன்ன சொல் ஒவ்வொன்றிலும்
சொல்லாத பொருளுண்டு
சோர்வகற்றி வீடு சேர்க்கும்
தோழமைக் கனிவுண்டு
உன்னை என்னுள் உலவ வைக்கும்
வாகனம் கவிதையே
ஒரு கணத்தில் நிகழட்டும் உன்
ஒளி மிகுந்த வருகையே
(இன்று நேற்று)

*25.09.2019*

## 106. இசை, இனிதென்றா சொல்கின்றாய்

**("இசை இனிது". என்ற தலைப்பில் கவிதை சொல்லச் சில நண்பர்கள் கேட்ட போது பிறந்தது இக்கவிதை.)**

இனிதென்றா சொல்கின்றாய் இல்லை இல்லை
இனிமைக்கும் இனிமையடி ஏகாந் தத்தின்
தனிமைக்குள் ஒளிவிளக்கை ஏற்றி வைத்துத்
தரணியெலாம் அதனூடு காண வைத்துப்
புனிதத்தைப் பூவாக மலரச் செய்து
பொழிகின்ற தேவதையே இசையென் பேன்நான்
எனினுமவள் எனையழித்துத் தன்னை என்னுள்
இழைக்கின்ற மாயத்தால் துவள்கின் றேனே

துவளவைப்பாள் இதயத்தைத் துடிக்க வைப்பாள்
துளித்துளியாய் என்னைநான் பிரிய வைப்பாள்
புவனமெலாம் ஒருகணத்தில் மறைய வைப்பாள்
பூச்சாண்டி காட்டிமனம் அதிர வைப்பாள்
சுவர்பிரிந்த சித்திரமாய் நடன மாடிச்
சொக்கவைப்பாள் அவளோடு சுழல வைப்பாள்
எவளிந்த ராட்சஸியென் றலறும் போதே
இளந்தென்ற லாய்மாறி வருடு வாளே

வாளேந்தி வருபவளா சிங்கத் தைத்தன்
வாகனமாய்க் கொண்டவளா தாம ரைப்பூத்
தாளேந்த வீற்றிருக்கும் ஷ்யாம ளாவா
தாரையெனப் பொன்பொழியும் திருவா எந்த
நாளேனும் யாரென்று காட்டு வாளா
நலம்தரும்சொல் ஒன்றிரண்டு மீட்டு வாளா
ஆளாகி விட்டவனை அந்த ரத்தில்
அலைபாய விடுவாளா அரக்கி யாசொல்

சொல்லுக்குள் நுழைகின்ற சூக்கு மத்தைச்
சொல்லித்தந் தென்னாவில் தேன்பி லிற்றி
உள்ளத்தின் வழியேயென் உயிர் கலந்(து)
உருக்கத்தில் விரிஜோதி மலருமாகி
கள்ளத்தைக் கவலைகளைக் களையெடுத்துக்
கனிரசமாய் மாற்றிடவே வேண்டுகின்றேன்

வெள்ளைமலர் வீணைஜப மாலை யோடிப்
பிள்ளையையும் ஏற்றுக்கொள் வாளா வாணி

வாணியிவள் வார்த்தைகளை அடுக்கி வைத்து
வாழ்க்கையெனும் பெருங்கடலில் பயணம் செல்லத்
தோணியிவள் திசைகாட்டும் விளக்கு மாகத்
தோன்றுபவள் கரையேற்றும் திருக்க ரத்தாள்
காணிநிலம் வேண்டியவன் கம்ப நாடன்
காளிதாசன் செகப்பிரியன் இவர்களோடு
ராணியிவள் ராஜ்ஜியத்தில் எளியேனுக்கும்
இடமொதுக்க விண்ணப்பம் செய்கின் றேனே.

*30.08.2019*

## 107. கருணை நடந்தது!

சத்யம் ஏவ ஜயதே
சத்யம் ஏவ ஜயதே

இத்தரையில் ஒரு விந்தை நிகழ்ந்தது
கைத்தடியூன்றிக் கருணை நடந்தது
சென்ற இடமெல்லாம்
வென்றது சத்தியமே

சத்யம் ஏவ ஜயதே
சத்யம் ஏவ ஜயதே

அச்சத் திரையும் அறுந்து விழுந்திட
ஆதிக்கப் பேய் அலறி மடிந்திட
அஹிம்சைப் போர்க்களமே
ஆகுதியானது ஆணவமே

சத்யம் ஏவ ஜயதே
சத்யம் ஏவ ஜயதே

புன்னகை முன் பீரங்கி தோற்றது
புவியெல்லாம் அதன் ஒளியை ஏற்றது
மனிதனின் தெய்வநிலை
மரணம் அதற்கில்லை

சத்யம் ஏவ ஜயதே
சத்யம் ஏவ ஜயதே

*02.10.2019*

## 108. கலங்கரை விளக்கு, குருநாதன்

உடலும் உயிரும் ஒன்றாய்ப் - பிறவிக்
கடலில் சுழலும் பொழுது - வழி
காட்டும் ஒளியாய்க் கரையுணர்த்தும்
கலங்கரை விளக்கு குருநாதன்

நீந்தும் சக்தி குன்றியதும் - வந்
தேந்தும் கையும் குருநாதன்
- உடற்
காம்பிலிருந்(து) உயிர்மலரை
மெல்லப் பறிக்கும் வினோதன்

என்ன செய்யப் போகிறான்
எங்கே சூட்டப் போகிறான் - துளிப்
புன்னகைக்குள் மலர்த்தி வானம்
புலர வைத்து மகிழ்வானோ

வடிவம் என்ற சிறையுடைக்க
வாஞ்சையோடு நீளும்கை - வினைச்
சுமையனைத்தும் ஒரே நொடியில்
சுட்டுப் பொசுக்க மூளும் தீ
எல்லையற்ற வெளியாய்த் தன்னுள்
என்னை ஏற்றுக் கொள்ளும் கடல்
எப்பொழுதும் என் இதயத்துக்குள்
ஒலித்துக் கொண்டே இருக்கும் குரல்

உடலும் உயிரும் ஒன்றாய்ப் - பிறவிக்
கடலில் சுழலும் பொழுது - வழி
காட்டும் ஒளியாய்க் கரையுணர்த்தும்
கலங்கரை விளக்கு குருநாதன்

*25.10.2019*

## 109. மாண்டதிங்கே மானிடத் தீர்வு

வேண்டிக் கிடைத்தது வெறுமையின் ஓய்வு
தோண்டிக் கிடைத்தது தொல்பொருள் ஆய்வு
தோண்டிப் பார்த்தும்
தோல்வி யடைந்தோம்
மாண்ட திங்கே
மானிடத் தீர்வு

குற்றம் சொல்லிக் கூக்குர லிட்டோம்
வெற்றுச் சொற்கள் வேதனைப் பட்டோம்
மற்ற படிநாம் மாறிவிட் டோமா
கற்ற தெல்லாம் கவனக் குறைவே

சொந்த மகனைத் தொலைத்தநெஞ் சங்கள்
இந்தத் துயரை எப்படித் தாங்கும்
இருவர் மனமும் எப்படித் தூங்கும்
ஒருவர்க் கொருவர் சுமையா யினரே

மர்மம் என்போம் மறந்து விடுவோம்
கர்ம வினையாம் காரணம் சொல்வோம்
தர்ம நியாயத் தத்துவக் கடையில்
விற்ப னைக்கோர் விளம்பர மாமே

இன்று துயரம் இதயம் கனக்கும்
சென்ற தெண்ணிக் கண்ணீர் உகுக்கும்
நாளை வாழ்க்கை மீண்டும் நடக்கும்
கோள்கள் எல்லாம் சுழல்கின் றனவே

*29.10.2019*

## 110. அன்னையைப் பாடுவோம்

விண்ணையும் மண்ணையும் போட்டுப் பிசைந்தா
வியனுலகம் சமைத்தாள்
உன்னையும் என்னையும் கூடவிட்டா - உயிர்க்
குலங்கள் அவள் படைத்தாள்
தன்னையே தன்னில் இருந்து பிரித்துத்
தறியிலே நெய்து தந்தாள்
தன்னுள் இருந்தே கோடானு கோடி
அண்டங்கள் கொய்து தந்தாள்

அன்னையைப் பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம்
அவளையே தினமும் பயில்வோம் - அவள்
புன்னகை கார்குழல் விழிச்சுட ரோடெழில்
யாவையும் பருகி வளர்வோம்

முன்னொரு நாள்முலைப் பால்கொடுத் துத்தமிழ்ப்
பாலருந் தியவள்நம் தாய்
பின்னொரு வனுக்குத் தாம்பூலத்தில் தமிழ்
பிழிந்து கலந்து தந்தாள்
சொன்னது சொன்னபடி யேயந்த காரத்தில்
முழுநிலாத் தோற்றுவித்தாள்
என் நெஞ்சக் குன்றிலே ஏகாந்த மாய்க்கவி
தீபத்தை ஏற்றி வைத்தாள்

அன்னையைப் பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம்
அவளையே தினமும் பயில்வோம் - அவள்
புன்னகை கார்குழல் விழிச்சுட ரோடெழில்
யாவையும் பருகி வளர்வோம்

இன்பமும் துன்பமும் இளமையும் முதுமையும்
இரவு பகல் உறவு பிரிவும்
அன்பும் பகையும் அரவணைப்பும் கலை
அற்புதச் சிற்பங்களும்
முன்புபின்பென்ற முடிச்சுக்குள் சிக்கி
முடியாத காலநதியும்

தன்விரல் சொடுக்கிலே ஆக்கிக் கலைக்கின்ற
ஆக்கினைப் பேரரசி யாம்

அன்னையைப் பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம்
அவளையே தினமும் பயில்வோம் - அவள்
புன்னகை கார்குழல் விழிச்சுட ரோடெழில்
யாவையும் பருகி வளர்வோம்

அகத்துக் கவள்புறம் புறத்துக் கவளகம்
அனுபவத்தின் தரிசனம்
சுகத்துக்குத் தோள்தரும் சுந்தரி கதிருக்குச்
சுடர்தரும் அமுதவல்லி
ஜகத்துக் கவளன்னை சற்று மாயத் திரை
விலக்கிச் சிரிக்குமழலை
புகலானவள் என்றும் புதிரான வள் புதுப்
புனலாய் வரும் கடலவள்

அன்னையைப் பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம்
அவளையே தினமும் பயில்வோம் - அவள்
புன்னகை கார்குழல் விழிச்சுட ரோடெழில்
யாவையும் பருகி வளர்வோம்

அவளே சொல்மழை பொழிகிறாள் அதில்நனைந்
தவளே நெருப்பாகிறாள்
தவறு கண்டாலதைச் சுட்டுப் பொசுக்கவும்
தானே பொறுப்பாகிறாள்
அவளே கொடுக்கிறாள் அவளே எடுக்கிறாள்
அவளே கட்டவிழ்க்கிறாள்
சுவடுபட ராமலே நடக்கிறாள் நம்பாரம்
சுமக்கிறாள் சுமையாகிறாள்

அன்னையைப் பாடுவோம் பாடிக் கொண்டாடுவோம்
அவளையே தினமும் பயில்வோம் - அவள்
புன்னகை கார்குழல் விழிச்சுட ரோடெழில்
யாவையும் பருகி வளர்வோம் *04.11.2019*

## 111. ஏகாந்தத்தைப் புரிந்துகொள்

இந்தக் கணத்தை நழுவ விடாதே
இறுகப் பிடித்துக்கொள்
சுமை தாங்காமல் உடையட்டும் - துணிந் (து)
ஏறி அமர்ந்து கொள்

எந்த யுகத்தில் செய்த தவமோ
இங்கே இப்பொழுது
சொந்தம் கொள்ள வந்திருக்கிறது
தோள் மீதேறிச் செல்

ஏறியமர்ந்து கொள் - உள்ளே
சூரியன் தெரிகிறதா
காரிருள் மறைகிறதா
அண்டமெல்லாம் இதற்குள் தான் - இதன்
அர்த்தம் புரிகிறதா - கணம்
மெல்ல விரிகிறதா

இந்தக் கணத்தை நழுவ விடாதே
இறுகப் பிடித்துக்கொள்

சொல்லி முடிப்பதற்குள் - பல
கோடிக் கணங்கள் ஓடி மறைந்தன
என்றா திகைக்கின்றாய் - நீ
சிலை போல் நிற்கின்றாய்
அந்தத் திகைப்பு அந்தச் சிலை
அதுவே இந்தக் கணமென்(று) அறிந்து கொள் - உன்
ஏகாந்தத்தைப் புரிந்து கொள்

இந்தக் கணத்தை நழுவ விடாதே
இறுகப் பிடித்துக்கொள்

*17.11.2019*

## 112. காத்திருந்தது வானம்

ஒரு கவிதை வந்த சைக்கும் வரை
காத்திருந்தது வானம் - அதன்
கலகலப்பை மீட்டெடுத்துத் தந்ததேயென் கானம்

சொல்பட்டு மேகங்கள் சுறுசுறுப்பாய் நகர - விரல்
சொடுக்கிலக் காற்றரசன்
துயில் கலைந்து சுழல
ஒரு கவிதை வந்த சைக்கும் வரை
காத்திருந்தது வானம்

வானத்தை அசைக்கின்ற வார்த்தைகளுக்(கு) உன்னுடைய
மோனத்தை உடைக்கின்ற ஆற்றல் கிடையாதா?
பேசத் தொடங்கு - நீ
பேசத் தொடங்கு
பேதைமையும் பிணக்குகளும்
நீசத் தனமும் நிலைகுலைந்து போகட்டும் - நீ
பேசத் தொடங்கு
சின்ன வட்டத்துள் சிக்கி உழன்று நீ
பின்னப் பட்டது போதுமிப் பேருலகம்
ஒற்றைத் துளியில் உருக்கொண்ட செய்தியைநீ
கற்றுத் தெளி - சிறகைச்
சற்று விரி - பிறகு
நீயே இந்த வியனுலகாகிய
உண்மை அறி
நாடு மதம்இனம் மொழி என்று போட்ட
கோடுகள் எல்லாம் அழிந்துவிடும்
கோடானு கோடி அண்டங்களும் - உன்
நாடித் துடிப்பில் கலந்து விடும்
பேசத் தொடங்கு - திசையெட்டும் ஒளி
வீசத் தொடங்கு

பிணத்தைக் கொத்தித் தின்னும் கழுகு
போன்ற சிலர் - உன்
உணர்வை மழுங்க வைத்து நடைப்
பிணமாய் உன்னை மாற்றத் துடிக்கும்

சதியை முறி - சிறகைச்
சற்றே விரி
நட்சத்திரங்களோடு வெளி
யெங்கும் திரி - இடி
முழக்கமிட்டு மேகங்களோடு
சேர்ந்து சிரி
பேசத் தொடங்கு - உடனே
பேசத் தொடங்கு *09.12.2019*

## 113. பின்னால் வந்தது போதும்

எனக்குப் பின்னால் வந்தது போதும்
என்னைக் கடந்து செல்
உனக்கும் எனக்கும் ஒன்றே இலக்கு
நமக்குள் எதற்குக் கணக்கு வழக்கு

எனக்குப் பின்னால் வந்தது போதும்
என்னைக் கடந்து செல்

நிழலென் றுன்னை நினைக்காதே
நிமிர்ந்து நடை பழகு
சுழலும் பொழுது நிழலும் ஒளியும்
பிரிந்திருப்பதே அழகு

எனக்குப் பின்னால் வந்தது போதும்
என்னைக் கடந்து செல்

வானும் கடலும் சங்கமிக்க
வளைவதொரு தோற்றம்
நிலவும் முகிலும் நெருங்குவதும் - விழி
நிலையின் தடுமாற்றம்
நானும் நீயும் கூடிக் குலவும்
ஒரே ஒரு கணத்தை
நிலையென் றெண்ணி நின்று விடாதே
தொடருன் பயணத்தை

எனக்குப் பின்னால் வந்தது போதும்
என்னைக் கடந்து செல் *14.12.2019*

## 114. காற்றென்றால் வீச வேண்டும்!

காற்றென்றால் வீச வேண்டும்
கலகலப்பாய்ப் பேச வேண்டும்
கம்பம் போல் நிற்கலாமா
கண் சிமிட்ட மறுக்கலாமா

ஊர்க்கோடி அரச மரம் உம்மென்றிருந்தால்
குருவிகளுக்கேது கொண்டாட்டம் - சின்ன
குழந்தைகளுக்கும் வெகு திண்டாட்டம்

காற்றென்றால் வீச வேண்டும்
கலகலப்பாய்ப் பேச வேண்டும்
கம்பம் போல் நிற்கலாமா
கண் சிமிட்ட மறுக்கலாமா

கார்மேகப் பொதிசுமக்கும் கழுதையா ஆகாசம் - அது
ஜதி போட்டுக் குதித்தாடும் ஜடாதர ப்ரவாகம்

காற்றென்றால் வீச வேண்டும்
கலகலப்பாய்ப் பேச வேண்டும்
கம்பம் போல் நிற்கலாமா
கண் சிமிட்ட மறுக்கலாமா

கொண்டையசைத்தொரு சேவல் நீட்டிக்
குரல் கொடுத்ததும்
எனக்குள் இருந்து காற்றுத் தேவன்
கண்மலர்ந்து விட்டான்

அண்டை அயலெலாம் சண்டமாருதம்
வீசப் போகிறதோ
மலரொவ் வொன்றும் மௌனம் கலைந்து
பேசப் போகிறதோ

விசும்பின் துளிக்குப் பசும்புல் தலை - தவம்
செய்யப் போகிறதோ
இன்னொரு சிலம்பு தரையில் விழுந்து
சிதறப் போகிறதோ
அண்ணலும் அவளும் நோக்கிய நாடகம்
நிகழப் போகிறதோ
பசித்த வயிற்றின் நெருப்பு ஜகத்தை
அழிக்கப் போகிறதோ
பசுமையால் இவ்வுலகமெங்கும்
செழிக்கப் போகிறதோ

கண்மலர்ந்தான் காற்றுத் தேவன்
விண் நிறைத்தது கவிதை ஓசையே *15.12.2019*

## 115. எதையோ கொளுத்தும் தீ இல்லை!

எதையோ கொளுத்தும் தீயில்லை - இது
இதயச் சுடரின் தீ

உதயக் கதிரில் ஒரு பொறியெழுந்து
விதையாய் என்றன் நெஞ்சில் விழுந்து
வானளாவி வளர்ந்து சிரிக்கும்
வல்லமை மிக்கதிது
மாநிலம் பயனுற வாழ்வதற்கே தினம்
சொல்லமைப்பதிது

எதையோ கொளுத்தும் தீயில்லை - இது
இதயச் சுடரின் தீ

சதையும் எலும்பும் குருதிக் குழம்பும்
மீறிச் செல்லும் வீரமிது
சிதையில் இருக்கும் பிணத்தைக் கூடத்
தட்டி எழுப்பும் வேகமிது
விதவிதமான வர்ணஜாலம்
காட்டும் வான வில்லிதுவே
வெடித்துச் சிதறும் மின்னல் வெட்டில்
பூட்டும் அம்புச் சொல்லிதுவே

தொலைவில் தானிது மேகப் பஞ்சு
தொட்டுப் பார் புது அக்கினிக் குஞ்சு
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம் *29.12.2019*

## 116. நான் படைத்த உலகம்!

அன்றொரு நாள் காதல் வனத்தில்
ஆயிரம் மலர் பறித்தேன்
பின்னொரு நாள் மின்னல் கீற்றில்
பிச்சிப் பூத் தொடுத்தேன்
சூடிக் கொண்டது மேகக் கூந்தல்
வானமெல்லாம் பூப்பந்தல்
நான் படைத்த உலகம் - இந்த
வானும் புவியும் அண்டம் முழுதும் - என்
வார்த்தைச் சிதறல் தகத்தகாயம் - ஆம்
நான் படைத்த உலகம்

வைரம் போலொரு வார்த்தை
- வண்ண
மலரைப் போலொரு வார்த்தை
கைக்கடங்காமல் திமிறிச் செல்லும்
அணிலைப் போலொரு வார்த்தை
முத்தம் போலொரு வார்த்தை - சின்ன
முனகல் போலொரு வார்த்தை
சத்தம் போடும் சண்டமாருதப்
புயலைப் போலொரு வார்த்தை
வார்த்தை வார்த்தையாகப் பிரிந்து
நானே வளர்கிறேன்
மீண்டும் மீண்டும் வார்த்தைகளாகப்
பிறந்து மலர்கிறேன்
நான் படைக்கும் உலகம் - இந்த
நட்சத்திரங்கள் வெட்ட வெளி
அத்தனையும் என் கனவுகளே
பராசக்தியின் அதிர்வுகளே *30.12.2019*

## 117. ஒருமுறை செவி கொடு

ஒரு முறை ஒரே ஒரு முறை
என் ஒரு கவிதைக்(கு)
உன் இரு செவி கொடு
அதற்குப் பிறகு நீயதன் வசம்

அது -
உன்னை என்றும் பிரியாமல் - உன்
இதயச் சுடரில் அவ்வப் போது
நெய்வார்த்துக் கொண்டிருக்கும்
நெகிழ்ச்சியுடன் குரல் கொடுக்கும்
(ஒரு முறை ஒரே ஒரு முறை)

உன்
தனிமைக்குள் மேடையிட்டுத்
தவம் செய்யக் கூடும்
திடீரென்(று) ஆனந்தத்
தாண்டவமும் ஆடும்
கணிதத்தில் சிக்காத
காலத்தை உருவாக்கிக்
கனவுகளை நிகழ்வுகளாய்க்
காட்டி விளையாடும்
(ஒரு முறை ஒரே ஒரு முறை)

காதலனைப் போல் வந்து கன்னத்தில் முத்தமிடும்
தாயாய் அமர்ந்து தலைகோதும்
உன்னை நதியாக்கி அதைவிழுங்கிக் கடலாகும்
விண்மீன்கள் மலர்கின்ற வெட்டவெளித் திடலாகும்
(ஒரு முறை ஒரே ஒரு முறை)

அது நான் அதுவே நீ
இதுதான் நம்மை இணைக்கும் கதி
பயணம் மிகவும் நீண்டது தான்
பற்றிக் கொள் என் கவிதை விரலை
உற்றுக் கேள் என் உயிரின் குரலை

ஒரு முறை ஒரே ஒரு முறை
என் ஒரு கவிதைக்(கு)
உன் இரு செவி கொடு
அதற்குப் பிறகு நீயதன் வசம்

*08.01.2020*

## 118. இனியும் பொறுமை எதற்கு?

இனியும் பொறுமை எதற்குத் தோழா
எழுப்புவதென் பணியே - உன்
தனிமைச் சிறையைத் தகர்த்துக் கொண்டு
உடனேவா வெளியே

காசுக்காக எதையும் விற்கும்
கயமை இன்றே தொலையட்டும்
தேசம் தெய்வம் ஒன்றாய்க் காணும்
தெளிவு நெஞ்சில் மலரட்டும்

நாசக்கார நச்சு விதைகள்
நம்மை விட்டு விலகட்டும்
ரோஷம் இன்றி வாழ்வோர் எல்லாம்
ரௌத்திரத்தைப் பழகட்டும்

ஒவ்வொரு தெருவிலும் உரக்கச் சொல்வாய்
உன்பேர் இந்தியன் தான்
உன்மதம் உன்வழி பாடு நம்மை
ஒன்றிணைக்கும் மானுடம் தான் *09.01.2020*

## 119. எங்கிருந்தால் என்ன?

எங்கிருந்தால் என்ன -
என்
குரல் வரும் உன்னோடு -
நீ
எங்கிருந்தால் என்ன -
என்
குரல் வரும் உன்னோடு

காற்றில் கலந்துன் காதுகளின் ஊடே - உயிர்
ஊற்றில் நுழைந்து - சுடர் விளக்காய் மிதந்து
எப்படியோ உன்னை எட்டிப் பிடித்து விடும் - உன்
ஏகாந்த வேளையிலே
உன்னைத் தழுவியுன் உயிர்மூச்சின் வெப்பத்தில்
மின்னற் சுவையாகி மெல்ல மெல்ல
உன்னைத் தனக்குள் அமுதக் குழம்பாக்கிப்
பருகிப் பருகி வளர்ந்து பெரிய
பரிதிக் கோளமாய்ப் பரிணமித்து
விரியும் அப்போது ஆங்கொரு துளியில்
நீயும் நானும் மீண்டும் பிறப்போம் - ஆதியில்
வார்த்தை இருந்த தென்ற வேத
வாக்கின் பொருளாய் நாமே மலர்வோம்

கண்ணம்மா!
நட்ட நடுநிசியில் - எத்தனை
நட்சத்திரங்களடி

*10.01.2020*

## 120. புதிராகவே இரு!

புரிந்து கொள்ளத் தேவையில்லை - நீ
புதிராகவே இரு
கடக்கட்டும் பலயுகங்கள் - நீ
புதிதாகவே இரு
புரிந்து கொள்ளத் தேவையில்லை - நீ
புதிராகவே இரு

மேகங்கள் ஓடுமாம்- உள்ளே
வெண்ணிலா மிதக்குமாம்
பூப்பூவாய்க் கோடி விண்மீன்
பொலபொலவென்று
சிதறிக் கிடக்குமாம்
தென்றலில் நீயேறி
ஊர்வலம் வரும் போ(து)
இத்தனையும் நடக்குமாம்
ஆனாலும் உனைக் காண
ஊன விழி போதாதாம்
ஞான விழி வேண்டுமாம்
மானிடர்கள் பாடுகிறார்
ஓயாமல் தேடுகிறார்
கானகத்தில் காரிருளில்
கண்கட்டி ஓடுகிறார்
ஆரவாரமெல்லாம்
அப்படியே தொடரட்டும் - நீ
மௌனமாகவே இரு

நான்
புரிந்து கொள்ளத் தேவையில்லை - நீ
புதிராகவே இரு

வடிவமே அற்ற உனக்கு நீல
வண்ணம் தீட்டிப் பார்க்கும் விழிகள்
புலன்களில்லாத போதும் உன்னைப்
புகழ்ந்தும் பணிந்தும் புலம்பும் மொழிகள் - நீ
இருக்கிறாய் என்பதால் தாம் இருப்பதாய் நம்பும் பொய்கள்
இரு, இரு என்றைக்கேனும்
துருவங்கள் இணையக் கூடும்
அது வரை
புதிராகவே இருந்து விட்டுப் போ *11.01.2020*

## 121. கொளுத்திப் போடு குப்பைகளை

கொளுத்திப் போடு குப்பைகளை
வெளியில் இல்லை உனக்குள்ளே

வெளுத்து வாங்கு, உடுக்கையடி - உன்
வீரக் கனலின் வாடையை
மூச்சுக் காற்றில் கலந்தபடி

கொளுத்திப் போடு குப்பைகளை
வெளியில் இல்லை உனக்குள்ளே

ஆசை, அச்சம், அறிவீனம்
அடிமை புத்தி, அவமானம்
யாவும் எரிந்து சாம்பலாக
அற்பத் தனங்கள் அலறி ஓட

கொளுத்திப் போடு குப்பைகளை
வெளியில் இல்லை உனக்குள்ளே

ஏழை எளிய மக்கள் வீட்டில்
பொங்கல் பொங்கட்டும்
ஏய்ப்பவரைக் கண்டால் மனம்
சீறிப் பொங்கட்டும்
தோழமையும் தோள்வலியும்
வெற்றி சேர்க்குமே
சூழும் இருள் மேகமெல்லாம்
விலகி ஓடுமே

கொளுத்திப் போடு குப்பைகளை
வெளியில் இல்லை உனக்குள்ளே
கொழுந்து விட்டெரியட்டும்
கொடுமைகளைப் பொசுக்கட்டும்

*14.01.2020*

## 122. நெஞ்சு கொதிக்கிறது

சினத்தை அடக்கிக் கொள்வது கூடக்
கடினமாக இருக்கிறது

பிணத்தை வைத்தே அரசியல் நடத்தும்
ஓட்டுப் பிச்சைக்காரர்களும்
இனத்தை மதத்தை மொழியைக் காட்டிப்
பிரிக்கும் வாய்ச்சொல் வீரர்களும்
கணக்கில்லாமல் சொத்துச் சேர்த்துச்
சிறைக்குச் செல்லும் தியாகிகளும்
உனக்கும் எனக்கும் இடையில் பகைமைத்
தீ மூட்டுகின்ற சூரர்களும்
சீ!

நினைத்துப் பார்க்கும் போதே என்றன்
நெஞ்சு கொதிக்கிறது
சினத்தை அடக்கிக் கொள்வது கூடக்
கடினமாக இருக்கிறது

ஊழல் செய்த பேர்வழிகளை நாம்
தலைமேல் தூக்கிக் கொண்டாடுவோம்
ஒவ்வொரு நாளும் குடும்பச் சுமையில்
மூழ்கித் திணறித் திண்டாடுவோம்
வாழும் வழியறியோம் - நம்மை
வஞ்சிப்பவர்க்கே வாக்களிப்போம்
வீசும் எலும்புத் துண்டுகளுக்கே
விசுவாசமாகக் குரைத்திடுவோம்

நினைத்துப் பார்க்கும் போதே என்றன்
நெஞ்சு கொதிக்கிறது
சினத்தை அடக்கிக் கொள்வது கூடக்
கடினமாக இருக்கிறது

சினம்காக்கச் சொன்னவரும் சினம்கொண்ட கணமுண்டு
சினத்தைக் கொளுத்திப் போடுகிறேன் - எந்த
மனத்திலாவது விழுந்து தொலையட்டும்
பற்றிக் கொண்டு தீ பரவட்டும்

*18.01.2020*

## 123. எனக்குத் தேவை, ஒரு வாசகன்!

எனக்குத் தேவை ஒரு வாசகன்
ஆம்!
எனக்குத் தேவை ஒரு வாசகன்

சொல்லப் போவது கீதையில்லை
சுட்டிக் காட்டப் பாதையில்லை
ஆனால்
எனக்குத் தேவை ஒரே ஒரு வாசகன்

மணிக்கணக்கில் நான் பேச மாட்டேன்
மனக் குளத்தில் கல் வீச மாட்டேன்
மனத்தில் மலர்வேன் - ஒரு
கணத்தில் மணமாய் விரவி நிறைவேன்
அதற்கு மட்டும்

எனக்குத் தேவை ஒரு வாசகன்
ஒரே ஒரு வாசகன்

என்னொரு சொல்லில் அவன் கண்களில்
தீப்பொறி எழுந்தால் போதும் - அல்லது
சின்ன துளியாய்க் கண்ணீர் தளும்பி
சிந்தாதிருந்தால் போதும்
என் கவிதையில் அவன் சாய்ந்து கொண்டு
கண்ணயர்ந்தாலும் போதும்
சென்ற யுகத்து ஞாபகம் நெஞ்சில்
மின்னலடித்தால் அதுபோதும்

எனக்குத் தேவை ஒரு வாசகன்
ஒரே ஒரு வாசகன்

அறிவின் ஓசை அடங்கிப் போயோர்
அமைதி அங்கே நிலவும்
அந்தக் கணமே மௌனமாய் - ஓர்
அனுபவம் அவனுள் நிகழும்
என்னுள் இருந்து வரவில்லை - அது
அவனொளி அவன்விளக்(கு) அவன்திரி
அவனுக்காகக் காத்திருக்கின்றேன்
வரட்டும் இதோ வாசற்படி

*27.01.2020*

## 124. மின்னற் சுவையும் மெல்லப் புரியும்

இருட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தால்
இதயம் கனக்கும்
வெளிச்சத்துக்கு வந்து விட்டால்
மெலிதாய் மிக இனிதாய் விரியும்
மின்னற் சுவையும் மெல்லப் புரியும்

காற்றுடன் சற்றுற வாடிப் பார்
கவிதையின் மூலக் கதவு திறக்கும்
கனவுயிர்க்கும் கணங்களெல்லாம்
கண்விளிம்பில் நின்று ஜதி போடும் - நீ
காவிய தரிசனம் பெறக் கூடும்

இருட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தால்
இதயம் கனக்கும்

என்னுள் இருக்கும் ஏகாந்த வெளியில்
உன்னை ஏற்றி வைக்க முயல்கிறேன்
உன்னுள் இருக்கும் ஒளியைத் தூண்டி
உதவி செய்வாயா - கொஞ்சம்
உயர்ந்து வருவாயா
முன்னம் இருந்த புள்ளிக்குள் நாம்
மீண்டும் செல்வோமா - சென்றால்
மீண்டு வருவோமா
இன்னும் எதற்கு மௌனச் சடங்கு
ஏதாவது நீ சொல்லத் தொடங்கு *27.01.2020*

## 125. உயிரைப் பறிக்கும் உரிமை

உயிரைப் பறிக்கும் உரிமையை - இங்(கு)
எந்த மதமும் தரவில்லை
தருகிறதென்று யாரும் சொன்னால்
அதுவொரு மதமில்லை

என்மதக் கடவுள் மட்டுமே கடவுள்
என்பது சரியில்லை
ஏற்றால் விடுவோம் மறுத்தால் சுடுவோம்
இதுவொரு வழியில்லை

பணத்தால் நயத்தால் வாக்குறுதிகளால்
பயமுறுத்தல்களால்
மனத்தை ஈர்த்து மதத்தை மாற்றும்
வழியும் சரியில்லை

நம்புவதென்பது பிறப்புரிமை - அதைத்
தடுப்பது தான் மடமை
நம்புவதே வழி என்ற மறைவழி
நடப்பது மிக அருமை

அவரவர்க்கென்ற நம்பிக்கையைப் பிறர்
ஆராயத் தேவையில்லை
அவரவர் வழியில் அவரவர் சென்றால்
சண்டை எதுவுமில்லை *29.01.2020*

## 126. நடந்து போகலாம் வா!

**(சகோதரி ஃபாத்திமா பாபுவின் ஒரு காணொலி, நேரடிப் பதிவைக் கண்டு, கேட்டு ரசித்தேன். விருகம்பாக்கம் ஐநாக்ஸ் திரையரங்கில் இருந்து, தம் இல்லத்திற்கு அவர் நடந்து சென்றதை, ஒரு குழந்தையின் குதுகலத்தோடு அவர் விவரித்துள்ளார். அதன் உத்வேகத்தில் வந்ததே இக்கவிதை.)**

நடந்து போகலாம் வா

நாலாறு காதம் ஆனாலும் என்ன
காலார நடந்து செல்வோம் - பல
காட்சிகள் கடந்து செல்வோம்

நடந்து போகலாம் வா

வாகன இருக்கையில் முதுகும் மனமும்
வளைத்துக் கொண்டு அமர்வதைக் காட்டிலும்

நடந்து போகலாம் வா

கற்களும் முட்களும் இருந்தால் என்ன
கவிதையிசைத்தபடி
சொற்களும் மௌனமும் தாளமிசைக்க - மனச்
சோர்வணுகாதபடி

நடந்து போகலாம் வா

விரைந்து சென்று விரைந்து சென்று
என்ன விளையப் போகிறது
கரைந்து போகும் காலத்தில் - இவ்
வுடல் மட்டும் தான் சாகிறது
ஒவ்வொரு கணமும் ஆர அமர
வாழ்ந்து பார்த்திடுவோம் - ஒரு
செவ்வரளிப்பூ சிரிக்கிறதே
- அதை
நின்று ரசித்திடுவோம்

வா
நடந்து போகலாம் வா

*29.01.2020*

## 127. படுகுழியில் விழுகின்றோம்

பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப் பட்டுப்
படுகுழியில் விழுகின்றோம் குறிக்கோள் இன்றிக்
கணத்துக்குக் கணம் பல வேடம் போடும்
கயவர்களைத் தலைவரெனத் தொழுகின்றோம் நம்
உணர்ச்சிகளை உசுப்பேற்றி உன்மத் தத்தில்
உயிர்ப்பணயம் வைத்துவிளை யாடு கின்றோம்
பிணத்துக்கு மாலையிட்டுச் சூடமேற்றிப்
பிதற்றுகிறோம் பீடிழந்து வாழ்கின்றோமே

பழம்பெருமை பேசுகிறோம் பக்தியின்றிப்
பகட்டுக்குக் கோயில்குளம் சுற்று கின்றோம்
அழகென்றால் ரசிப்பதற்கே என்றில் லாமல்
அதைவிழுங்கி அனுபவிக்க
அலைபாய் கின்றோம்
முழுமையடை யாமலுடல் முதிர்ந்து போவோம்
முன்னேற முடியாமல் முடங்குகின்றோம்
பழுதுபார்த் துக்கொண்டே பயணம் செய்து
பயனின்றிப் பாதியிலே திரும்புகின்றோம்

இவனைவிட அவனேமேல் என்று சொல்லி
இழுபறிக்கா ளாகிப்பின் வருந்துகின்றோம்
எவனுக்கும் பிறர்மேலக் கரையில் லை - யார்
எக்கேடு கெட்டாலும் கவலை யில்லை
அவனவன்தன் சொத்துசுகம் பெருக்கிக் கொள்ள
அரசியல்வியா பாரத்தில் இறங்கு கின்றான்
தவறுகளே தர்மமெனத் திரித்து விட்டோம்
தறிகெட்டு நெறிகெட்டுக் கெட்டுப் போனோம்

ஒருநிமிடம் சிந்தித்தால் போதும் உண்மை
உள்ளங்கை நெல்லியெனப் புரியும் நம்மால்
உருப்பெற்று மேலெழுந்த ஆட்களெல்லாம்
தலைவர்களா இல்லைநம் வேலையாட்கள்
மறுபடியும் சொல்கின்றேன் மக்கள் நாமே
மந்தைகளாய் உள்ளநிலை மாற வேண்டும்
ஒரு விரலால் ஆட்சிகளை மாற்றுகின்ற
உயர்பதவி நம்பதவி உணர்ந்து கொள்வோம்

*30.01.2020*

## 128. நீ கடல், நான் புயல்!

நீ கடல் நான் புயல்
அப்படித்தானே சொல்கிறாய்
கரைகடக்கும் வரையென்னைக்
கைப்பிடித்துச் செல்கிறாய்

தரைப்பயணம் பழகாமல்
தள்ளாடுகின்றேன்
நிலம் நடுங்க வாழுமுயிர்க்
குலம் நடுங்க ஓடுகிறேன் - தலைவிரித் தாடுகிறேன்

அலைக்கரங்கள் அரவணைக்க
மிதந்து வந்த
அனுபவத்தை - என்
விழி நடுவில் பேரமைதி
வீற்றிருந்த தோரணையை
அசைபோட்டுப் பார்க்கின்றேன்
அடடாவோ அடடா - பின்
கரையருகே வந்ததும் ஏன்
கரகாட்டம் ஆர்ப்பாட்டம் - என்
தாண்டவத்தில் ஊரெல்லாம்
தவிடு பொடி தரைமட்டம்

ஆட்டம் அடங்கியதும் அமைதி - ஓ!
அமைதி இல்லை வெறும் சோர்வு
வலுவிழந்த புலனைந்தும் வனைந்தவெறுங் கூடு
எலும்புத்தோல் தேடியலை கின்றபெரும் பாடு

தினமும் உன்னுள் மூழ்கியெழும்
தினகரனைப் பார்க்கின்றேன்
பட்டப் பகலில் வெட்ட வெளியில்
பயணிக்கிற(து) அவன் தேர்
சுற்றிச் சுழலும் கோள்கள் நடுவே
சற்றும் பாதை விலகாத நேர்மை
எனக்கும் அதைக்
கற்றுக் கொடுப்பாய் கடலே
கருணையே பெரிய கடவுளின் வடிவே *03.02.2020*

## 129. அந்த ரங்க ராட்டினம்!

அந்த ரங்க ராட்டி னத்தை
யார் சுழற்றினார்- என்னை
அந்தரத்தில் ஆடவிட்டு
மறை கழற்றினார் - என்
அந்தரங்க நாடகம்
அரங்கிலேற்றினார் - பின்
அந்த மென்றும் ஆதியென்றும்
கதை நிகழ்த்தினார்
(அந்த ரங்க ராட்டினத்தை)

பூமி என்றும் வானமென்றும்
பிரிய வைத்ததேன் - ஆ
சாமியென்றும் பூதமென்றும்
அச்சுறுத்தல் ஏன் - அட
நாமிழைத்த கோட்டிலே
நமைப்பிணித்ததேன்
ஆமிதற்குப் புள்ளி போட்டுத்
தொடக்கி வைத்ததேன்
(அந்த ரங்க ராட்டினத்தை)

ஒன்று மட்டும் உண்மை அந்த
ஒன்றில் ஒன்றவே - நான்
இன்று மட்டும் முயல்கிறேன்
நெருங்க வில்லையே
என்று நிற்கும் ராட்டினம்
இறங்க வேண்டுமே
அன்று மட்டும் கைகொடுத்(து)
அழைக்க வேண்டுமே
(அந்த ரங்க ராட்டினத்தை) *07.02.2020*

## 130. நல்லிசைத் தேநீர்

(பொழுது புலரும் முன்பு, நான் என் வீட்டுக் கூடத்தில் தேநீர் அருந்திக் கொண்டே, முகேஷ் பாடிய "ஸாரங்கா தேரி யாத் மேய்ன்" என்ற பழைய இந்தித் திரைப்படப் பாடலைக் கேட்டு மெய் மறந்திருந்த போது...)

ஞாயிற்றுக் கிழமையில் நல்லிசைத் தேநீர்
நிரம்பி வழிகிறது
துளித்துளியாய் நான் பருகப் பருகத்
தூக்கம் கலைகிறது

எங்கிருந்தோ "ஸாரங்கா தேரி"
இனிமை சேர்க்கிறது
முங்கி எழுந்தேன் முகேஷ் குரலில்
நெஞ்சு நனைகிறது

செவி வழியாகச் சிந்தை கடந்து
உயிரை அளாவிடவும்
இசையால் மட்டும் முடிகிறது - என்
பொழுதும் அதிலே விடிகிறது

நானும் அந்தப் பாட்டும் மட்டும்
நெருங்கி அமர்ந்துள்ளோம்
வானம் இறங்கி ஒருபூ அருகில்
வந்தமர்ந்தது போல் *09.02.2020*

## 131. தலைவணங்காதே, தோழி!

இன்று, நான் மதிக்கும் தோழி ஒருவர், எனக்கு, அல்லது, என் ஆற்றலுக்குத் "தலைவணங்குகிறேன்" என்று பின்னூட்டம் பதிந்திருந்தார். அந்தச் சொல் என்னைத் தாக்கியது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கண்ணாடிப் பேழைக்குள் இருந்த ஒரு பொம்மைக் கோழியைப் பார்த்து, "எட்டி உதை வெளியே வா இளவேனில் காய்கிறது" என்று கவிஞன் வண்ணதாசன் கட்டளையிட்ட கவிதை என் நினைவை உலுக்கியது.)

தலைவணங்காதே - தோழி
தலைவணங்காதே
தர்மம், நீதி, கடவுளோடு
பெரியவர்கள் யாவர் முன்னும்
பணிவுடன் இரு - ஆனால்
துணிவுடன் இரு

மதிப்பவரை மதித்து நட
மிதிப்பவரை எதிர்த்து நட
எதிலும்விழிக் கூர்மையுடன்
எச்சரிக்கை யோடுதடம்
பதித்து நட
ஏழை மக்கள் யாவ ருக்கும்
உதவு கின்ற வண்ணம் சட்டம்
விதித்து நட

தலைவணங்காதே - தோழி
தலைவணங்காதே

அழகுச் சிலையென்று சொல்லி உன்னை
அப்படியே நிற்கவைக்கப் பார்ப்ப வர்முன்
தழலாக எழுந்துநட தலைநி மிர்ந்து
தளராமல் நடைபோடு நிலைபெ யர்ந்து
முழம்பூவுக் கல்வாவுக் காசைப் பட்டு
முடங்கிக் கிடந்ததெலாம் அந்தக் காலம்
ஒழுக்கத்தை மட்டுமே உயர்வென் றெண்ணி

உரக்கச்சொல் இதுவேவுன்
வசந்த காலம்

தலைவணங்காதே - தோழி
தலைவணங்காதே

பெய்யெனநீ சொல்லமழை பெய்ய வேண்டாம்
பேசாமல் இருந்துபூக் கொய்ய வேண்டாம்
பொய்வழக்கச் சடங்குகளை நம்ப வேண்டாம்
புழுக்கத்தில் உழன்றுழன்று வெம்ப வேண்டாம்
தைரியமுன் கண்களிலே தெரிய வேண்டும்
தனிமையிலும் உன்மதிப்புப் புரிய வேண்டும்
தெய்வமே துணையென்று கொள்ள வேண்டும்
தேவையற்ற அடக்கத்தைத் தள்ள வேண்டும்

தலைவணங்காதே - தோழி
தலைவணங்காதே

கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் மட்டு மேநீ
கனவுகளை உதறிவிடச் சொல்வார் சீச்சீ
வெட்டிவிடு அவர்பேச்சை வீரச் செல்வி
விளங்கட்டும் உன்னாலே உயர்ந்த கல்வி
மட்டில்லா ஆசைகளும் தேவை யில்லை
மகிழ்ச்சிக்கும் தடைபோடத் தேவை யில்லை
எட்டியுதை வெளியேவா நீயா கோழி
என்றென்றும் வெற்றிக்கு நீயே தோழி.

*11.02.2020*

## 132. அத்தனையும் நீ

அந்தச் செடியின் மெல்லிய கிளை யொன்றில்
வந்தமர்ந்ததொரு குருவி - அது
அமர்ந்த போது கிளை ஆடியது - அது
உந்தி எழுந்து பறந்த பிறகும்
அந்தக் கிளை கொஞ்சம் ஆடியது
காற்று வந்து சீண்டிய போதும் - பனித்
துளிகள் விழுந்து தீண்டிய போதும்
ஆடியது கிளை ஆடியது
நானும் அந்தக் கிளை போல் தான்
குருவி, காற்று, அருவி, மேகம்
மழை, இடி, நட்சத்திரம் - என
அதிர்வுக்கெல்லாம் சுருதியமைத்துப்
பாடுகிறேன் - நான் - ஆடுகிறேன்
கேட்கும் போது வார்த்தைகளைக்
கடந்து சென்று பார்
குருவி, காற்று, அருவி, மேகம்
ஒவ்வொன்றாக எல்லாம் தெரியும்
அத்தனையும் நீ என்ற
உண்மை புரியும் - ஆம்!
அத்தனையும் நீ என்ற
உண்மை புரியும்

அந்தச் செடியின் மெல்லிய கிளை யொன்றில்
வந்தமர்ந்ததொரு குருவி

*13.02.2020*

## 133. வாதாபி காத்திருக்கிறேன்

உணவைப் பகிர்ந்து கொள்ளவில்லை - வெறும்
உணவைப் பகிர்ந்து கொள்ளவில்லை - என்
உணர்வைப் பகிர்ந்து கொள்கிறேன்
உணர்வை மட்டும் இல்லை - என்
உயிரைப் பகிர்ந்து கொள்கிறேன் -
உயிரை மட்டும் இல்லை
என்னை நானே பகிர்ந்து கொள்கிறேன்
உன்
வாயிற் கடை மணி நடுநா நடுங்க - நீ
உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லிலும்
நானே எழுந்து நிற்கிறேன் - என்னை
நீயோ மென்று சுவைக்கிறாய்
என்
உயிரை மட்டும் இல்லை
என்னை நானே பகிர்ந்து கொள்கிறேன்
தீயை விழுங்கி விட்டது போலே
சில நேரம் நீ தவிக்கிறாய்
சின்ன குழந்தை முத்தம் போலச்
சில நேரம் நீ ரசிக்கிறாய்
மாய உலகை விட்டுப் புதிய
மாயம் படைக்கத் துடிக்கிறாய்
மறந்து விடாமல் ஒவ்வொரு கணமும்
என்னை வம்புக் கிழுக்கிறாய்
என்
உயிரை மட்டும் இல்லை
என்னை நானே பகிர்ந்து கொள்கிறேன்
மென்று தின்று தீர்த்தாலும் -
நீ
மென்று தின்று தீர்த்தாலும் - நான்
மீண்டும் மீண்டும் பிறக்கிறேன் - உன்
ஒவ்வோர் அணுவையும் சோதித்துப் பார்

உள்ளே இருந்து சிரிக்கிறேன்
நன்று நன்று(என்) கவிதையெல்லாம்
நானே தானா திகைக்கிறேன்
என்றேனும் ஒரு முனிவன் வருவான் - இந்த
வாதாபி காத்திருக்கிறேன்

*09.02.2020*

## 134. காலச் சக்கரம் சுழல்கிறது

காலச் சக்கரம் சுழல்கிறது - இதில்
கனவு காண்பவன் நான்
கண்ணிமைக்கும் நேரத்தில் - ஒரு
கவிதை சொல்பவன் நான்

ஆல முண்ட நீல கண்டன்
போலத்தான் அந்த வானம்
சலன இருளை விழுங்கி விட்டும்
புலரும் ஒவ்வொரு நாளும்
(காலச்)

சொந்த பந்தம் எத்தனை - யார்
கூட வருவாரோ - நான்
வெந்த பின் என் சாம்பலள்ளிப்
போட வருவாரோ
கந்தன் கைவே லாயுதம் - போல்
மின்னலடிக்கிறது
கனமழை பெய்தோய்ந்தபின் - வான்
வில்வளைக்கிறது
(காலச்)

என்
பாட்டுக்காகத்தானா அந்த
வானம் புலர்கிறது - அதைக்
கேட்டு விட்டா பறவைக் கூட்டம்
சிறகு விரிக்கிறது
வானம் என்ற கடலில் பூமி
சின்ன துளியாய்த் தெறிக்கிறதே
ஆனாலும் என் பாடல் இந்த
அண்டமெங்கும் ஒலிக்கிறதே
(காலச்)

*11-03-2020*

## 135. நீ மட்டுமே

இழையிழையாய் என்னைப் பிரித்துப் போட்டால் - மிஞ்சி
இருப்பது நீ மட்டுமே - உன்
நிழலை எப்படி நானென்று சொல்லி
என்னை உருவாக்கினேன்
(இழையிழையாய்)

என்னை இழந்த பிறகு தெரிவாய்
இது தெரியாமல் இருந்தேன்
இன்னும் நெருங்க இடமில்லாமலா
உன்னுள் நான் கலந்தேன்
(இழையிழையாய்)

தெரிந்து கொள்வதற்குள் நான்
திசையெல்லாம் திரிந்தேன்
தெரிந்த கொண்ட கணமே நானே
திசைகளாக விரிந்தேன்
புரிந்த கொள்ள முயலும் போதே
புதிதாய் நான் பிறந்தேன்
புவியும் வானும் இணையுமாமே - அந்தப்
புள்ளியிலே மலர்ந்தேன்
(இழையிழையாய்)

*16-03-2020*

## 136. தேடி வருகிறதே கவிதை

தேடி வருகிறதே கவிதை
தேநீர் அருந்திக் கொண்டே படி - உன்னைத்
தேடி வருகிறதே கவிதை
தேநீர் அருந்திக் கொண்டே படி
வானம் இடிந்து விழக்கூடும்
விழுந்தால் என்ன
பூமி மீண்டும் எழக்கூடும்
அது போதாதா
தேடி வருகிறதே கவிதை
தேநீர் அருந்திக் கொண்டே படி
அச்சப் பேயை அணுக விடாதே
ஆச்சரி யத்தை இழந்து விடாதே
இன்றிப் போது நாமிருக் கின்றோம்
என்றென் றைக்கும்
இது போதாதா
தேடி வருகிறதே கவிதை
தேநீர் அருந்திக் கொண்டே படி
தேநீர் அருந்து நடுநடுவே
கவிதைத் துளியும் கொஞ்சம் அருந்து
சூடா சுவையா எது அதிகம்
சுழன்று கொண்டே இருக்கும் உலகம்

*24.03.2020*

## 137. நான் கவிஞன்

காலம் என்னைக் கடந்து சென்றால்
நான் மனிதன்
காலத்தை நான் கடந்து சென்றால்
நான் கவிஞன்
கவிஞன் என்று சொல்லித் தானே
புவியில் என்னை உயிர்ப்பித்தாய்
கடந்து செல்வேன் கைப்பற்றிக்கொள்
நீயே நீயே பிரபஞ்சத்தாய்
என்னைச் சுற்றி இருப்பதை யெல்லாம்
பாடிப் பாடித் தீர்க்கிறேன்
உன்னை நினைத்தே
ஒளியில் இருந்து
சொல்லொவ் வொன்றாய்ச் சேர்க்கிறேன்
இன்னும் என்ன இருக்கிறதோ
என்
எதிரில் வந்து சொல்லிவிடு
இசையில் மயங்கி உறங்கி விடாதே
எழுந்து வா இன்(று) இன்னொரு நாள்

*25-03-2020*

## 138. அச்சமில்லை, அச்சமுண்டு!

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே -
அவர்களுக்கு
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
லட்ச லட்சமாக லஞ்சம்
வாங்கிச் சொத்து சேர்க்கவும்
மிச்சத்தை ஸ்விட்சர்லன்ட் வங்கிகளில் போடவும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
லச்சை இன்றிக் கட்சி மாறி ஆட்சிபீடம் ஏறவும்
துச்சமாக நம்மை எண்ணி இஷ்டம் போல ஆளவும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
சாதிச் சண்டை சமயச் சண்டை வீதிச் சண்டை போடவும்
சர்ச்சு கோவி லுடன் மசூதி மோத விட்டுப் பார்க்கவும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே -
அவர்களுக்கு
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே - நமக்கு
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே
அநீதியை அராஜகத்தை எதிர்த்து நின்று பேசவும்
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே
மந்தை புத்தி இன்றிச் சொந்த சிந்தையோடு வாழவும்
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே
கூட்டம் இன்றி கோஷம் இன்றி சத்தியத்தை கூறவும்
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே
தாயகத்தைப் பிளவு செய்யும் அரக்கரைத் தடுக்கவும்
அச்சமுண்டு அச்சமுண்டு அச்சமெங்கும் உள்ளதே
மக்களுக் கிருக்கும் அச்சம் மறைந்து போக வேண்டுமே
ஆட்சியாளர் நெஞ்சில் அச்சம் கொஞ்சமேனும் வேண்டுமே

*09-08-2020*

## 139. சுதந்திரம்

சுதந்திரம் நம் சுதந்திரம்
சுகமளிக்கும் சுதந்திரம்
அச்சம் அடிமை என்ற சொற்கள்
அகன்றதால் சுதந்திரம்
அனைவருக்கும் நெஞ்சுரம்
அளித்ததால் சுதந்திரம்

சுதந்திரம் நம் சுதந்திரம்
சுகமளிக்கும் சுதந்திரம்

தாயகத்தைச் சிறுமை செய்யும்
நோயகன்று போகவே
தர்ம பூமி யாக நாடு
தலைநிமிர்ந்து வாழவே

சுதந்திரம் நம் சுதந்திரம்
சுகமளிக்கும் சுதந்திரம்
யாவருக்கும் வாக்குரிமை
தந்ததேயிச் சுதந்திரம்
ஆக்க வல்ல, காக்க வல்ல,
நீக்க வல்ல எந்திரம்

சுதந்திரம் நம் சுதந்திரம்
சுகமளிக்கும் சுதந்திரம்

அப்படியா?

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்
பேச்சுரிமை தந்த துண்மை
ஏச்சுரிமை தந்ததார்
பேதைகளை மந்தைகளாய்
மேய்ப்பதற்கு வந்ததார்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

ஊழல் பெருச்சாளிகளை
ஊரெலாம் வளர்க்கிறோம்
ஊளையிடும் நரிகளுக்குப்
பதவியும் அளிக்கிறோம்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

ஏழைகளை ஏமாற்றும்
ஜாலவித்தை காட்டுவார்
கோழைகளை அச்சுறுத்தக்
கூலிப்படை ஏவுவார்
மக்களைப் பிரிப்பதற்கும்
மந்திரங்கள் ஓதுவார்
வக்கணையாய்ப் பேசி நச்சு
விதைகளையே தூவுவார்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

பாட்டினிலே வெள்ளையரின்
ஆட்சியைப் பந்தாடியவன்
பத்திரிகை மூலம் தேச
பக்தியினைத் தூண்டியவன்
வாழ்ந்த காலம் ஏது சுதந்திரம் - அவன்
வாழ்த்தியதால் வந்த சுதந்திரம்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

கப்பலோட்டி ஆங்கிலேயர்
கதிகலங்கச் செய்தவனும்
கடைசிவரை கொடிபிடித்துத்
தடியடியில் செத்தவனும்

வாழ்ந்த காலம் ஏது சுதந்திரம் - அவர்கள்
வருந்தியதால் வந்த சுதந்திரம்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

அரையாடைப் பக்கிரியாய்
அகிம்சைவழி போதித்து
ராட்டையாலே கோட்டைகளை
நடுங்க வைத்த நாயகரும்
வாழ்ந்த காலம் ஏது சுதந்திரம் - அவரை
மாய்ப்பதற்கும் வந்த சுதந்திரம்

சுதந்திரமாம் சுதந்திரம்
யார் கொடுத்த சுதந்திரம்

*15-08-2020*

## 140. பாடும் நிலா பாலு

(என் இனிய நண்பர், பாடும் நிலா மறைய முடியுமா?)

இரங்கற்பா எழுதமன மில்லை யப்பா
இசையென்ற மஞ்சத்தில் அமைதி யாக
உறங்கப்பா உன்பாடல் எல்லாம் வானில்
ஒளிசிந்தும் விண்மீன்கள் நிலவு நீயே
அரங்கப்பா டலுக்கெல்லாம் உயிர் கொடுத்தாய்
அந்தகனுக் குன்னுயிரை ஏன் கொடுத்தாய்
மரணத்தின் அர்த்தத்தைத் தேடித் தேடி
மனம்சலிக்கும் வேளையிலே வருமோ பாடல்

குரலாலே பாட்டுமலர் பொழிந்த வா - நீ
குடியிருந்த உடலுக்கு மலர்கள் தூவ
நிரலாக அணிவகுத்துன் பாடல் எல்லாம்
நிற்கின்ற வரிசைகண் டொதுங்கி விட்டேன்
விரலாலே சிலவார்த்தை பதிந்து விட்டு
விழியோரம் கண்ணீரைத் துடைத்து விட்டுப்
பரபரப்பாய்ப் பணிசெய்யத் தொடங்கிவிட்டேன்
பாழுலகம் எதற்கேனும் நிற்ப துண்டோ

*26.09.2020*

## 141. அந்தக் கிழவர்

இந்தக் கணத்தில் அந்தக் கிழவரை
ஏன் நினைக்க வேண்டும்
சொந்த பந்தம் வாழச் சொத்து குவித்துச் சென்றாரா
பெரிய பதவிகள் எல்லாம் வகித்துப்
பெருமை கொண்டாரா
எந்த விதத்தில் இந்தியாவுக்(கு) என்ன செய்துவிட்டார்
நல்ல நல்ல உடை அணிந்து காட்சி தந்தாரா
இந்தக் கணத்தில் அந்தக் கிழவரை
ஏன் நினைக்க வேண்டும்
அரைத்தட்டுப் பிரியாணிக்கு
ஆலாய்ப் பறப்பவரை
அழைத்துச் சென்று கூட்டம் கூட்டி
அதிர வைத்தாரா
அடுக்கு மொழிகள் அள்ளி வீசி
அரசியல் செய்தாரா
சாதி, சமயம், மொழியென் றேதும்
சண்டை போட்டாரா
இந்தக் கணத்தில் அந்தக் கிழவரை
ஏன் நினைக்க வேண்டும்
கோட்டை கொத்தளம் குறிவைக்காமல்
குடிலமைத்தாராம் - பஜனைப்
பாட்டைக் கேட்டுக் கொண்டே சும்மா
ராட்டை சுற்றினாராம்
ஆட்டுப் பாலும் கடலையுமே
அருந்தி வாழ்ந்தவராம்
அஹிம்சையாம் சத்தியமாம்
கதையளந்தாராம்
ராம் ராம்
இந்தக் கணத்தில் அந்தக் கிழவரை
ஏன் நினைக்க வேண்டும்
எழுடா தம்பி வேஷம் போடு
கூட்டம் கூடி கோஷம் போடு
எலும்புத் துண்டை வீசி யெறி
இலவசம் என்ற வலையை விரி
எப்படியாவது ஓட்டு வாங்கு

அப்புறம் ஆடு தில்லா டாங்கு
கிழவருக் கிங்கே இடம் கிடையாது
கிழக்கு மேற்கு உழக்கில் ஏது
எழுடா தம்பி எழு எழு
முணுக்கு முணுக்கென் றெரியும் விளக்கு - அட
முணுமுணுப்ப தேநம் இயல்பு வழக்கு

*02 -10 -2020*

## 142. பசி....

பனித்துளிக்குப் பசி என்றால் வானத்தையா விழுங்குவது
விழுங்கிவிட்டுப் போகட்டும் - வானம்
நழுவிவிழ, நழுவி விழ
விழுங்கிவிட்டுப் போகட்டும்
கனவுக்குள் கனவாக கணநேரம் தானே
அருந்தி மகிழ்ந்து உடைந்து போகட்டும்
வானம் விரிந்து கொண்டே இருக்கிறது - பூமி
சுழன்று கொண்டே இருக்கிறது

*13 - 10 - 2020*

## 143. இடித்துத் தள்ளு

("Break the wall of illusion" **என்று இன்று நானெழுதி முகநூலில் பதிவு செய்த ஆங்கிலக் கவிதையைப் படித்த நண்பர் சிலர், அதைத் தமிழில் பெயர்த்துத் தரக் கேட்டார்கள். அந்த முயற்சியே இது!)**

மாயச் சுவரை இடித்துத் தள்ளு
- மூச்சுக்
காற்றில் என்னுடன் கலந்து நில்லு
கூட அமர்ந்து தேநீர் பருகு
பழைய கதைகள் பகிர்ந்து கொள்ளு
இதயத் துடிப்பும் இரத்த அழுத்தமும்
உனக்கும் எனக்கும் ஒரே கணக்கு
இருவரும் சமமே என்பதனால்
கவலை இன்னும் எதற்கு?
ஒருவர் மீதொருவர் போர்தொடுத் துள்ளோமா? -
என்னைக்
கொல்ல நீயும் முயன்றதுண்டா
அன்புச் சகோதரா
சொற்போர் என்பது பொழுது போக்கு - நாம்
உள்ளத்துக்குள் தோழர்களே
- எந்த
நூலும், சொல்லும்
நமைப்பிரிக்காது - எந்த
நம்பிக்கையும் அதைச் செய்யாது
பிறப்பால் தாங்கள் இன்னார் என்று
எவரே சொல்ல முடியும் - தம்
பெயரை உடலில் செதுக்கிக் கொண்டு
பிறந்தவர் யாருண்டு -
நாம்
குத்தும் முத்திரை இலச்சினை எல்லாம்
காலத்தில் அழியும்
மூடத் தனத்தை, சண்டையை இன்றே
முற்றும் நிறுத்திவிடு
மூடியிருக்கும் கதவுகளை
உடனே திறந்துவிடு

*26-10-2020*

## 144. முத்துதிர்த்துவிடு

துளித்துளியாய் என்னை வரையும் தூரிகையே
முழுமை அடையும் முன்பே நான்
உயிர்த்துக் கொண்டேனோ
முடிவை நோக்கித்தான் நான்
மெல்ல நகர்கிறேனோ
முதலும் நீயாம் முடிவும் நீயாம்
நடுவில் நானெதற்கு
முடிந்தால் கொஞ்சம் மௌனம் கலைந்து
முத்துதிர்த்துவிடு

*06-11-2020*

## 145. ஒரு வீடு, ஒரு தெரு, ஒரு மனிதன்....

தெருமுனையில் இருக்கிறது வீடென்றார்
தெருத்தெருவாய் அலைகின்றேன் காணவில்லை
நடக்கின்ற நான் வெறும் கூடென்றார்
கூட்டுக்குள் பறவை உண்டா
தெரியவில்லை
எதிரில் வருபவனைக் கேளென்றார்
அருகில் வரட்டும் என்று நிற்கிறேன்
நின்ற பிறகுதான் தெரிகிறது
யாரும்
வரவே இல்லை என்று
- நடக்கத்
தெருவே இல்லை என்று

*08-11-2020*

## 146. நானே ரசிக்கிறேன்

உள்ளே நுழைந்து பார்க்கும் ஆசை
ஓயவில்லையே - இன்னும்
வாயிற் படியைக் கூடக் கடந்து
செல்லவில்லையே
சுவரெல்லாம் எழில் ஓவியங்கள்
கவர்ந்திழுக்குமோ
தரையெல்லாம் பளிங்குக் கற்கள்
தகதகக்குமோ
வேகமாக நடந்து சென்றால்
கால் வழுக்குமோ
ஒவ்வோர் அறையாய்க் கண்டு செல்ல
நேரம் இருக்குமோ
(உள்ளே)

வருவோர்க் கெல்லாம் விருந்தளிக்கும்
வழக்கம் அங்குண்டா
அருந்தக் கிடைக்கும் காய்கனிகள்
வெறும் பொம்மைகளா
தோட்டத்தில் பல வண்ணங்களிலே
வாடா மலர்களா
வண்டுகள் மொய்க்க வருமா அவற்றில்
வாசம் இருக்குமா
(உள்ளே)

என்னைப் போல்தான் எல்லாருமே அங்குப்
பார்வையாளரா
இருப்பவற்றைப் பாதுகாக்கும்
சேவகர்களா
பூஜை அறையில் சிலைகள் உண்டா
விளக்குகள் உண்டா
மந்திரங்கள் கேட்குமா இல்லை
வெற்று மௌனமா

கேள்விகளோடு வாசலிலேயே
தயங்கி நிற்கிறேன் - எதிரே
மாளிகை இல்லை கண்ணாடிதான் உள்ளே
நானே வசிக்கிறேன் - என்னை
நானே ரசிக்கிறேன்

*27-12-2020*

# அகர வரிசை


| | |
|---|---|
| அச்சமில்லை, அச்சமுண்டு! | 192 |
| அணையாத சுடரேற்றுவேன்! | 11 |
| அத்தனையும் நீ | 185 |
| அந்த இன்னொரு கோப்பை! | 144 |
| அந்த நிழலுக்கென்ன அவசரம் | 28 |
| அந்த ரங்க ராட்டினம்! | 181 |
| அந்தக் கிழவர் | 197 |
| அர்த்தம் என்ன அர்த்தம்? | 133 |
| அலங்கார அணிவகுப்பா? | 132 |
| அலைகடலில் சிறுதுளியாய்... | 44 |
| அவன் சொன்ன சொல்...! | 119 |
| அன்னையைப் பாடுவோம் | 156 |
| ஆண்டுக் கணக்கா, யுகக் கணக்கா? | 29 |
| ஆறுதல் இல்லை, ஆற்றுப்படை | 51 |
| இசை, இனிதென்றா சொல்கின்றாய் | 151 |
| இடித்துத் தள்ளு | 200 |
| இந்த மழை போதுமா? | 90 |
| இப்போதா தோன்றியது? | 33 |
| இரண்டறக் கலக்கலாமே! | 148 |
| இன்று நேற்று வந்ததில்லை | 150 |
| இன்னும் எத்தனை அடிகள்? | 69 |
| இன்னும் எழுத ஆசை | 38 |
| இனியும் பொறுமை எதற்கு? | 168 |
| உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு? | 58 |
| உயிரைப் பறிக்கும் உரிமை | 176 |
| உறங்க விடுவாளா? | 143 |
| எங்கள் பாரதி | 146 |
| எங்கிருந்தால் என்ன? | 169 |
| எத்தனை எத்தனை நரேந்திரர்கள்! | 81 |
| எத்தனை எத்தனை பாரதியோ! | 126 |
| எதிர்காலம் | 109 |
| எதையோ கொளுத்தும் தீ இல்லை! | 164 |
| எல்லாம் ஆகும் ஒரு விரிவே! | 64 |
| என் வாழ்வின் மாலை நேரம் | 13 |
| எனக்குத் தேவை, ஒரு வாசகன்! | 174 |
| ஏகாந்தத்தைப் புரிந்துகொள் | 158 |
| ஏடேறத்தான் ஏழு நிமிடம் | 41 |
| ஒசிமாண்டியாஸ் | 68 |
| ஒரு புல்லின் வளைவில்... | 95 |
| ஒரு வீடு, ஒரு தெரு, ஒரு மனிதன்.... | 202 |
| ஒருமுறை செவி கொடு | 166 |
| ஓரிரு நிமிடங்களே | 127 |
| கடல் தேவதையின் பாடல் | 45 |
| கணம்தோறும் கவிதைகள்! | 115 |
| கருணை நடந்தது! | 153 |
| கலங்கரை விளக்கு, குருநாதன் | 154 |
| கல்லானாலும் காளி | 61 |
| கவிஞர், கவிஞர், கவிஞர்களாம்! | 107 |
| கவிதைகள் எனக்குப் போதவில்லை | 40 |
| கள்ளா, நெருஞ்சி முள்ளா? | 116 |
| காடெல்லாம் பாட்டுக் கனல் | |
| காத்திருந்தது வானம் | 159 |
| காதல், காதல், காதல்! | 137 |
| காலச் சக்கரம் சுழல்கிறது | 188 |
| காற்றென்றால் வீச வேண்டும்! | 162 |
| கூட்டில் எது பறவை? | 73 |
| கைகுவித்து வேண்டுகிறேன் | 56 |
| கையூட்டம்மா, கையூட்டு! | 98 |
| கொளுத்திப் போடு குப்பைகளை | 172 |
| சகலகலாவல்லி | 27 |
| சமதளத்தில் சந்திக்கலாமே! | 122 |
| சிறுவெளிச்சம் | 60 |
| சுதந்திரம் | 193 |
| சுருக்கத்தால் வள்ளுவரும்... | 48 |

சுவாசிக்க முடியும் வரை...! 85
சொல் மதிப்புக் கவிஞன்
சொல், சொல், சொல்! 134
சொல்லிவிடு, அந்தச் சொல்! 54
தந்தையாய் நானென்றும் இருந்ததில்லை 123
தமிழ் கொடுத்துக் கேட்கின்றேன் 128
தர்மம் எங்கே? 71
தலைவணங்காதே, தோழி! 183
தனித்து நில்! 113
திருப்பாத தரிசனம் 25
திறந்துவை மனக்கதவை 145
தேடி வருகிறதே கவிதை 190
தேவதை! 72
தோன்றட்டும் மறுமலர்ச்சி 65
நடத்துகிறான் நாடகத்தை! 74
நடந்து போகலாம் வா! 177
நலம் தருகின்ற அன்னையே! 102
நலமெல்லாம் நீயே! 92
நல்லிசைத் தேநீர் 182
நாம் நிரம்பி வழிகிறோம் 75
நாமார்க்கும் பகையல்லோம் 55
நான் கவிஞன் 191
நான் படைத்த உலகம்! 165
நான் வைத்த வெடி....! 89
நானழைக்க வருவாளா? 53
நானும் தமிழன் 110
நானே ரசிக்கிறேன் 203
நானொரு சிற்றோடை! 100
நிலவாய் முளைக்கும் மனோன்மணி 67
நிஜத்துக்கு வேலி இல்லை 77
நீ கடல், நான் புயல்! 180
நீ மட்டுமே 189
நெஞ்சு கொதிக்கிறது 173
பசி.... 199
படுகுழியில் விழுகின்றோம் 178
பாட்டுத் திறத்தாலே... 23
பாடும் நிலா பாலு 196
பாராட்டத் தேவையில்லை 131
பிரதிக்கினைதான் வேண்டும் 142
பின்னால் வந்தது போதும் 161
புதிராகவே இரு! 170
புயலா, புன்சிரிப்பா! 83
புயலாய் வர வேண்டும் 129
புருஷோத்தமன் பதிகம் 62
புறவழகு 39
புன்மையினால் வீழ்ந்தவர்கள் 49
பூகம்பம் ஆகட்டும் பாடல்களே 118
பூத்திரியில் ஏற்றி வைத்த கனலே 140
பொன்மஞ்சள் பூக்கள் 42
போரூர் ராணி 101
ம்...! கவிதை சொல் 12
மண்ணில் விழுந்த மழைத்துளி போல்... 32
மண்ணென்று நினைத்தாயோ மடமகனே! 141
மதுரை மீனாட்சி உமையே 46
மாண்டதிங்கே மானிடத் தீர்வு 155
மாரித்தாய் 57
மின்னற் சுவையும் மெல்லப் புரியும் 175
முத்துதிர்த்துவிடு 201
முற்றுப் புள்ளி எங்கே? 121
மௌனம் கலைந்துவிடு, மரண தேவதையே! 79
யாரிந்த அழகுச் செல்வி 30
யாரும் நமக்குப் பகையில்லை 86
ருத்ரா! ஆ, ருத்ரா! 104
வழித்துணையா, வழிகாட்டியா? 124
வா, சற்று விளையாடலாம் 147
வாசலில் வந்தமர்ந்த வள்ளல்! 36
வாதாபி காத்திருக்கிறேன் 186
வாழ்த்தினால் போதாது, வரவேண்டும் 43
வாள் தருகின்றேன், வாங்கிக் கொள் 96
விடுதலை 82
விடை சொல்லாத மௌனம் 93
விடைகொடுப்பாய் வெண்ணிலாவே 136
விரல் நுனிகளில் தீ! 66

| | |
|---|---|
| விளக்கும் நீ, இலக்கும் நீயே | 111 |
| விளக்கேற்றுங்கள் வீதிகளில் | 87 |
| விளக்கைத் தேடிக் கொண்டிருக்கிறேன் | 139 |
| வீடென்றேன்... | 103 |
| வீரமாம் வீரம் | 50 |
| வெடித்துப் பிறந்தவள் | 34 |
| வெளியை அளக்கும் ஒளியும் நீதான் | 106 |
| வெற்றுச் சொற்களா? | 84 |
| வேட்டைக்கு வேல் கேட்கிறாய்! | 138 |



வானவில் கே.ரவி

## வானவில் கே.ரவியின் படைப்புகள்

### தமிழ் நூல்கள்

- நமக்குத்தொழில் கவிதை (கவிதையியல் கட்டுரைகள்)
- உன்னோடு நான் (முதல் கவிதைத்தொகுப்பு)
- மின்னற்சுவை (பாரதியியல் கட்டுரைகள்)
- சொற்களுக்குள் ஏறிக்கொள் (கட்டுரைத் தொகுப்பு)
- வள்ளுவரின் வாயிலில் (கட்டுரை)
- காற்று வாங்கப் போனேன் (தன் வரலாறு)
- இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு (அறிவியல் நூல்)
- அணையாத சுடரேற்றுவேன் (இரண்டாவது கவிதைத் தொகுப்பு)
- மக்கள் பாடும் பாட்டு (இசைப்பாடல்கள்)

*(மேற்காணும் பட்டியலில், 1 முதல் 5 வரை உள்ள ஐந்து நூல்களும் ஒரே தொகுதியாகக் 'கானல் நீரைக் கடந்து' என்ற தலைப்பில், சமீபத்தில், வெளியிடப்பட்டது)*

### ஆங்கில நூல்கள்

- Justice Versus Natural Justice (Law)
- Law Logic and Liberty (Law)
- Verses of Wisdom (Spiritualism)
- A Spark, A Petal! (A Collection of English Poems and Songs)

புதிய இலக்கு புதிய தடம்
நிவேதிதா பதிப்பகம்